# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 475 | 1996 ஜனவரி 7 | ரூபா 5.00


உள்ளே


■ இருதரப்பும் புதிய பேச்சுவார்த்தை முஸ்தீபுகள் .......... 2
■ பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கம் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் .......... 3
■ ரூஷ்யா: முதலாளித்துவ புனருத்தாரணம் தந்த சீதனம் என்ன? .......... 5
■ முதலாளித்துவ அரசுக்கு எதிராக நேருக்கு நேர் நடாத்தும் போராட்டம் .......... 11
■ வேர்க்கர்ஸ் லீக்கும் சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதமும் .......... 12–13


சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை
– விஜே டயஸ்

# 1997– உலகம் பூராவும் சமூகக் குமுறலின் ஆண்டு எதிர்காலத்துக்கு தயார் செய்வோம்!

1997ம் ஆண்டில் ஏகாதிபத்திய மையங்கள் தொடக்கம் இலங்கை வரையிலான உலகின் சகல நாடுகளிலும் பிரமாண்டமான சமூகக் குமுறல்கள் வெடிக்க உள்ளன. 1996ம் ஆண்டின் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் ஐரோப்பாவிலும் தென்கொரியாவிலும் இலங்கையிலும் வெடித்த வர்க்கப் போராட்டங்கள் 1997ம் ஆண்டின் சமூகக் குமுறலின் நாடியடிப்பைக் காட்டிக் கொண்டுள்ளது. தொழிலாளர் வர்க்கம் இந்த வர்க்கப் போராட்டங்களின் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதோடு தனது வெற்றிக்கு அவசியமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமும் கையுமாக முன்நோக்கி நடைபோடவும் வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி வேண்டுகின்றது.

ஒறுவல உருக்குக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்கள் தனியார்மயத்துக்கு எதிரான பிரச்சாரத்தினை டிசம்பர் மாதத்தில் உக்கிரமாக்கினார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர்களை ஒடுக்கித் தள்ளும் பொருட்டு டிசம்பர் 11ந் திகதி பொலிஸ் தாக்குதலை நடாத்தியதோடு அவர்களுக்கு எதிரான பொலிஸ் வேட்டையையும் முடுக்கிவிட்டது. கூட்டுத்தாபனத்தின் 1300 தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பக் காரணம், தலைவர்களின் துரோகம் காரணமாக வேறு வழியில் ஈடுபட முடியாது போனதேயாகும். டிசம்பர் 12ந் திகதி 2000 தொழிலாளர்கள்- உருக்குக் கூட்டுத்தாபனத் தொழிலாளர்களுடன் வேறு துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களும் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் தனியார்மயத்துக்கு எதிராக போராடும் பிரமாண்டமான அவசியத்தை வெளிக்காட்டி நின்றனர்.

இதற்கிடையே துறைமுகத்தை தனியார்மயமாக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தயாரிப்புக்களுக்கு பலத்த எதிர்ப்புக்காட்டும் பொருட்டு 15000 கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்கள் டிசம்பர் 27 திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தை நடாத்தினர். கொழும்பு துறைமுகத்தின் எலிசபெத் துறையை அபிவிருத்தி செய்யும் சாட்டில் அதை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பீ.அன்ட்.ஓ. என்ற இராட்சத கம்பனிக்கு விற்றுத்தள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கொக்கா கோலா கம்பனியின் தொழிலாளர்கள் இன்று தமது தொழில்களைப் பாதுகாக்கும் முகமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நவம்பர் 27ம் திகதி கடுவெல கொக்கா கோலா கம்பனி இழுத்து மூடப்பட்ட ஒரு நிலைமையினுள் பியகம கொக்கா கோலா கம்பனி ஊழியர்கள் டிசம்பர் 12ம் திகதி தொடக்கம் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். ட்ரான்ஸ்நஷனல் கம்பனியான கொக்கா கோலா முதலாளிகள் நவீன தொழில் நுட்பங்களைப் பாவிப்பதன் மூலம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலைகளில் இருந்து தூக்கி வீசவும் ஒரு சொற்ப தொழிலாளர்களை வைத்துக்கொண்டு அவர்களை மிலேச்சமான முறையில் சுரண்டவும் திட்டமிட்டுள்ளனர்.

இலங்கையில் வர்க்கப் போராட்டம் உக்கிரம் கண்டது கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் ஐரோப்பாவில் நாட்டுக்கு நாடு வர்க்கப் போராட்டம் பற்றிப் படர்ந்து வந்த ஒரு நிலைமையின் கீழேயேயாகும். அமெரிக்க, ஜப்பானிய கம்பனிகளுடன் போட்டியிடும் பேரில் ஐரோப்பிய முதலாளிகள் தமது தொழிலாளர்களின் உரிமைகளைத் தவிடுபொடியாக்க "உலகச் சந்தையில் போட்டியை அதிகரித்தல்" என்ற பேரில் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தாக்குதல்களுக்கு எதிராகவே இவை ஐரோப்பாவில் வெடித்தன.

பிரான்சில் லொறிச் சாரதிகள் நவம்பர் 18ம் திகதியில் இருந்து 12நாட்கள் வேலைநிறுத்தம் செய்ததோடு ஜூப்பே அரசாங்கத்துக்கு பெரும் தாக்குதல் நடாத்தியதன் மூலம் அரைகுறை வெற்றியை ஈட்டிக்கொண்டனர். உண்மையில் அவர்கள் அரசாங்கத்தின் ஓய்வூதியம், சுகாதார வசதிகளை வெட்டும் திட்டத்தை சவாலுக்கு உள்ளாக்கினர். ஜேர்மனியில் 10000 வங்கித் தொழிலாளர்கள் சுகாதார கொடுப்பனவுகள் வெட்டுக்கு இலக்காகுவதை எதிர்த்து நவம்பர் 22ம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். இந்நாட்டின் 11000 இனிப்புக் கைத்தொழிலாளர்கள் நீண்டநாட்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். டிசம்பர் 3ம்திகதி தமது தொழில் உரிமைக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தினை எதிர்த்து 25000 சுகாதாரத் தொழிலாளர்கள் பொன் நகரத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.

இத்தாலியில் 150000 பொறியியல் தொழிலாளர்கள் நவம்பர் 22ம் திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். அவர்கள் தமது சம்பளம், சேவை நிலைமைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தினை முதலாளிமார் முன்வைக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த வேலை நிறுத்தத்தினை ஆரம்பித்தனர். இதே சமயம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் காரணமாக கிரீஸ் ஸ்தம்பித்தது. நவம்பர் 23ம் திகதி ஸ்பானியாவின் தலைநகரான மாட்ரீட்டில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்திய 20000 தொழிலாளர்கள் அந்நாட்டின் அஸ்நார் அரசாங்கத்தின் சம்பளத்தை உறைய வைக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சுவீடன், போர்த்துக்கல், பெல்ஜியம் போன்ற நாடுகளிலும் தொழிலாளர் போராட்டங்கள் இடம்பெற்றன.

தென்கொரியாவில் ஆளும் வர்க்கத்தை அதிரவைக்கும் விதத்தில் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் கடந்த டிசம்பர் 27,28,29ம் திகதிகளில் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டனர். தொழிலாளர்களிடையே உருவாகியுள்ள பதட்டநிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் இன்னும் பிரமாண்டமான போராட்டங்கள் வெடிக்க இடமுண்டு. இந்த வேலைநிறுத்தம் தென்கொரியா அரசாங்கம் தயாரித்துள்ள கொடிய தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக வளர்ச்சி கண்டதாகும்.

இருப்பினும் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் தன்னியல்பான எழுச்சிகள் கிளர்ச்சிக் கட்டங்களை எட்டிப் பிடித்தாலும் அவை சுயமாக வெற்றிக்கோட்டைத் தொட்டுவிடமாட்டா. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்குப் புதிய வேலைத்திட்டமும் புதிய தலைமையும் அவசியம். உலகளாவிய ரீதியில் தொழிலாளர் போராட்டங்களின் படிப்பினைகள் அவைதான். அதனை நாம் கற்றுக் கொண்டு முன்சென்றாக வேண்டும்.

சமீபத்தில் இலங்கையில் இடம்பெற்ற உருக்குத் தொழிலாளர் போராட்ட படிப்பினைகளை ஆராய்ந்து பார்ப்போம். அரசாங்கம் உருக்குக் கூட்டுத்தாபனத்தை ஹன்ஜூன் என்ற தென்கொரிய கம்பனிக்கு விற்றுத்தள்ளியது. டிசம்பர் 10ம் திகதி பக்டரியைப் பொறுப்பேற்க வந்த கொரியன் கம்பனிக்காரர்களுக்கும் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபன பெரும்புள்ளிகளுக்கும் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். மறுதினம் கொரியன் கம்பனிகாரர்கள் அரசாங்கத்தின் உயர் புள்ளிகளுடனும் பொலிஸ் படையுடனும் பக்டரி நிலத்துக்கு வந்தனர். தொழிலாளர்கள் எதிர்ப்புக் காட்டியது தான் தாமதம் பொலிஸ் தாக்குதல்கள் ஆரம்பமாகின. சுமார் ஆயிரம் பொலிசார் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். பக்டரிக்குள் சென்ற தொழிலாளர்கள் பத்துப் பேருக்கு மேல் கூடுவதும் பேசுவதும் தடைசெய்யப்பட்டது. தொழிலாளர்கள் உருக்குக் கூட்டுத்தாபனம் விற்பனையாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலை செய்ய மறுத்தனர். இந்நிலையில் வேலைத்தளம் 750 பொலிசாரால் கைதான ஒரு முகாமாக மாறியது.

உருக்குத் தொழிலாளர்களுக்கு எதிரான வேட்டை, பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் உயர்மட்டத்தில் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டதாகும். பொலிஸ் கெடுபிடிகளுக்கு பக்டரி உள்ளாகி இருக்கும் போது தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யவும் வேலை நேரத்தை வேண்டிய விதத்தில் மாற்றவும் வேலைநிறுத்தம் இடம்பெறும் தருணங்களில் "தற்காலிகமாக" தொழிலாளர்களை சேவைக்குத் திரட்டவும் இந்த சட்டங்கள் முதலாளித்துவக் கம்பனிகளுக்கு உரிமைகளை வழங்குவதோடு, இரகசியப் பொலிசார் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை ஆயும் அதிகாரங்களையும் வழங்கியுள்ளது.

அக்டோபரின் கடைப்பகுதியிலும் நவம்பரின் முற்பகுதியிலும் இந்தியாவின் தபால், தொலைத் தொடர்பு , வருமான வரி திணைக்களங்களைச் சேர்ந்த சுமார் 30 இலட்சம் தொழிலாளர்கள் தனியார்மயத்துக்கு எதிராகவும் மற்றும் தொழில் உரிமைகளைப் பேணவும் போராட்டங்களில் குதித்தனர்.

உலகளாவிய ரீதியில் தோன்றிய இந்தப் போராட்டங்கள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் அவற்றின் கைக்கூலி அரசாங்கங்களும் தொடுக்கும் தாக்குதல்களை தோற்கடிக்க தொழிலாளர் வர்க்கத்துக்கு இருந்துவரும் பிரமாண்டமான அவசியத்தைக் காட்டிக் கொண்டுள்ளது. 1997ம் ஆண்டில் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை தவிடு பொடியாக்குவதற்காக இன்னும் படுகேவலமான தாக்குதல்கைளைத் தொடுக்க ஆயத்தமாகி வருவதோடு அதன்மூலம் பிரமாண்டமான சமூகக் குமுறல்களையும் தூண்டிவிட்டுள்ளன. பிரித்தானிய தொழிற் கட்சி அரசாங்கத்தின் ஒரு தலைவராக இருந்து படுகேவலமான காட்டிக்கொடுப்புக்கள் காரணமாக ஆளும் வர்க்கத்திடம் இருந்து பிரபுக்கள் சபை அங்கத்துவத்தைப் பெற்ற டெனிஸ் ஹீலி "அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்கள் வீதி கிளர்ச்சிகள் ஆக மாறலாம்" எனக் கூறியுள்ளார். அவர் வாந்தி எடுத்துள்ளது என்ன? உண்மையில் ஹீலி ஆளும் வர்க்கத்தின் பீதியை வாந்தி எடுத்துள்ளார்.

டிசம்பர் 10ம் திகதி சுதந்திர வர்த்தக வலய கொரியா-இலங்கை தொழில்நுட்ப, கைத்தொழில் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய ஆத்திரமூட்டும் பேச்சு தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான ஒரு யுத்தப் பிரகடனமாகும். "அழிவுநிறைந்த பிரச்சாரங் களையும் உபாயங்களையும் நிறுத்துமாறு" பொதுமக்களை மிரட்டிய அவள், "பொதுமக்கள் இவற்றைத் தொடர்ந்தும் சகித்துக் கொள்ளமாட்டார்கள்" எனக் கூறினாள். கொரியா முன்னேற்றம் கண்டது தொழிலாளர்களின் தியாகத்தினால் எனக் கூறிய ஜனாதிபதி அந்த தியாகத்தினைப் பெற்றுக்கொண்ட விதத்தினையும் பின்வருமாறு விபரித்தார். "அவர்களின் அபிவிருத்திக்கு காரணம் ஒழுக்க நெறியாகும். எந்த ஒரு தொழிலாளியும் எதிர்ப்புக் காட்டினால் அவர் அல்லது அவள் சிறையில் தள்ளப்படுவர்."

இது இலங்கையினுள் தாம் செய்யப் போகும் விடயங்களைப் பற்றிய ஒரு எச்சரிக்கையாகும். உருக்குக் கூட்டுத்தாபனத்தினுள் சரியாக இடம்பெற்றது இதுவேயாகும். சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு செய்ததும் இதுதான்.

உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தின் கீழ் இலங்கையில் அலையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு சிபார்சு செய்து கொண்டுள்ளது என்ன? வளங்களை


5ம் பக்கம் பார்க்க




கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ள செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்யும் போராட்டத்தின் ஒரு அங்கமாக சோசலிச சமத்துவக் கட்சி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரில் டிசம்பர் 16ம் திகதி நடாத்திய மறியல் போராட்டம்

இனவாத யுத்தம் வேண்டாம்!

சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொதுஜன முன்னணியின் இனவாத யுத்தத்துக்கும் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளுக்கும் மத்தியில்

# இருதரப்பும் புதிய பேச்சுவார்த்தை முஸ்தீபுகள்

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புதிய பேச்சுவார்த்தைகளுக்கான முஸ்தீபுகள் இருதரப்பிலும் ஆரம்பமாகி உள்ளதோடு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினாலும் விடுதல்லைப் புலிகளின் அடக்குமுறைகளாலும் நசிந்து போய் அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் நிலைமையோ பெரிதும் பரிதாபமாகியுள்ளது. இந்த நிலைமையில் இருந்து தலையெடுக்கும் பொருட்டு போராட்டத்துக்கு முன்வருமாறு தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை சோசலிச சமத்துவக் கட்சி வேண்டுகின்றது. தென்மாகாணங்களில் சிங்கள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் வடக்கு-கிழக்கு மாகாண வர்க்க சகோதரர்களைக் காக்கவும் கடைகெட்ட முதலாளிததுவ ஆட்சிக்கு எதிராக ஒன்றிணையவும் முன்வரவேண்டும் என நாம் வேண்டுகின்றோம்.

ஏகாதிபத்திய மையங்களில் இருந்து தொழிற்பட்டுவரும் 'இன்டர்நஷனல் அலேர்ட்' அமைப்பின் பொதுச் செயலாளரான கலாநிதி. குமார் ரூபசிங்க தற்சமயம் இலங்கைக்கு வருகைதந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த முயன்று வருகின்றார். "இணக்கத்துக்கான ஒரு அமைப்பு அல்லாத இன்டர்நஷனல் அலேர்ட் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொணரவும் இருதரப்புக்கும் அதற்கான நடைமுறை ஒத்துழைப்பை வழங்கவும் விரும்புகின்றது" என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குமார் ரூபசிங்க ஜனாதிபதியுடன் நீண்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடுவராகச் செயற்பட தாம் ஆயத்தமாக இருப்பதாக சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவித்திருந்தது. பிரித்தானிய ஆட்சியாளர்களின் தலையீடு சம்பந்தமாக அரசாங்கம் தனது இணக்கத்தை அது சம்பந்தமாகக் கடைப்பிடித்த மௌனத்தின் மூலம் தெரிவித்துக்கொண்ட அதேவேளையில் விடுதலைப் புலிகள் பிரித்தானிய பிரேரணைக்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கையின் முதலாளிகளில் ஒரு சாராரும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இந்த இணக்கத்தை உருவாக்குவதற்கு தமது நெருக்குவாரங்களை முடிந்தமட்டும் கையாண்டு வருகின்றன. சமீபத்தில் இந்தியாவில் புரொன்ட் லைன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி "மூன்றாம் தரப்பினரின்" தலையீட்டின் கீழ் பேச்சுவார்த்தைகளுக்கு இடமிருப்பதாகத் தெரிவித்துள்ளார். பொதுஜன முன்னணி அரசாங்கம் , விடுதலைப் புலிகள் என்ற இரு சாராரும் தாம் பலம் வாய்ந்த இடத்தில் நின்றுகொண்டு பேரம் பேச வேண்டும் என நினைப்பது பேச்சுவார்த்தைகள் இழுபட்டுச் செல்வதற்கான ஒரு காரணமாகும்.

சமீபத்தில் கௌதமாலாவின் தேசியவாத கிளர்ச்சிக்காரர்கள் அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களுடனும் ரீமோர் தேசியவாத கிளர்ச்சிக்காரர்கள் இந்தோனேசிய இராணு ஆட்சியாளர்களுடனும் கைகோர்ததுக் கொண்டமையை இலங்கை அரசாங்கத்தின் முதலாளித்தவ தொடர்புச் சாதனங்கள் தூக்கிப் பிடித்துக் காட்டிவந்தன. இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் பற்றிய நம்பிக்கைகளுக்கு எண்ணெய் வார்த்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாண தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் யுத்தப் பேரழிவுகளில் இருந்து விடுபடவேண்டிய அவசியத்துக்கு உள்ளாகி உள்ளனர். தென்மாகாணங்களில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் தொழில், நலன்புரிச் சேவைகள், வாழ்க்கைத் தரங்களை ஒழுத்துக் கட்டும் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமது உரிமைகளை காக்கும் பொருட்டு போராட்டங்களில் குதித்து வருகின்றனர். உருவான இராணுவத் தோல்வி நிலைமைக்குள் தமிழ் மக்களை ஒடுக்குவதை விடுதலைப் புலிகள் உக்கிரமாக்கி இருப்பதோடு அந்த அமைப்புக்கு எதிரான மக்கள் எதிர்ப்பும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

யுத்தத்தில் இருந்து உயிர்பிழைக்க இடத்துக்கு இடம் அகதிகளாகி இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வவுனியா அகதிகள் முகாம்களில் நசிந்துவருகின்றார்கள். இவர்களில் பலர் வவுனியாவுக்கு வந்தது ஒன்றில் தென் மாகாணங்களுக்கு அல்லது யாழ்ப்பாண மாவட்டத்தின் தமது இருப்பிடங்களுக்கு திரும்பலாம் என்ற எதிர்பார்ப்புடன் ஆகும். ஆனால் இன்று அவர்கள் வவுனியாவில் முட்கம்பிகளால் சுற்றி அடைக்கப்பட்ட முகாம்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாகி உள்ளனர். வவுனியாவில் உள்ள தமது உறவினர்களைப் பார்க்கத் தன்னும் அவர்கள் முகாமுக்கு வெளியே வர முடியாத நிலைமை அங்கு நிலவுகின்றது. இந்நாட்களில் நிலவும் குளிர் காலநிலை காரணமாக அவர்கள் முகம் கொடுக்கும் துயரங்களும் அவலங்களும் சொல்லும் தரமன்று. அவர்களின் பாவனைக்கு எனக் கிடைக்கும் நீர் அசுத்த நீராக உள்ளது. அகதிகளில் பலர் வயிற்றோட்டம் , காய்ச்சல் ,மலேரியா நோய்க்கு ஆட்பட்டுள்ளனர். இதைவிட ஒரு மோசமான நிலைமையில் வன்னிக் காட்டுப் பகுதியில் தங்கி வாழ்க்கையை ஓட்டத் தள்ளப்பட்டுள்ள இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்ளனர்.

யாழ்.மாவட்ட வசிப்பிடங்களுக்குத் திரும்பிய மக்களும் அங்கு நிலவும் நிலைமை காரணமாக அங்கிருந்து வெளியேற எடுக்கும் முயற்சிகள் அதிகரித்து வருகின்றது. நவம்பர் மாதம் 15ம் திகதி வரையும் யாழ்ப்பாணத்தில் இருந்து விமானத்தினாலும் கப்பற் சேவையாலும் வெளியேறியுள்ள மக்களின் எண்ணிக்கை 9996. இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சென்றோர் எண்ணிக்கை 8414. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் அறிகையின்படி 1990-1995 வரை இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேறிய மக்களின் எண்ணிக்கை 8,18,556. இவர்களில் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியோர் எண்ணிக்கை நூற்றுக்கு 30வீதம்-2,45,426.

இராணுவ நிர்வாகத்துக்கு உள்ளாகியுள்ள வடமாகாண பகுதிகளில் கைதுசெய்தல்கள், காணாமற்போதல், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளதோடு கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் படுகொலைகள் பல இடம்பெற்றுள்ளன. நவம்பர் 25ம் திகதி மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் உள்ள கிரானில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக கந்தையா பத்மநாதன்(45), மொகைதீன் பாவா(22) எஸ். செல்லதம்பி ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். விவேகானந்த வித்தாயாலயத்தின் ஆசிரியையான எம்.யோகேஸ்வரி கடும் காயங்களுக்கு உள்ளாகி உள்ளார். இன்னும் பல மாணவர்களும் ஆசிரியர்களும் இந்த இராணுவத் தாக்குதல்களால் காயம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையே திருமலை மாவட்டத்தில் இனவாத பிரச்சாரம் உக்கிரம் கண்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்கு எனக் கூறி லிங்கநகர் தமிழ் மக்களின் காணிகள் இரா[illegible] சுவீகரிக்கப்ப[illegible] இதனால் தமிழ் மக்கள் வசிப்பிடங்களை இழந்து போயுள்ளனர். இந்த இனவாத தாக்குதல்களை எதிர்த்து லிங்கநகர் மக்கள் டிசம்பர் 7ம் திகதி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இதேசமயம் திருமலை நகரசபை சந்தை குத்தகை ஒரு தமிழருக்கு கிடைத்ததையிட்டும அப்பகுதி சிங்கள கடைக்காரர்களும் கொழும்பு முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இனவாத பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக இப்பகுதி இராணுவ அதிகாரி நடந்துகொண்டுள்ள விதம் அம்பலமாகியுள்ளது. இந்த குத்தகை ஒரு தமிழருக்கு வழங்கப்பட்டது தொடர்பாக திருமலை நகரசபைத் தலைவர் பீ.சூரியமூர்த்தியை அழைத்த இராணுவ பிரிகேடியர் .பீ.குலதுங்க டென்டர் இரத்துச் செய்யப்படவேண்டும் என உத்தரவிட்டுள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நகரசபைத் தலைவர் சிவில் விடயங்களில் தலையிட இராணுவத்துக்கு அதிகாரம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்த இராணுவ உத்தரவு இரத்துச் செய்யப்படாவிட்டால் தாம் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்யப் போவதாக சூரியமூர்த்தி ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சகல தாக்குதல்களையும் தமிழ் மக்கள் மீது திணித்துக்கொண்டு இந்த ஆண்டில் அதிகாரப் பரவலாக்கல் மூலம் அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்டப் போவதாக பிரச்சாரம் செய்து கொள்கின்றது. இது வெறும் மோசடியாகும். அரசாங்கம் ஒன்றில் [illegible]களின் பக்கபலததுடன் [illegible] புலிகளுடனான சமரசத்தின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் தெற்கிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பிற்போக்கு சக்திகளை அணிதிரட்ட முயற்சிக்கின்றது. அல்லது இராணுவ அதிகாரத்தின் மூலம் விடுதலைப் புலிகளை நசுக்கி நாடுபூராவும் இராணுவ-பொலிஸ் ஒடுக்குமுறை ஆட்சியை திணிக்க பார்க்கின்றது.

ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி மூலோபாயத்துக்கு எதிராக சிங்கள-தமிழ் பேசும் மக்கள் சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டுவது யுத்தத்துக்கு முடிவுகட்டுவதற்கும் சமாதானத்தை உருவாக்குவதற்குமான ஒரே வழியாகும. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலம் மட்டுமே ஊர்ஜிதம் செய்ய முடியும்.

கடந்த வருட இறுதியில் விடுமுறைக்காக இந்திய விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதியிடம் இந்திய பிரதமர் பொதுஜன முன்னணி அரசாங்க விதிமுறைகளுக்கு "பூரண ஆதரவை" தெரிவித்தார். இது மீண்டும் ஒரு தடவை பிராந்திய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக முதலாளி வர்க்கங்களின் அணிதிரள்வை காட்டிக் கொண்டுள்ளது. வடக்கு-கிழக்கிலும் தெற்கிலும் சிங்களம்-தமிழ் மொழி பேசும் மக்கள் பிற்போக்கு ஆட்சிகளில் இருந்து தலையெடுப்பதற்காகச் செய்யும் போராட்டம் இந்தியத் தொழிலாளர்களின் போராட்டத்துடன் இணைந்து கொண்டுள்ளதைக் காட்டியுள்ளது.

## தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!



நோன்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் பொதுச் செயலாளருமான தோழர்.கீர்த்தி பாலசூரிய மறைந்து டிசம்பர் 18ம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

கீர்த்தியின் மறைவை நினைவுகூரும் பொருட்டு சோசலிச சமத்துவக் கட்சி பொரளை-கனத்தையில் உள்ள அவரின் நினைவுத் தூபிக்கு மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியது. டிசம்பர் 18ம் திகதி மாலை நடைபெற்ற இந்த அஞ்சலி செலுத்தும் நிகழ்வுக்கு தோழர் .கீர்த்தி பாலசூரியவின் துணைவியும் அவரின் குடும்பத்தவர்களும் சக அரசியல் சிந்தனையாளர்களும் வருகை தந்திருந்தனர். கீர்த்தியின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் புரட்சிக் கட்சியாக- சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யப்பட்ட ஒரு தருணத்தில் நடைபெறுவது அரசியல், வரலாற்றுச் சிறப்பு முக்கியத்துவம் மிக்க ஒரு நிகழ்வு என கட்சியின் பொதுச் செயலாளர் தோழர்.விஜே டயஸ் குறிப்பிட்டார்.

தோழர் .கீர்த்தி பாலசூரியவின் மறைவின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுக் கூட்டம் கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் டிசம்பர் 21ம் திகதி நடைபெற்றது. சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் டபிள்யூ.ஏ. சுனில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேசிய கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தோழி.விலானி பீரிஸ் சோ.ச.க. முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை 1968ல் அமைத்த வேளையில் கீர்த்தி பாலசூரிய அன்று தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் தலைநீட்டியிருந்த சகல வகையறாக்களையும் சேர்ந்த திரிபுவாதங்களுக்கும் எதிரான போராட்டத்தினை அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் முன்னெடுப்பதில் பெரிதும் கண்டிப்பாக இருந்ததாகக் குறிப்பிட்டார்.

சமசமாஜக் கட்சியின் 1964 மாபெரும் காட்டிக் கொடுப்பின் பெறுபேறாகத் தலைநீட்டிய குட்டிமுதலாளித்துவ போக்குக்களை சந்தியில் நிறுத்துவதற்கு இந்த அனைத்துலகவாதத்தினை கீர்த்தி பாலசூரிய கட்சிக் காரியாளர்கள் இடையேயும் தொழிலாளர் வர்க்கத்தின் இடையேயும் வலியுறுத்தியதாகக் குறிப்பிட்ட அவர், இந்த விதத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையில் உலக புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்ததாக மேலும் குறிப்பிட்டார்.

1985ல் இடம்பெற்ற பிளவு உலக முன்னோக்கினை அபிவிருத்தி செய்வதற்கான பணிக்கு அத்திவாரமிட்டதாகக் குறிப்பிட்ட விலானி, பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி திரிபுவாதிகளுக்கு எதிராக அமெரிக்க வேர்க்கர்ல் லீக்கின் தோழர்.டேவிட் நோர்த் ஆரம்பித்துவைத்த போராட்டத்தில் கீர்த்தியும் இணைந்து கொண்டதாகவும், அதன் மூலம் பிளவில் தலைமைப் பாத்திரம் வகித்ததாகவும் கூறினார்.

பு.க.க.க்கு அத்திவாரமிடப்பட்ட வேளையில் 1964 மாபெரும் காட்டிக்கொடுப்புக்கு எதிராகத் திரண்ட தொழிலாளர், இளைஞர்களுக்கு முன்னோக்கு வழங்குவதிலும் அணிதிரட்டுவதிலும் அனைத்துலகக் குழு வழங்கிய முன்னணிப் பாத்திரத்தினை சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் .விஜே டயஸ் நினைவு கூர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்பட்ட செல்லையா இராஜ்குமாரை சந்திக்க சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவருக்கு தடை


சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவரான செல்லையா இராஜ்குமாரை 1996 ஜூன் 14ல் இருந்து 190 நாட்கள் அரலகங்வில பொலிசில் தடுத்து வைத்திருந்ததன் பின்னர் அவரை டிசம்பர் 7ம் திகதி பண்டாரவளை பிந்தினுவ புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்க பொதுஜன முன்னணி அரசாங்கம நடவடிக்கை எடுத்துள்ளது.

அரலகங்விலவில் 80 சதுர அடி கூட்டினுள் இன்னும் 10 கைதிகளுடன் பொலிசில் சிறை வைக்கப்பட்டிருந்த இராஜ்குமார் பொல் அடிக்கும் கால் உதைக்கும் உள்ளானதோடு அவரின் மீசை, அந்தரங்க உறுப்பு உரோமங்கள் பொலிசாரால் ஒத்தி இழுத்தெறியப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டன.

டிசம்பர் 12ம் திகதி சோசலிச சமத்துவக் கட்சி புனர்வாழ்வு ஆணையாளருக்கு எழுதிய கடிதத்துக்கு அவர் அனுப்பிய பதிலில் இராஜ்குமார் பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் ஆணைப்படி புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இருந்து இராஜ்குமாரை கைது செய்து சித்திரவதை செய்யவும், தாக்கவும் முதலாளித்துவ அரச யந்திரத்தின் உயர் மட்டத்திலேயே தீர்மானம் செய்யப்பட்டது என்பதும் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படையணியான சோசலிச சமத்துவக் கட்சிக்கு எதிராகவே இத்தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்பதும் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளன.

இராஜ்குமார் தாம் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் எனவும் தமக்கு விடுதலைப் புலிகளுடனோ அல்லது பயங்கரவாதிகளுடனோ எதுவிதமான தொடர்பும் கிடையாது எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார். அத்தோடு தமக்கு எதிராக ஏதும் குற்றச்சாட்டு இருப்பின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருமாறும் அவர் கேட்டுவந்துள்ளார். எனினும் இச்சவாலை ஏற்கப் பயந்த முதலாளித்துவ அரச இயந்திரம் அவரை புனர்வாழ்வு முகாம் எனப்படும் முகாமுக்கு அனுப்பியதன் மூலம் தனது பயந்தாங்கொள்ளித்தனத்தைக் காட்டிக்கொண்டுள்ளது.



செல்லையா ராஜ்குமார்.

1971ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கடந்த 17 ஆண்டுகளாக யூ.என்.பி. அரசாங்கத்தினால் பலப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு முகாம் என்ற மரண பயமுறுத்தல், சித்திரவதை நிறைந்த இம்முகாம்களை மனிதர்களின் தைரியத்தை சிதறடித்து அவர்களை ஆளும் வர்க்கத்தின் ஏஜன்தாக மாற்ற மூளைச் சலவை செய்யும் நடவடிக்கையாகும் என நாம் ஏற்கனவே அம்பலப்படுத்தி வந்துள்ளோம்.

செல்லையா இராஜ்குமாரை பிந்துனுவவ புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பியதன் மூலம் அவருக்கும் கட்சிக்கும் கிடைத்த நடைமுறை அனுபவம் மீண்டும் உறுதிப்பட்டுள்ளது.

1996 டிசம்பர் 22ல் அவரை முகாமில சந்திக்கச் சென்ற சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இருவர் அவரைப் பார்வையிடாவண்ணம் தடுக்கப்பட்டனர். மறுநாள் அவர்கள் கட்சியின் பிராந்தியக் கிளை கடிதத்துடன் சென்றபோது அங்கு முன்னொரு போதும் இல்லாத ஒரு ஆயுதபாணி பொலிஸ் காவலரண் எழுப்பப்பட்டுள்ளதைக் கண்டனர். ஆனால் அவரைப் பார்வையிட அங்கு சென்ற இராஜ்குமாரின் மனைவி ஜெயசிங்கம் விஜிதா இம்முகாமுள் சில தினங்கள் தங்கிச் செல்ல இடம் அளிக்கலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது. இந்த ஆலோசனையை முகாம் பிரதம அதிகாரியான கப்டன் அபேரத்ன வழங்கியுள்ளார்.

இராணுவ, பொலிஸ் படையினரின் நிஜ தன்மையை நன்கறிந்த இராஜ்குமார் இதனை முற்றாக நிராகரித்ததினால் அந்த இராணுவ -பொலிஸ் சதி நிறைவேறவில்லை. அத்தோடு இராஜ்குமார் தனது கட்சியான சோ.ச.க.அங்கத்தவரைத் தவிர வேறு எவரையும் தம்மைப் பார்வையிட அனுப்ப வேண்டாம் எனவும் சோ.ச.க.அங்கத்தவர் தம்மைச் சந்தித்துக் கதைக்க இடமளிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேசமயம் இராஜ்குமார் கைது செய்யப்பட்டதற்கு எதிராக அவரின் மனைவி விஜிதாவால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு 1997 ஜனவரி 15ல் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த புனர்வாழ்வு முகாம் சிறை வாழ்க்கை எட்டு மாதங்கள் எனத் தெரியவருகின்றது.

இதுவரைகாலமும் தமது அரசியல் சக சிந்தனையாளர்களுடன் பேசுவதற்கு இருந்துவந்த உரிமையையும் பறித்து, சித்திரவதை முகாமுக்குள் வைத்திருப்பதற்கு எதிராக இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் தனது எதிர்ப்பை பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு காட்ட வேண்டும். சட்டவிரோதமாக சிறைக்குள் தள்ளப்பட்டுள்ள இளம் சோசலிஸ்ட்டை விடுதலை செய்யத் தொழிலாளர் வர்க்கம் அணிதிரள வேண்டும்.

# பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கம் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 1997 ஜனவரி 19ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டன் நகரசபை மண்டபத்தில் நடைபெற உள்ளது. இத்தொழிற்சங்கம் சோசலிச சமத்துவக் கட்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. (முன்னர் புட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) தொழிலாளர் வர்க்கம் எதிர்கொண்டுள்ள பாரிய பிரச்சினைகளை தீர்ப்பது பற்றியும் அதற்கான வேலைத்திட்டம் பற்றியும் தோட்டத் துறையிலும் ஏனைய துறைகளிலும் உருவாகியுள்ள பிரச்சினைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் பிரச்சாரம் தொடுப்பது பற்றியும் இந்த மாநாடு விவாதிக்கும்

கடந்த இரண்டு வருடங்களுள் பெ.கை.தொ.ச.கிளைகள் தோட்டத் துறையிலும் வேறு பல இடங்களிலும் அமைக்கப்பட்டன. அட்டன், பென்மூர், தலாவாக்கலை, சென்ட்கூம்ப்ஸ், பண்டாரவளை. குருவிட்ட போன்ற தோட்டங்களிலும் இக்கிளைகள் அமைக்கப்பட்டன. கொழும்பு ஆர்.ஆர்.பிரின்டர்ஸ், காலியில் லீலா ஹோட்டல் என்பவற்றிலும் தொழிலாளர் இக்கிளைகளை அமைத்துக் கொண்டனர்.

சில கிளைகள் இருந்த போதிலும் அங்கத்தவர் எண்ணிக்கை சொற்பமாக இருந்த போதிலும் இத்தொழிற்சங்கத் தாக்கம் ஏனையவற்றைக் காட்டிலும் பரந்துபட்டது. இது இவ்வாண்டு ஏப்பிரல் மாத இறுதியில் சம்பளக் கோரிக்கையின் அடிப்படையில் வெடித்த தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் போது தெளிவாகியது.

தொழிலாளர்களிடையே தனியார்மயமாக்கலுக்கு எதிராகவும் வாழ்க்கைத் தர வெட்டுக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்த பொழுது இ.தொ.கா. தலைமைகள் வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்ததும் ஏனைய தொழிற்சங்கங்கள் அதற்கு ஆதரவாக அதில் கலந்து கொண்டதையும் நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம் தொழிலாளரை அடக்கி கீழ்ப்படுத்தி வைப்பதேயாகும். வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட அநேக தொழிற்சங்கங்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் கொடுக்கப்பட்டு இருக்கவில்லை. எனினும் பெ.தோ.கை.தொ.ச. அட்டன் பென்மூர் தோட்டம் போன்ற இடங்களில் தொழிலாளாரை போராட்டத்தில் அமைப்பு ரீதியில் தயார் செய்தது. கூட்டம், மறியல், ஊர்வலம் ஆகியவற்றை நடாத்தியது. அவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் அவர்களிடம் சமர்ப்பித்தது. வெலிமடை, அலகொல்ல பண்டாரவளை குருந்தே தோட்டங்களில் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியது பெருந்தோட்டக்கைத்தொழில் தொழிலாளர் சங்கமும், சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான பு.க.க.வும் மேற்கொண்ட தலையீட்டினாலேயேயாகும். இவை துண்டுப் பிரசுரங்களை ஆயிரக்கணக்கில் அச்சடித்து தொழிலாளர்களிடையே விநியோகித்தன.

இதைத் தொடர்ந்து இ.தொ.கா. யூ.என்.பி. தொழிற்சங்கங்கள் தொழிளாளரது சம்பளத்தை வெட்ட தோட்ட நிர்வாகங்களுடன் கூட்டு ஒப்பந்தம்செய்து கொண்ட நடவடிக்கையை எதிர்த்து போராட்டம் வெடித்தது. இரண்டு இலட்சமர் தொழிலாளர்களுக்கும அதிகமானோர் கலந்துகொண்ட இந்த வேலை நிறுத்தத்திலும் பெ.கை.தொ.ச. பங்குகொண்டது. அது அட்டன், பண்டாரவளை, வெலிமடை பகுதிகளில் மிகமுக்கியமான தொழிற்பாட்டுடன் பங்கெடுத்தது.

இதிலிருந்து தொழிலாளர் வர்க்கம் புரட்சிகரப் போராட்டங்களுக்கு யதார்த்தமான முறையில் தள்ளப்பட்டுள்ள விதமும் தொழிலாளர் வர்க்க உரிமைகளைக் காக்கும் முகமாக பெ.கை.தொ.ச. சமர்ப்பித்துள்ள வேலைத் திட்டத்தின்பால் தொழிலாளர் ஈர்க்கப்[illegible]தையும் காணலாம். இதனால் தோட்டத் தொழிலாளர் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் குழு போன்றவற்றில் இருந்து விலகிச் சென்று கொண்டுள்ளனர்.

ஆர்.ஆர்.பிரின்டர்ஸ், காலி லீலா ஹோட்டல் தொழிலாளர்கள் தோட்டத் துறையில் சோ.ச.க. தலையீட்டின் கீழ் இந்த தொழிற்சங்கங்கள் தொடுத்த போராட்டத்தில் உருவான நம்பிக்கையின் காரணத்தினால் பெ.கை.தொ.ச. கிளைகளை தாமும் அமைத்துக் கொள்ள முன்வந்துள்ளனர்.

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகள் முதலாளித்துவ முகாமுக்குள் தள்ளப்பட்டுள்ளன. இக்கட்சிகள் இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி என்பவற்றோடு தொழிலாளர்களின் ஆகக் குறைந்த பட்சக் கோரிக்கைகளைக் கூட முன்வைக்கவில்லை. அவை அனைத்தும் தொழிலாளர்களின் உரிமைகளை மீண்டும் பறித்தெடுக்கும் இலங்கை, வெளிநாட்டு முதலாளிகளுக்கு துணைபோகும் கையாட்களாகவே இருந்து கொண்டுள்ளன. இச்சகல அமைப்புக்களும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர செயற்பட்ட பங்காளராகவே உள்ளன.

இ.தொ.கா.-யூ.என்.பி. தொழிற்சங்கங்கள் கடந்த காலங்களில் தோட்டத் தொழிலாளாருக்கு வழங்கப்பட்டு வந்ச சம்பளப் பிரகாரம் வழங்க இருந்த கொடுப்பனவுக்குப் பதிலாக நாட் கூலியில் ரூபா.1.24 வெட்டப்படும் விதத்தில் தோட்டக் கம்பனிகளுடன் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இப்போது இ.தொ.கா. தோட்ட இலாபத்தில் 10 வீதம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனக் கோருகின்றது. கடந்த காலத்தில் தொழிலாளருக்கு வழங்கப் பட இருந்த சம்பள அதிகரிப்புக்குச் சார்பாக போராடாது விட்டு விட்டு இப்போது இந்த கோரிக்கையை முன் வைப்பதன் பின்னால் உள்ள சதி என்ன? இலாபம் ஈட்டித் தரும் வகையில் தொழிலாளருக்குப் பங்கு கிடைக்கும் என்று மோசம் செய்து தொழிலாளர்களை எஜமானர்களின் வேலைத் துரிதப் படுத்தல் வலையில் மாட்டுவதே திட்டம்.

தோட்டத் துறையைப் பொறுத்தமட்டில் தனியார்மயமாக்கலின் கீழ் நஷ்டமடையும் தோட்டங்களை மூடி விடுதல். தொழிலாளரை அதிக அளவில் வேலைநீக்கம் செய்தல், சம்பள வெட்டு, வேலைத் துரிதப்படுத்தல் என்பன முதலாளித்துவ வர்க்கத்தின் திட்டங்களாக உள்ளன. தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. தோட்டங்களில் வேலையில்லாப் பிரச்சினை வெடித்துள்ளது. தொழிலாளருக்கு எதிராக அரச அடக்குமுறை இனவாதத்தை தூண்டுவது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தொழிலாளர் மீண்டும் மீண்டும் போராட்டங்களுக்கு தள்ளப்படும் நிலையில் உருவாகும் இந்த தாக்குதலை எதிர்த்து போராடும் அவசியம் இன்று இருந்துகொண்டுள்ளது. எனினும் அவர்களுக்குத் தக்க வேலைத்திட்டமும் தலைமையும் கிடையாது.சோசலிச சமத்துவக் கட்சியின் கீழ் பெ.கை.தொ.ச. இதற்கான தலைமையையும் வேலைத் திட்டத்தையும் சிருஷ்டிக்கவே போராடுகின்றது.

பெ.கை.தொ.ச. ஏனைய தொழிற்சங்கங்களை ஒத்த பாணியிலான ஒரு தொழிற்சங்கமல்ல. இது அது ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்தே தெளிவாகியுள்ளது. இலங்கையிலும் அனைத்துலகிலும் தொழிற்சங்கங்கள் இன்றைய உலக நிலைமையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களுக்கு மத்தியில் வங்குரோத்தடைந்துள்ளன. இந்த தொழிற்சங்கங்கள் அவற்றின் பெயர்களுக்கு ஒத்த முறையில் வேலைத் தலங்களுக்குள்ளும் அந்தந்தப் பிரிவுகளுக்கும் உரிய நாடுகளுக்குள் கட்டுப்பட்டு அமைக்கப்பட்டன. அவை தனிப்பட்ட முதலாளித்தவ எஜமானர்களுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் நெருக்குவாரம் கொடுத்து தொழிலாளர்களின் உபரி உழைப்பினால் உருவாக்கப்பட்ட இலாபத்தில் ஒரு பிரிவை சம்பளம், நலன்புரி

16ம பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நா. அறிக்கைப் பத்திரங்கள் :

# வறுமையும், அசமத்துவமும் பெருக்கெடுப்பு! உலக வேலையில்லாத் திண்டாட்டம் நூறுகோடி!

கடந்த நவம்பர் மாத நடுப்பகுதியில் வெளிவந்த ஐக்கிய நாடுகளின் சர்வதேச தொழில் நிறுவனமான ஐ.எல்.ஓ.வின் அறிக்கையின்படி உலகில் நூறு கோடி தொழிலாளர் அல்லது பூகோளரீதியான உழைப்புச் சக்தியில் 30 சதவீதத்தினர் ஒன்றில் வேலையின்மைக்கு அல்லது தரம் குறைந்த வேலைவாய்ப்புக்கு ஆட்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு வெளியான உலக வேலைவாய்ப்பு அறிக்கையில் வேலையற்றோர் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க ஒரு அதிகரிப்பினை -180 கோடியை - இந்த எண்ணிக்கை குறிப்படுகின்றது. இது 1930 ன் பாரிய பொருளாதாரப் பின்னடைவுக் காலத்தின் பின்னர் ஒரு போதும் இல்லாத அதிகரித்த அளவிலான வேலையின்மை நெருக்கடியைப் பிரதிபலிப்பதாக இந்த ஐ.நா. அறிக்கை குறிப்பிடுகின்றது. இந்த வேலையின்மை நெருக்கடியானது மேன்மேலும் உலகளாவிய அதிசயமாக கைத்தொழில் நாடுகளையும் முன்னேறிய நாடுகளையும் அளாவியதாகச் சகல கண்டங்களிலும் பரவி வருகின்றது.

இது மோசமடைந்துவரும் வறுமையுடனும் பெருகிவரும்அசமத்துவத்துடனும் பங்கு கொண்டுள்ளது. வேலைசெய்யும் ஏழைகளிடையே பரந்துவரும் இதைப்பற்றிக் குறிப்பிடுகையில் புதிய ஐ.எல்.ஓ. அறிக்கை பின்ருமாறு எச்சரிக்கின்றது. "நீண்டகால வேலைவாய்ப்பின்மைக்கான காலக்கெடு நிரந்தரமானதாக மாறிவருகின்றது. பொருளியல் வெளியார்களும் அதிகரித்த எண்ணிக்கையிலான தொழிலாளரும் முன்னேறிய நாடுகளில் குறைஊதிய வேலைகளை மட்டுமே கொண்டுள்ளனர். மறுபுறத்தில் பொருளாதார ரீதியில் சலுகைகள் கொண்ட ஒரு கனவான்கள் கூட்டம் தனது கைகளில் பெருந்தொகையான செல்வத்தை குவித்துக் கொள்வதையும் காணலாம்." ஐ.எல்.ஓ. அறிக்கையின்படி உலக சனத்தோகையில் 20 சதவீதமான செல்வந்தர்கள் பூகோள வருமானத்தில் 85 வீதத்தை தம் கைவசம் கொண்டுள்ளனர்.

இந்தப் புள்ளிவிபரங்கள் யாவும் இலாபமுறையின் சில குறிப்பீடுகளே. இவையாவும் முதலாளித்துவமானது எங்ஙனம் கணனி, தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களில் ஏற்படுத்திய புரட்சிகரமான முன்னேற்றத்தை உருவாக்கி பொருளாதார வாழ்க்கையில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் பூகோளரீதியில் ஊடுருவிக் கொண்டுள்ளதையும். இதன்மூலம் சுரண்டலைப் புதிய மட்டத்தில் அதிகரித்துள்ளதையும் உலக மக்களில் பெரும்பாலானோரை வறுமைக்குள் தள்ளியுள்ளதையும் காட்டிக் கொண்டுள்ளன. அதாவது இன்றைய பொருளாதார அமைப்பானது உழைப்பு வயதினை எட்டிய சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரையே உற்பத்தி தன்மை படைத்தவர்களாகக் கொண்டுள்ளது. இது இந்த அமைப்பின் செல்லுபடியற்ற தன்மைக்கு- மனித அபிவிருத்தியின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பொருளாதாரத்தை செய்யமுடியாத காலவதியான தன்மைக்குச் சான்று பகர்கின்றது.

ஐ.எல்.ஓ. ஆய்வானது. உலகின் சகல பாகங்களிலும் வேலைவாய்ப்பு நிலைமைகள் வெட்டப்படுவதைக் காட்டுகின்றது. லத்தீன் அமெரிக்கா, கரிபியன் நாடுகள், சில்லி , ஜமாய்க்கா தவிர்ந்த சகல நாடுகளும் 1986-93க்கு இடையேயான காலப்பகுதியில் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் வளர்ச்சியின்மையை அல்லது ஒரு தேக்க நிலைமையை அனுபவித்துக் கொண்டுள்ளதாக ஐ.எல்.ஓ. அறிவிக்கின்றது. மிகச் சிலவற்றைத் தவிர ஏனைய சகலதும் 1980ல் நிலவிய சம்பள மட்டத்தைக் காட்டிலும வீழ்ச்சி கண்ட சம்பள மட்டத்தையே கொண்டவையாக உள்ளன.

தென்னாசியாவில் 1975-1992க்கு இடையே வேலைவாய்ப்பு சற்று அதிகரித்தது. ஆபிரிக்காவின் அநேக பகுதிகளில் புள்ளிவிபரங்கள் மிகக் குறைவாக உள்ளதோடு சிலநாடுகளில் அவை அடியோடு இல்லாதும் உள்ளன. ஆபிரிக்காவில் (சகாரா) ஏழு நாடுகள் - அங்கோலா, புரூண்டி, லைபீரியா, றுவண்டா, சோமாலியா, சியராலியோன், சூடான் - உள்நாட்டுப் போரில் மூழ்கியுள்ளதோடு "பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான ஆகக் குறைந்த மட்டத்திலான சமூக ஒழுங்கினைக் கூடக் கொண்டிருக்கவில்லை". கென்யா, தென்ஆபிரிக்கா, மொறிஷியஸ். சிம்பாபே போன்ற சிலவற்றில் அதிகரித்த வருவாயுள்ள நாடுகளுக்கான உயர்மட்ட தரவுகள் சற்று காணப்படுவதாக ஐ.எல்.ஓ. குறிப்பிடுகின்றது. "மொறீஷியசை தவிர்ந்த ஏனையவற்றினைப் பொறுத்த மட்டில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான வளர்ச்சி வெகுவாகக் குறைந்து அல்லது இல்லாத ஒரு நிலைமையையே காணமுடிகிறது." அத்துடன் மொறீஷியஸ் உட்பட்ட சகல நாடுகளிலும் உண்மையான ஊதியமட்டம் வீழ்ச்சிகண்டுள்ளது. அல்லது தேங்கியுள்ளது.

வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளைப் பொறுத்த மட்டில் 1980 ன் பின்னைய எண்ணெய் செழிப்புக்கால முடிவானது ஆழமாக வீழ்ச்சி கண்ட மட்டத்திலான கைத்தொழில் வளர்ச்சி, அதிகரித்த வேலைவாய்ப்பின்மையைக் குறித்து நிற்பதாக இந்த அறிக்கை குறிப்படுகின்றது. கிழக்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா பொருளாதார இடைமருவல் சம்பந்தமாக வேலையின்மை அளவானது இரட்டித்துள்ளதாக இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. ரூஷ்யாவில் வேலையின்மை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகின்றது.

## ஐரோப்பிய நாடுகளில் வேலையின்மை 11.3 %

உலக பொருளாதார, கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் அங்கத்துவ நாடுகளில் குறைந்த பட்சம் 34 கோடி மக்கள் வேலையின்றி உள்ளனர். 15 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஆண்டு 1960 ஆண்டில் காணப்பட்ட சராசரி 2 வீத வேலையின்மையுடன் ஒப்பிடுமிடத்து இன்று வேலையின்மை 11.3 சத வீதமாக அதிகரித்துள்ளதைக் காணலாம். பிரான்ஸ், ஜேர்மனி , இத்தாலி . சுவீடன் என்பன வேலையின்மையில் பெரும் அதிகரிப்பின்மையைப் பிரிதிபலிக்கையில் ஸ்பானியா மிகவும் உயர்ந்த அளவிலான 22.3 சதவீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வேலையின்மை 8.7 வீதமாக உயர்ந்துள்ள அதே வேளையில் கனடா 9.8வீத உயர்வைக் கொண்டுள்ளது. அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் உத்தியோகபூர்வமான வேலையின்மை அளவு வீழ்ச்சி கண்டதாக விளங்கினும் பெரும் எண்ணிக்கையிலான தொழில்கள் குறைந்த ஊதிய சேவைக் கைத்தொழில் களாக அல்லது தற்காலிகமானவையாக மாறியுள்ளன. இந்த இரண்டு நாடுகளிலுமே தொழிலாளர்களின் வாழ்கைத் தரம் தேக்கம் அடைந்துள்ளது அல்லது வீழ்ச்சி கண்டுள்ளது. வருவாய் மாறுபட்டு விகிதம் ஆழமாக விரிவுகண்டுள்ளது. ஐ.எல்.ஓ. அறிக்கை ஏனைய நாடுகளை வருமான அசமத்துவம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ள் தன்மையின் அடிப்படையில் நிரல்படுத்துகின்றது. "சிறப்பாகக் கனடா, பின்லாந்து 1980ல் இருந்தும் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நியூஸிலாந்து, சுவீடன் 1980பதுகளின் நடுப்பகுதியில் இருந்து" இவ்வாறு ஏற்பட்டதாகக் குறிப்பிடுகின்றது.

அக்டோபரில் ஐ.எல்.ஓ. இது சம்பந்தமாக வெளியிட்ட இன்னொரு அறிக்கை கைத்தொழில், நிதி தனியார் தனிச் சொத்துடமையின் கீழ் உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டமை முதலாளித்துவச் சந்தை எங்ஙனம் தொழிலாளர[illegible] [illegible] நியாயமான [illegible] தொழில்களை ஒழித்துள்ளது என்பதை விபரிக்கின்றது. ஆடை, துணி தயாரிப்பு, காலணி( டி.சி.எப்) என்பவற்றில் வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வானது உயர்ந்த சம்பள வீதங்களைக் கொண்ட அமெரிக்கா, ஐரோப்பா என்பன தொடர்பாக ஆசியா, மத்திய அமெரிக்கா, மத்திய கிழக்கில் மலிவான உழைப்பினைப் பெற்று பன்னாட்டு கம்பனிகளின் உற்பத்தி பெருக்கம் கண்டுள்ள விதத்தினைக் குறிப்படுகின்றது.

1970-1990 க்கு இடைப்பட்ட 20 ஆண்டு காலத்துள் டி.சி.எப். தொழிலாளரின் எண்ணிக்கையானது ஜேர்மனியில் 58 வீதமும் பிரித்தானியாவில் 55வீதமும் பிரான்சில் 49 வீதமும் அமெரிக்காவில் 31 வீதமும் வீழ்ச்சிகண்டுள்ளதைக் காட்டுகின்றன. இதே காலப்பகுதியில் டி.சி.எப். தொழிலாளர் எண்ணிக்கை மலேசியாவில் 597 வீதத்தினாலும் பங்களாதேஷில் 416 வீதத்தினாலும் இலங்கையில் 385 வீதத்தினாலும் இந்தோனேஷியாவில் 334 வீதத்தினாலும் பிலிப்பைன்சில் 271 வீத்தினாலும் கொரியாவில் 137வீதத்தினாலும் அதிகரித்திருப்பதை இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. சீனா 1980ல் இருந்ததைக் காட்டிலும் -இரண்டு கோடி அதிகரிப்பு- கூடியதான 5.3 கோடி டி.சி.எப். தொழிலாளர்களுக்கு தொழில் வழங்கியது.

1992ல் பெரும் கைத்தொழில் நாடுகளில் துணி, ஆடைத் தயாரிப்பு. தோல் கைத்தொழில்களில் மணித்தியாலத்துக்கான சராசரி உழைப்புச் செலவானது ஜேர்மனியில் 25.70 ஸ்டேர்ளிங் பவுணாகவும் அமெரிக்காவில் 14 பவுணாகவும் அதிகரிததுள்ளது. இது சீனா, மெக்சிக்கோவுடன் ஒப்பிடும்போது முறையே 5.80 பவுணாகவும் 2.40 பவுணாகவும் உள்ளன.

## மலிவான உழைப்பில் இருந்து மிக மலிவான உழைப்பைத் தேடி

ஆடைத் தொழில் துறையில் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் மிகவும் மலிந்த உழைப்பினைத் தேடி வருகையில் இதில் மூன்று விதமான உற்பத்தி மாற்றங்கள் ஏற்படுவதை இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது. முதலாவது, கம்பனிகள் கொரியா, சிங்கப்பூர், கொங்கொங், தாய்லாந்து என்பவற்றை மையமாகக் கொண்டு இருந்தன. 1980பதுகளின் நடுப்பகுதியில் இவை உற்பத்தியை இந்நாடுகளில் இருந்து உழைப்பை இன்னும் மலிவாகச் சுரண்டக் கூடிய பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு மாற்றின. இப்போது இந்தக் கம்பனிகள் தமது நடவடிக்கைகளை பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை , லாவோஸ், நேபாளம், வீயட்நாமில் ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன.

மலிவான உழைப்புக்கான வழிவகைகளை நாடும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் அவாவானது முதலாளித்துவச் சுரண்டலின் மிக நுணுக்கமான வழிமுறைகளைக் கையாளும்படி அவற்றைத் தூண்டியுள்ளது. வீடுகளில் கூறு வேலை, மறைமுக கசக்கிப் பிழிவு, சிறுவர் உழைப்பு என்பன இந்தச் சுரண்டல் முறைகளேயாகும்.

ஐ.எல்.ஓ. அதனது உலக தொழில் வாய்ப்பு அறிக்கையுடன் சேர்ந்து தொழில், வாழ்க்கைத் தரத்தின் மீது இடம்பெறும் இடைவிடாத தாக்குதலின் கொதிக்கும் சமூக விளைவுகளையிட்டு அனைத்துலக மூலதனத்தினை எச்சரிக்கை செய்துள்ளது. அண்மையில் இடம்பெற்ற அரசாங்க, தொழில், வர்த்தகத் தலைவர்களுடனான ஒரு கருத்தரங்கில் ஐ.எல்.ஓ. தலைவரான மைக்கேல் ஹன்சன் "வறுமையின் அதிர்ச்சி தரும் வளர்சசியும் அசமத்துவமும் உலக பூகோளமயமாக்கலுடன் இணைந்த விதத்தில் [illegible] அது பதட்ட நிலையை [illegible]" எனவும் அது முன்னேறிய பின்தங்கிய நாடுகளுக்கு இடையேயான சமூக சில்கைக் கிழித்து எறியும் எனவும் எச்சரித்துள்ளார். ஆனால் உலக முதலாளித்துவத்தின் ஒரு ஏஜன்சியான ஐ.எல்.ஓ.வினால் தொழிலாளர் வர்க்கம் கடந்த காலங்களில் வென்றெடுத்த சமூக நலன்களை ஒழித்துவிட வேண்டாம் என அனைத்துலக முதலாளித்துவத்திடம் இரங்கிக் கேட்டுக் கொள்ள மட்டுமே முடியும்.

## பழைய தொழிலாளர் அமைப்புக்கள் பயனற்றவை

பழைய தொழிலாளர் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தொழிலாளர் வர்க்க நலன்களைப் பேணுவதில் உதவாக் கரையானவை என்பதைக் காட்டிக் கொண்டுள்ளன. ஒரு கண்டத்தில் இருந்து பிறிதொரு கண்டத்துக்கு தமது உற்பத்தியை நகர்த்தும் ட்ரானஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தாக்குதல்களில் இருந்து தமது தொழில், வாழ்க்கைத்தரங்களைப் பாதுகாக்க உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களை முதலாளித்துவ முறைக்கு எதிராக ஐக்கியப்படுத்த வேண்டும். இதனை பழைய தொழிலாளர் அமைப்புக்கள் விடாப்பிடியாக எதிர்க்கின்றன. அவர்கள் தேசிய பொருளாதாரத்தினை காப்பதிலும் முதலாளித்துவத்தைப் பராமரிப்பதிலும் வேரூன்றியுள்ளனர்.

அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்காகப் போராடுவதுடன் கைகோர்த்த முறையில் பெரும் வர்த்தக நிறுவனங்களின் பொருளாதார சர்வாதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் போராட்டம் இடம்பெற வேண்டும். பரந்த அளவிலான உற்பத்தி வளங்கள்- தொழிலாளர் வர்க்கத்தின் மூளை , தசைகள் தொடக்கம்- தனியார் இலாப வெறிகொண்ட ஆளும் வர்க்கத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும். பொருளாதார வாழ்க்கையானது பரந்த தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக கட்டுப்பாட்டின் கீழ் கொணரப்பட வேண்டும். இந்தப் பொருளாதார வாழ்க்கை நிதி ஏகபோகங்களின் குறுகிய நலன்களுக்காக அல்லாது பரந்த மக்களின் நலன்களுக்கு ஏற்ற விதத்தில் சமுதாயத்தின் அவசியங்களை எதிர்கொள்ளும் விதத்தில் மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும். பொருளாதாரத்தின் மிக முக்கியமான நெம்புகொலும் தொழில்நுட்பத்தின் பெரும் முன்னேற்றங்களும் பொது உடமையின் கீழ்க்கொணரப்பட வேண்டும். அப்போதுதான் பொருளாதார வாழ்க்கை முழுச் சமுதாயத்தினது வாழ்க்கைத் தரத்தினையும் கலாச்சார மட்டத்தினையும் உயர்த்தும் விதத்தில் திட்டமிடப்பட முடியும்.

மிகவும் அடிப்படையான தேவைகள் - நல்ல சம்பளத்துடன் கூடிய தொழில், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு என்பன உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். சமத்துவத்தின் அடிப்படைக் கொள்கை பொருளாதார, சமூக கொள்கையின் உரைகல்லாக விளங்க வேண்டும். தொழிலாளர் வர்க்கம் பெரும் வர்த்தக கட்சிகளதும் அரசியல்வாதிகளதும் அரசியலுக்கு ஆட்பட்ட நிலையில் இருந்து விடுபடப் போராடினால் மட்டுமே இந்த முன்னோக்குக்காகப் போராட முடியும். தொழிலாளர்கள் தமது சொந்த அரசியல் கட்சியை அமைக்க வேண்டும். ஒரு சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு தொழிலாளர் அரசாங்கத்துக்காகத் தொழிலாளர் போராட வேண்டும்.

சோசலிச சமத்துவக் கட்சி இந்த பரந்த தொழிலாளர் வர்க்கக் கட்சியை நிர்மாணிக்கவே அமைக்கப்பட்டது. நாம் சகல தொழிலாளர்களையும் இளைஞர்களையும் சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து அதைக் கட்டி எழுப்புமாறு வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூஷ்யா: முதலாளித்துவ புனருத்தாரணம் தந்த சீதனம் என்ன?

1996 டிசம்பருடன் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளாக ரூஷ்யத் தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்கள் படுமோசமான சமூக நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டது மட்டுமன்றி முழு அரசியல் அதிகாரங்களும் ஒரு பயங்கரக் கள்வர் கூட்டத்தின் கைகளுக்குள் சென்றுள்ளது. இன்று கிரேம்ளினில் இருந்து ஆட்சிபுரிவோர் பெரும் கள்வர் என்பது விவாதத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

இந்த ஆண்டின் கடைப்பகுதியில் ஒரு தொகைப் பயங்கரக் குற்றங்கள் முன்னைய சோவியத் யூனியனை கிடுநடுங்க வைத்துள்ளன. நவம்பர் 16ம் திகதி கஸ்பியன் கரையோர நகரமான கஸ்பிக்கில் இடம்பெற்ற ஒரு குண்டுவெடிப்பில் 70 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சிறுவர்கள்.

இந்தக் குண்டு வெடிப்புக்களுக்கு இலக்கான கட்டிடத்தில் வசித்தவர்களில் பலர் சமஷ்டி எல்லைச் சேவை அதிகாரிகளும் அவர்களின் குடும்பத்தினருமாவர். குண்டுவீச்சில் ஈடுபட்டவர்கள் இன்னமும் அடையாளம் காணப்படாத போதிலும் இதை நடாத்தியோர் சட்டவிரோத எல்லை வர்த்தகத்தில் ஈடுபடும் 'மாபியா' கொலைகாரக் கும்பலைச் சேர்ந்தோர் என்றே பெரிதும் நம்பப்படுகின்றது. இதற்கு முன்னதாக மாஸ்கோ மயானத்தில் துக்கம் கொண்டாட கூடியவர்கள் மீது இடம்பெற்ற மற்றொரு குண்டு வீச்சில் 14 பேர் கொல்லப்பட்டனர். இது நவம்பர் 10ம் திகதி இடம்பெற்றது.

இந்தக் கும்பல் ஆப்கான் ரூஷ்ய யுத்த தியாகிகள் சங்கத் தலைவரின் படுகொலையின் இரண்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த யத்த தியாகிகள் குழுக்கள் அரசாங்க வரிகள், லைசென்ஸ் கட்டணம் போன்றவற்றில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் திட்டமிட்ட கொலைகாரப் போக்குக்களின் பலிகடாக்களாகி உள்ளனர்.

அடுத்ததாக பெரிதும் விளம்பரப் படுத்தப்பட்ட அமெரிக்க வர்த்தகர் போல் டட்டினது ஒப்பந்த அடிப்படையிலான கொலை இடம்பெற்றது. இவர் ரூஷ்யத் தலைநகரில் ஒரு முன்னணி ஹோட்டலை விலைக்கு வாங்கும் பொருட்டு மாஸ்கோவில் இருந்து வந்தார். பலியானவரின் தேசிய இனம் காரணமாக அவரின் கொலை குறிப்பிடத் தக்க ஒன்றாகும். ரூஷ்ய வர்த்தகர்களுக்கும் வங்கியாளர்களுக்கும் எதிரான தாக்குதல்கள் ஏறக்குறைய தினமும் இடம்பெற்று வருகின்றன: கடந்த வருடத்தில் (1995) மாஸ்கோவில் ம்டடும் 50க்கும் அதிகமான வங்கியாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவை வெறுமனே பாதாள உலகத்தின் வேலை அல்ல. இவை நேரடி சமூக, பொருளாதார உறவுகளைப் பிரதிபலிக்கின்றன. இவை முதலாளித்துவ புனருத்தாரணம் காரணமாகத் தோன்றியுள்ளன.

ஒரு கூட்டம் மாபெரும் கள்வர் கூட்டத்தினால் ரூஷ்யா ஆட்சி செய்யப்படுகின்றது. இவர்கள் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினின் தலைமையில் இயங்குகின்றார்கள். இந்த ஆட்சியாளர்கள் ஜூலை ஜனாதிபதி தேர்தலில் ஒன்றிணைந்து கொண்டுள்ளனர். ஏழு ரூஷ்ய வர்த்தகர்களைக் கொண்ட ஒரு சிறு கும்பலால் இது இயக்கப்படுகின்றது. முன்னைய சோவியத் யூனியனின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பரந்த அளவிலான செல்வங்களையும் சொத்துக்களையும் இவர்கள் தமது கைகளுக்குள் போட்டுக் கொண்டுள்ளனர். இவர்கள் யெல்ட்சின் மீண்டும் பதவிப்பீடம் ஏறும் விதத்தில் நிதியீட்டம் செய்வதில் தமது பணத்தைப் பயன்படுத்தினர். ரூஷ்யன் ஜனாதிபதி பெரிதும் முடமாகிப் போன ஒரு நிலைமையில் இவர்கள் ஒரு அரசாங்கமாகச் செயற்பட்டு வந்தது நித்ர்சனமாகியது.

ஒரு மாஸ்கோ கார் வர்ததகரும் வெகுஜன தொடர்புச் சாதன மன்னனுமான பொரிஸ் பெரிஷோவ்ஸ்கி ரூஷ்ய தேசிய பாதுகாப்புச் சபை பிரதி தலைவராக நியமனம் செய்யப்பட்டதில் இருந்து இந்தக் கும்பல் இருந்து வருவது அம்பலமாகியது. இதைத் தொடர்ந்து இந்தக் கும்பலின் மற்றொரு அங்கத்தவராக ஒனெக்ஷிம்பாங் தலைவரான விளாடிமீர் பொட்டனின் முதலாவது பிரதி பிரதமராக(பொருளாதாரம்) நியமிக்கப்பட்டார். ஏனைய ஐவரும் நிதி, வங்கி துறையைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பெரிஷோவ்ஸ்கியின்படி இந்த எழுவரும் ரூஷ்யப் பொருளாதாரத்தில் 50 சத வீதத்தினை கட்டுப்படுத்துகின்றனர். இத்துடன் நின்றுவிடாது இவர்கள் இரு பெரும் தொலைக்காட்சி நிலையங்களையும் நாட்டின் மாபெரும் வானொலி நிலையத்தையும் பல்வேறுபட்ட அச்சகங்களையுமா் கைகளுக்குள் போட்டுக் கொண்டுள்ளனர். இவை யெல்ட்சின் ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டன.

இந்தப் புதிய ரூஷ்ய ஆளும் கும்பல், மாபியாவிற்கு கற்பிக்கப்பட்ட குற்றங்களில் காணப்பட்ட பாணியிலான விதிமுறைகளைக் கையாண்டு செல்வம் திரட்டிக் கொண்டுள்ளன. பெரிஷோவ்ஸ்கியின் நியமனத்தின் பின்னர் யெல்ட்சினின் மாஜி. மெய்ப் பாதுகாப்பாளரான அலெக்சாண்டர் கொர்ஷாகோ, வர்த்தகர் ஒருவர் தமது போட்டியாளரைக் கொலைசெய்யும்படி தம்மிடம் கேட்டதாக அம்பலப்படுத்தி உள்ளார்.

## வாழ்க்கைத்தரம் விழ்ச்சி

டட்டுன் கொலை செய்யப்பட்டது அவர் கொள்வனவு செய்ய முயன்ற ஹோட்டலை போட்டியாக வாங்குவதில் ஈடுபட்ட ஒரு உயர் அரசாங்க அதிகாரியால் எனத் தெரியவந்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளுள் முன்னைய சோவியத் யூனியனின் உழைக்கும் மக்கள் வாழ்க்கைத் தரத்தில் பெரும் வீழ்ச்சியை எதிர் கொண்ட அதே வேளையில் பெரிஷோவ்ஸ்கி போன்ற புள்ளிகள் பெருமளவிலான செல்வத்தைத் திரட்டிக் கொண்டுள்ளனர்.

ஒரே சமயத்தில் பெருந்தொகையான தொழிலாளர்களுக்கு மதக் கணக்கில் சம்பளம் கொடுபடவில்லை. அவர்களின் சம்பளங்கள் பொருளாதார நிறுவனங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவர்களால் சுருட்டிக் கொள்ளப்பட்டுள்ளன. பல சந்தர்ப்பங்களில் இவர்கள் பழைய ஸ்டாலினிச அதிகாரிகளாகவும் பக்டரி இயக்குனர்களாகவும் இருக்கின்றனர். இவர்களுக்கு இந்த பக்டரி பங்குகள் விநியோகிக்கப்பட்டதோடு இவர்களுக்கிடையேயே அவை பகிர்ந்து கொள்ளப்பட்டன. இலட்சோபலட்சம் ரூஷ்ய தொழிளாளர்கள் கேட்கும் கேள்வி இதுதான்: இந்தப் பணம் எல்லாம் எங்கே போய்விட்டது? பதில் இதுதான்: யெல்ட்சின் அரசாங்கத்தினால் பிரதிநித்துவம் செய்யப்படும் கொள்ளைக்கார முதலாளிகளின் சாக்குகளுக்குள் சென்றுவிட்டது.

மேற்கத்தைய முதலாளித்துவம் -குறிப்பாக அமெரிக்க அரசாங்கம் இந்த கொள்ளைக்கார ஆட்சியாளர்களை அமைப்பதில் நேரடி பொறுப்புக் கொண்டுள்ளது. கொர்பச்சேவின் பெரஸ்ரொய்காவில் இருந்து சோவியத் யூனியனின் கீழ் அமைக்கப்பட்ட அனைத்தையும் தவிடுபொடியாக்குவதே அவர்களின் இலக்காக இருந்தது. சர்வதேச நாணய நிறுவனத்தின் தூதுக்குழுக்களும் அமெரிக்க அதிகாரிகளும் அமெரிக்க பொருளாதார ஆலோசகர்களும் தனியார்மயமாக்கத்தை முடிந்தமட்டும் விரைவுபடுத்தியதோடு இருந்து வந்த அரச நிறுவனங்களில் இருந்து சூறையாடக்கூடியவற்றை எல்லாம் சூறையாடும்படி ஊழல் பேர்வழிகளை தூண்டினர்.

லண்டன் பினான்சியல் டைம்சுக்கு அளித்த பேட்டியில் ரூஷ்யாவின் சொயிஸ் கட்சி தலைவர் ஒருவர் கிரேம்ளின் தலைமை அதிகாரி அனட்டலி சுபைஸின் அறிக்கையை பின்வருமாறு குறிப்பிட்டது. இன்று ரூஷ்யன் அரசாங்கத்தை நடாத்தும் பேர்வழிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் சுபைஸ் பின்வருமாறு குறிப்பிட்டார். "அவர்கள் களவாடி, களவாடி களவாடுகின்றார்கள். அவர்கள் முற்றிலும் சகலதையும் களவாடுகின்றார்கள். அவர்களை நிறுத்துவது முடியாத காரியம். ஆனால் அவர்கள் களவாடட்டும் . அவர்களின் சொத்துக்களை எடுக்கட்டும். அவர்கள் அப்போது அவர்களின் சொத்துக்களின் உரிமையாளர்களாகவும் கண்ணியமான நிர்வாகிகளாகவும் வருவார்கள்."

இந்தப் பாணியிலான கொலைகாரத் தனத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆட்சி சமூக துருவப்படுத்தலின் வளர்ச்சியோடு சேர்ந்து ரூஷ்யாவிலும் அனைத்துலகிலும் ஒரு வெடித்துச் சிதறும் தாக்கங்களை உருவாக்கும். ரூஷ்ய இராணுவ தளபதிகள் தொடர்ச்சியான பேரழிவுகளைப் பற்றி எச்சரிக்கை செய்து கொண்டுள்ளார்கள். நவம்பர் 12ம் திகதி பாதுகாப்பு அமைச்சர் இகொர் ரொடிநோவ் மாஸ்கோவில் நடைபெற்ற சிரேட்ட இராணுவத் தளபதிகள் மாநாட்டில் பேசுகையில் "இராணுவ நிதியீட்டத்தில் அரசாங்கத்தின் வெட்டும் இராணுவ அதிகாரிகள் படையாட்களின் சம்பளத்தை மாதக் கணக்காக உரிய காலத்தில் செலுத்தத் தவறியமையும் எதிர்பாராத துன்பகரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்" என்றுள்ளார்.

நாட்டின் "ஆழமான பொருளாதார நெருக்கடியையும் சமூக உறுதிப்பாடின்மையையும்" சுட்டிக்காட்டி ரோடிநோவ் ஒரு இராணுவ சதிக்கான சாத்தியம் பற்றி ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார். "வெகு விரைவில் இராணுவத்தினை சீர்திருத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படாது போகின் அரசுக்கான விளைகள் பேரழிவுகள் மிக்கதாக இருக்கும்" என்றுள்ளார்.

இராணுவத்தினுள் தற்கொலைகளும் கொலைகார நடவடிக்கைகளும் அதிகரித்துக் கொண்டுள்ளதாக ரூஷ்ய தக்வல் சாதனங்கள் அறிவித்துள்ளன. இதேசமயம் கடந்த மாதம் அமெரிக்க மத்திய உளவு நிறுவனத்தில் இருந்து பொசிந்த ஒரு அறிக்கையின்படி ரூஷ்யாவின் பிரமாண்டமான அணு ஆயுதங்களின் மீதான மத்திய கட்டுப்பாடு பலவீனம் அடைந்துள்ளதாக எச்சரிக்கை செய்துள்ளது.



மாஸ்கோ வீதில் பிச்சை எடுக்கும் மூதாட்டி

## 1997- உலகம் பூராவும் சமூகக் குமுறலின் ஆண்டு...

1ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளையிடவும் குறைந்த சம்பளத்துக்கு எதுவிதமான தடைகளும் இல்லாது தொழிலாளர்களைச் சுரண்டவும் நிலைமைகளைச் சிருஷ்டித்து தாருங்கள் என்பதே. சகல நாடுகளிலும் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இந்த நிலைமைக்கு இன்று முகம் கொடுத்துள்ளனர். இதன்கீழ் தனியார்மயம், விலைவாசியை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தினை நாசமாக்கல், இலவசக் கல்வி ஒழிப்பு என்பன உக்கிரமாக்கப்பட வேண்டும் என்பதேயாகும். வாசுதேவ நாணயக்காரவுடன் ஒன்றாகக் தின்று குடித்தவரான நவசமமாஜ தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் நான்கு மணித்தியால வேலைநிறுத்தம் செய்வோம் என மோசடி கூச்சல் போட்டுவிட்டு இறுதியில் இணங்கியது வாசுதேவ நாணயக்காரவின் பிரேரணைக்கேயாகும். ஏனைய தொழிற்சங்கத் தலைவர்கள் செய்ததும் இந்த வாசுதேவ நாணயக்காரவின் வாலில் தொங்குவதேயாகும். டிசம்பர் ந்திகதி அரசாங்கத்தின் தாக்குதலுக்கு எதிர்ப்புக்காட்டுவதற்கு 2000 பேர் மறியல் போராட்டத்துக்கு கூடியபோது தொழிற்சங்கத் தலைவர்கள் உருக்குக் கூட்டுத்தாபனத்தின் கொரியன் கம்பனிக்கு எதிராக ஒரு பொய் வழக்கைத் தாக்கல் செய்துவிட்டு தொழிலாளர்களை வேலைக்குத் திருப்பி அனுப்பி உள்ளார்கள்.

வங்குரோத்து பிற்போக்கு தொழிற்சங்கத் தலைவர்களிடமிருந்து தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் தமது உரிமைகளைக் காப்பதற்கு வேலைத்திட்டத்தை பெற்றுக் கொள்ள முடியாது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு பந்தம் பிடித்த சங்கங்களிடமிருந்தோ அல்லது கட்சிகளிடமிருந்தோ அல்லது அரசாங்கத்தின் பங்குதாரர்களான சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புக்களிடமிருந்தோ அல்லது தனியார்மயமாக்கத்துக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்டுள்ள யூ.என்.பி. தொழிற்சங்கங்களிடம் இருந்தோ அல்லது சிங்கள இனவாத வெறியர்களான மக்கள் ஐக்கிய முன்னணியிடம் இருந்தோ தமக்கு வேலைத்திட்டம் கிடைக்கும் என மக்கள் நினைப்பின் அது ஒரு பெரும் தவறாக முடியும். உலகின் சகல பாகங்களிலும் போராட்டத்தில் குதிக்கும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்கள் வெற்றியை நோக்கி நேரே நடைபோட இடமில்லை. அவர்கள் காட்டிக்கொடுத்து முதலாளிகளுக்கு பலிகொடுக்கும் கூட்டுத்தாபனங்கள், இலவசச் சுகாதார சேவைகளின் மிச்சசொச்சத்தை துடைத்துக்கட்டுவது நலன்புரி மானியங்களை ஒழித்துக்கட்டுவதை விரைவுபடுத்தியுள்ளது. பொதுமக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துக்கொண்டு இந்த நடவடிக்கைகளை யூ.என்.பி.அரசாங்கம் ஆரம்பித்தது. பொதுஜன [illegible] வரும் நிலைமைகளின்கீழ் அவர்கள் அவற்றை நடைமுறைக்கிடும் பொறுப்பை பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மூலம் நடைமுறைக்கிடப்படும் முதலாளிகளின் மூலோபாயம் உருக்குப் போராட்டத்தில் மீண்டும் அம்பலமாகியுள்ளது. அது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் இலங்கை முதலாளிகளதும் அபிலாசைகளுக்கு மக்களைக் கீழ்ப்படுத்தும் பொருட்டு பொலிஸ்-இராணுவ-குண்டர் படைத் தாக்குதல் மூலம் அவர்களை துடைத்துக் கட்டுவதேயாகும். பொதுஜன முன்னணி அரசாங்கம் இப்போது உக்கிரமாக்கி உள்ள இந்த இனவாத யுத்தம் சிங்களம்-தமிழ் பேசும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பிளவு படுத்தி இந்த அழிவுக்கு பலியாக்கும் முதலாளித்துவ மூலோபாயத்தின் நடுமத்தியில் இருந்து கொண்டு உள்ளது.

இந்த நிலைமையின் கீழ் தமது உரிமைகளை காக்க முன்வரும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களது எந்த ஒரு பகுதியினரதும் போராட்டமானது அரசாங்கத்துடனும் முதலாளித்துவ அரசுடனும் மோதிக்கொள்ளும் போராட்டமாக மாறுகிறது என்பது உருக்குத் தொழிலாளர் போராட்டத்தின் மூலம் தெளிவாக இல்லையா?

உருக்குத் தொழிலாளர் எதிரிலும்- மற்றும் தொழிலாளர்களின் எதிரிலும் . பிரச்சினை இந்த விதத்தில் தலைநீட்டி இருக்கையில் தொழிற் சங்கத் தலைவர்கள் செய்தது என்ன? டிசம்பர் 16ம் திகதி நாராஹேன்பிட்டி அபயாராமேயில் தொழிற்சங்கத் தலைவர்களின் ஒரு கூட்டத்தை நடாத்தினர். அங்கு தலைமை வகித்தது பொதுஜன முன்னணி கும்பலைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்காரவாகும். அவர் கூறியது இதுதான்: "அரசாங்கத்தின் உள்ளும் தனியார்மயமாக்கத்துக்கு எதிரான ஆட்கள் பேசுவதற்கு பயந்துபோய் இருப்பதால்" அதைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு பொலிசை அகற்றி வேலைக்கு செல்வதற்கு அரசாங்கத்துக்கு முறைப்பாடு செய்யும் கட்சி அமைக்கப்பட்டு உள்ளது."

உலக ரீதியில் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் கைக்கூலி முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கும் எதிராக போராட்டத்துக்கு வரும் தொழிலாளர் வர்க்கத்தினை அனைத்துலக தோழமைப் பிணைப்பினால் பிணைத்து, ஏகாதிபத்தியத்தினை தூக்கிவீசி, அனைத்துலக சோசலிசத்தை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராட வேண்டும்.

இந்த அடிப்படையில பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளிகளதும் சகல தாக்குதல்களுக்கும் எதிராக போராடும் தொழிலாளர்களினதும் ஒடுக்கப்படும் மக்களதும் இளைஞர்களதும் மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்ப முன்நோக்கிச் செல்வோம்.

அத்தகைய ஒரு மக்கள் இயக்கத்தை கட்டி எழுப்புவது எப்படி? வங்குரோத்து முதலாளித்துவச் சார்பு தொழிற்சங்கத்

16ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் சோசலிச சமத்துவக் கட்சி ஸ்தாபிதம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியான அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சி ஒரு புதிய அரசியல் கட்சியை சோசலிச சமத்துவக் கட்சியை - ஸ்தாபிதம் செய்துள்ளது. அது எதிர்வரும் பிரித்தானியப் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளது.

பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சி ஒரு சோசலிச வேலைத் திட்டத்தினை முன்வைக்கவும் தொழிலாளர் வர்க்கத்துக்கு பெரும் வர்த்தக அமைப்புக்களின் கட்சிகளான தொழிற் கட்சி, கொன்சர்வேடிவ் கட்சி, லிபரல் கட்சிகளுக்குப் பதிலாக ஒரு அரசியல் பதிலீட்டை வழங்கவும் எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களை நிறுதத உள்ளது.

டோனி பிளேயர் தலைமையிலான தொழிற் கட்சி தனது கடந்த கால சீர்திருத்தவாத வேலைத் திட்டத்தினை அடியோடு கைகழுவி விட்டுவிட்டு சுதந்திர சந்தை முதலாளித்துவத்தினையும சட்டமும் ஒழுங்கையும் அணைத்துக் கொண்டுள்ளது.

டோரி பிரதமர் ஜோன் மேஜர் ஐந்து மாதங்களுக்குள் ஒரு பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவரது கட்சி பல்வேறு நெருக்கடிகளால் பிளவுண்டு போயுள்ளது. ஐரோப்பிய நாணய ஒன்றியத்தில் பிரித்தானியா சேர்வது பற்றிய பிரச்சினை கட்சிக்குள் பிளவை உக்கிரமாக்கியுள்ளது. தேர்தலை எதிர்கொண்டுள்ள அ்தே வேளையில் பிரித்தானியாவில் வர்க்கப் போராட்டம் சூடு பிடித்துள்ளது. இந்த தசாப்தத்தில் ஆகக் கூடுதலான வேலைநாட்கள் இந்த ஆண்டில் வேலைநிறுத்தத்தினால் இழக்கப் பட்டுள்ளது. துறைமுகம், துறைகளில் புகையிரதம், தபால், தீயணைப்பு தொழிலாளர்கள் வர்க்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரித்தானிய ஆளும் வர்க்கத்தில் கணிசமான பகுதியினர் தொழிற் கட்சியின் வெற்றியை வரவேற்பர் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. தொழிற்கட்சி தலைவர் பிளேயரும் அவரின் சகாக்களும் வேலைநிறுத்தங்களை நசுக்குவதில் தொழிற் சங்கத் தலைவர்களுடன் ஒத்துழைப்பர் எனவும் அதன் மூலம் பிரித்தானிய முதலாளித்துவத்தை அச்சுறுத்தும் ஒரு பரந்த சமூக, அரசியல் இயக்கம் வெடிக்காது தடுக்க முயல்வர் எனவும் அவர்கள் கணித்துக் கொண்டுள்ளனர்.

பிரித்தானிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் சோசலிச சமத்துவக் கட்சியின் உதவிச் செயலாளர் ஜூலி ஹைலன்ட்டை டிசம்பர் 12ம் திகதி நடைபெறும் பார்ண்ஸ்லி கிழக்கு தேர்தல் தொகுதி இடைத்தேர்தலிலும் வேட்பாளரா்க நிறுத்தியுள்ளது.

பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியின் பத்திரிகையான இன்டர் நஷனல் வேர்க்கர் இப்புதிய கட்சியை ஸ்தாபிதம் செய்ததன் மூலம் கட்சி அனைத்துலக வாதம், சமூக சமத்துவம், தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டப் போராடும் என்றுள்ளது.



இராஜ்குமாரை விடுதலை செய்யும் படி பிரச்சாரம் செய்யும் பிரித்தானிய ட்ரொட்ஸ்கிஸ்டுகள்

"பிரித்தானியத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களுக்கு அனைத்துலகவாதத்தின் அடிப்படை முக்கியத்துவத்தினை விளக்குகையில் "இன்டர்நஷனல் வேர்க்கர்" பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ; சோசலிச சமத்துவக் கட்சி தேசியவாதம், பிரிவினைவாதங்களின் சகல வடிவங்களையும் நிராகரிக்கின்றது. பூகோளமயமான உற்பத்தி நிலைமைகளின் கீழ் பிரித்தானியத் தொழிலாளர் உலகம் பூராவும் உள்ள அதன் சக தொழிலாளர்களுடன் இணைந்தாக வேண்டும். தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரங்களை பேண ஒரு அனைத்துலக மூலோபாயத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டும். தொழிலாளர் வர்க்கம் ஒரு முதலாளித்துவ வர்த்தகக் கூட்டுக்கோ அல்லது ஒரு ஐரோப்பியப் பொதுச் சந்தைக்கோ சிறிய ஆங்கிலேய தேசிய வாதங்களுக்கோ எதிராக ஐக்கிய ஐரோப்பிய சோசலிச அரசுகளுக்கான போராட்டத்தினை முன்னெடுக்க வேண்டும். கண்ட ரீதியான குரோதம் கொண்ட தேசிய அரசுகளாக பிளவுண்டு போவதற்கு எதிராக கண்ணியமான வாழ்க்கைத் தரம் உத்தரவாதம் செய்யப்பட்டு யுத்த பேராபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

"சோசலிச சமத்துவக் கட்சி ஸ்கொட்லாந்து, வேல்ஸ் தேசியவாத வேலைத்திட்டங்களை நிராகரிக்கின்றது. பிரிவினைவாதம் தொழிலாளர்கள் அடைய எதிர்பார்க்கும் இலக்குகளை பிரதிபலிப்பதாக இல்லை. ஆனால் அது மத்தியதர வர்க்க வசதி வாய்ப்புக்கள் நிறைந்த தட்டினரின் சொந்த நிதி கொடுக்கல் வாங்கல்களை அனைத்துலக பணச் சந்தையுடனும் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களுடனும் செய்துகொள்வதாகும். தேசியவாதத்தினதும் பிராந்தியவாதத்தினதும் குறுகிய பிரிவினைக் கொள்கைகளுக்கு எதிராக சோ.ச.க. வர்க்க ஐக்கியத்தின் பதாகையை தாங்கிக் கொண்டுள்ளது."

பிரித்தானிய தொழிற்கட்சியை ஒரு சோசலிஸ்ட் கட்சியாகக் காட்டத் திரிபுவாதிகளும் மத்தியவாதிகளும் எடுக்கும் குத்துக்கரணங்களுக்கு எதிரான தனது மார்க்சிச நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகையில் சோ.ச.க. பின்வருமாறு கூறுகின்றது. "தொழிற்கட்சி ஆரம்பம் தொட்டு ஒரு சீர்திருத்தக் கட்சியாகவேயன்றி ஒரு சோசலிஸ்ட் கட்சியாக இருந்தது கிடையாது. இது வர்க்க சமரச கொள்கைகளையே போதித்து வந்தது. தொழிலாளர் வர்க்கம் இலாப அமைப்பினுள்ளும் தேசிய அரச வடிவினுள்ளும் அதன் அபிலாசைகளை ஈட்டிக் கொள்ளலாம் என்றது.

"இதன் அரசியலமைப்பின் புகழ்பெற்ற 1 சரத்து (கைத்தொழில் தேசியமயமாக்கம்) 1917 ரூஷ்யப் புரட்சியை தொடர்ந்து 1918ல் வரையப்பட்டது. அது "புரட்சிக்கு எதிராக" என்ற தலைப்பின் கீழேயே இடம்பெற்றது. தொழிற்கட்சி இலாப அமைப்பின் உயிர்வாழ்வை ஊர்ஜிதம் செய்ய என்றும் செயற்பட்டுள்ளது."

# நாம் ஒரு மிக முக்கிய வரலாற்று திருப்பத்திற்கு முகம் கொடுத்துள்ளோம்

## – அவ்ஸ்திரேலிய சோசலிச சமத்துவக்கட்சி செயலாளர்



நிக் பீம்ஸ்

கடந்த ஜூன் 8ம்9ம் திகதிகளில் சிட்னியில் நடைபெற்ற நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியப் பகுதியான சோசலிஸ்ட் லேபர் லீக்கின் 17வது தேசிய காங்கிரஸ் சோ.லே.லீக்கை ஒரு புதிய அரசியல் கட்சியாக -சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்ய ஏகமனதாக தீர்மானம் செய்தன.

இம்மாநாட்டின் பேராளர்கள் அடிப்படைப் பொருளாதார, அரசியல் மாற்றங்களை ஆய்வு செய்யும் ஒரு முன்நோக்குப் பிரேரணையை அங்கீகரித்தனர். இந்த மாநாடு இரண்டாம் உலக யுத்தத்துக்கு பின்னைய காலப் பகுதியின் முதலாளித்துவ உறுதிப்பாடு, சமூக சமத்துவமின்மையின் ஆழமான வளர்ச்சி, தொழிலாளர் இயக்கத்தில் மேலாதிக்கம் கொண்டிருந்த பழைய சகல கட்சிகளும் அமைப்புக்களும் தொழிலாளர் வர்க்கத்தின் சமூக நிலைமைகளைத் தகர்த்து எறியும் ஏஜன்சிகளாக மாற்றம் கண்டமை போன்ற அம்சங்களை ஆய்வு செய்தது.

இம்மாநாட்டில் முக்கிய அரசியல் அறிக்கையை சோசலிச லேபர் லீக்கின் தேசியச் செயலாளர் நிக் பீம்ஸ் சமர்ப்பித்தார். இம்மாநாட்டுக்கு அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் வருகை தந்திருந்ததோடு அவர் அமெரிக்க சோ.ச.க.வின் வாழ்த்துச் செய்தியை முன்வைத்து உரைநிகழ்த்தினார். இம்மாநாட்டுக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னதாக அவுஸ்திரேலிய நகரங்களான சிட்னி, மெல்போர்ணில் விரிவுரைச் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த முன்னைய சோவியத் யூனியன் பேராசிரியர் வடிம் றொகோவினும் இங்கு வாழ்த்துரை வழங்கினார். நான்காம் அகிலத்தின் ஒரு பகுதியின் மாநாட்டில் முன்னைய சோவியத் யூனியனில் இருந்து ஒரு ட்ரொட்ஸ்கிஸ்ட் கலந்து கொண்டது இதுவே முதற்தடவையாகும்.

இம்மாநாட்டுக்கான வாழ்த்துச் செய்திகளை அனைத்துலகக் குழுவின் பகுதிகளான பண்ட் சோசலிஸ்ட் ஆபைட்டர் (ஜேர்மனி) இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சி(பிரித்தானியா) புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (இலங்கை) என்பன அனுப்பி வைத்திருந்ததோடு அவை மாநாட்டில் வாசிக்கப்பட்டன.

மாநாட்டின் இறுதியில் சோசலிச சமத்துவக் கட்சியின் முதலாவது மத்திய குழு தெரிவு செய்யப்பட்டதோடு அது தோழர். நிக் பீம்சை கட்சியின் தேசியச் செயலாளராகத் தெரிவு செய்தது. கட்சியின் உதவிச் செயலாளராக லின்டா ரெனன்பாமும், வேர்க்கர்ஸ் நியூஸ் பத்திரிகையின் ஆசிரியராக மைக் ஹெட்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

முன்நோக்குப் பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசிய நிக் பீம்ஸ், "சோசலிச லேபர் லீக்கை ஒரு சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்வது, ஒரு முழு வரலாற்று அபிவிருத்தி சுற்றோட்டமும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதோடு நாம் எமது வரலாற்றில் ஒரு மிக முக்கியமான திருப்பத்துக்கு முகம் கொடுத்துள்ளோம் என்ற விளக்கத்தின் அடிப்படையிலேயே.


"ஒரு லீக் வடிவில் இருந்து கட்சியாக இடம்பெறும் மாற்றம் ஒரு வெறும் கலைச் சொல் மாற்றம் அல்ல. அது சோ.லே.லீ. தொழிலாளர் வர்க்கத் தலைமைக்கு நேரடியாகப் போராடுவதோடு இதற்கான அரசியல், கோட்பாட்டு, அமைப்பு ரீதியான சகல பொறுப்புக்களையும் தனது தோள் மேல்" கொள்கின்றது எனவும் நிக் பீம்ஸ் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் வாழ்த்துக்களை வழங்கி உரை நிகழ்த்திய தோழர் .டேவிட் நோர்த் அவுஸ்திரேலிய மாநாட்டுக்கு முன்னதாக மார்க்சிஸ்ட் விரிவுரை சுற்றுலாவை முடித்திருந்த ரூஷ்ய மார்க்சிஸ்ட் கலாநிதி .வடிம் றொகோவினின் விரிவுரைகளுக்கு அங்கு கிடைத்த பேராதரவை உலகில் இன்று ஏற்பட்டுவரும் புதிய அபிவிருத்திகளுடன் தொடர்புபடுத்தி உரைநிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை

– விஜே டயஸ்


விஜே டயஸ்

**நவம்பர் 2–3ம் திகதிகளில் நடந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பேராளர் மாநாட்டில் பொதுச் செயலாளர் விஜே டயஸ் சமர்ப்பித்த அரசியல் அறிக்கை**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த பேராளர் மாநாடு பு.க.க. வின் இருபத்தெட்டு ஆண்டு வரலாற்றில் ஒரு தீர்க்கமான திருப்புமுனையைக் குறித்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. மாநாட்டின் முன்வைக்கப்பட்டுள்ள முன்நோக்கு வரைவு, சுமார் மூன்று தசாப்த காலம் கழகமாக தொழிற்பட்ட பு.க.க.வை ஒரு கட்சியாக பரிணாமம் செய்யும் பிரேரணையை முன்வைத்துள்ளது.

யூ.என்.பி., சிறீலங்கா கூட்டரசாங்கங்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் நலன்களைக் காக்கும் பொருட்டு சளைக்காது போராடிய போராட்ட வரலாற்றைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கொண்டுள்ளது. அந்த விதத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைநிற்கக் கூடிய கொள்கைப்பிடிப்பான வேறு அமைப்பு இந்த நாட்டில் கிடையாது.

சமீபகால உதாரணத்தைக் கருததில் கொண்டு பார்ப்பின் யூ.என்.பிக்கு எதிராக வளர்ச்சி கண்டு வந்த பொதுமக்கள் கொதிப்பினை ஏகாதிபத்தியச் சார்பு பொதுஜன முன்னணி சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கு துணை போகாத - பங்காளியாகாத எந்த ஒரு அமைப்பும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை விட வேறு உண்டா? இதனை வேறொரு விதத்திலும் கூற முடியும். பொதுமக்களை ஒழித்துக் கட்டுவதை இலக்காகக் கொண்ட ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி.-சிறீலங்கா கூட்டரசாங்கங்களின் ஆட்சிகளுக்கு எதிராக பொதுமக்களின் சார்பில் உறுதியாக நின்றுபிடித்த வேறு எந்த ஒரு அமைப்பும் பு.க.க.வுக்கு புறத்தே உள்ளதா?

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் உறுதிப் பாட்டுக்குக் காரணம் அதன் கோட்பாட்டு, அரசியல் அடிப்படையின் விஞ்ஞானபூர்வமான தன்மையேயாகும். ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டில் காலூன்றி, சகல வகையறாக்களையும சேர்ந்த தேசிய சந்தர்ப்பவாத விதிமுறைகளுக்கும் எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் விதிமுறையைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட நான்காம் அகிலத்தின்' அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியாக பு.க.க போராடியது.

1987ல் காலமான தோழர் . கீர்த்தி பாலசூரியவின் தலைமையில் 1968ல் அமைக்கப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்ப அங்கத்தவர்கள், 1964ல் சமசமாஜ கட்சி முதலாளித்துவ சிறீலங்கா கூட்டரசாங்கத்தில் நுழைந்து கொண்டதை எதிர்த்தவர்களைக் கொண்டிருந்தது. அன்று இருந்த யூ.என்.பி அரசாங்கத்தை கலைக்கவும் மக்கள் முன்னணி அரசியல் துரோகத்துக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் முன்நோக்குக்காகவும் பு.க.க. போராடியது. இந்த முன்நோக்கின் சரியான தன்மை நிரூபிக்கப்படுவதற்கு 1970ல் கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு ஆண்டு தன்னும் கழியவில்லை. இன்று போலவே அன்றும் மக்கள் முன்னணியை ஆட்சிக்குக் கொணர்வதற்குத் தொழிற்பட்ட துரோகிகள் தொழில் வெட்டு, உதவிமானியம் வெட்டு, அரிசி, தேங்காய் பஞ்சம், இளைஞர் படுகொலை , காட்டுமிராண்டி ஒடுக்குமுறை, அவசரகாலச் சட்டம், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை நசுக்குதல், இனவாத யுத்தத்துக்கு வழியமைத்தல் என்பவற்றைத் திணிக்க செயற்பட்டனர்.

மக்கள் முன்னணி அரசியலின் இந்த பேரழிவுமிக்க படிப்பினைகளில் இருந்து தீர்க்கமான படிப்பினைகளைக் கற்கவும் அந்தப் பெறுமதிமிக்க படிப்பினைகளை எதிர்கால தலைமுறையினருக்கும் வழங்கவும் ஒரு அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பவும் நனவு பெற்றோரை அணிதிரட்டவும் போராடியது பு.க.க.வே. தொழிலாளர் வர்க்கத்தினதும் பொதுமக்களதும் பெரும்பான்மையினர் அன்று அந்தப் பணியின் தீர்க்கமான தன்மையின் முக்கியத்துவத்தினை புரிந்து கொண்டார்களில்லை. அந்தளவுக்கு அவர்கள் மீண்டும் மீண்டும் மோசடிகாரர்களால் ஏமாற்றப்படவும் சங்கடங்களுக்குள் தள்ளப்படவும் கதவுகள் திறந்து இருந்தன.

பொதுமக்களிடையே பரந்திருந்த இந்த அரசியல் நனவின்மையையே மீண்டும் ஒரு தடவை மக்களின் தொண்டைக் குழிக்கு கயிறுபோடவும் இன்றைய பொதுஜன முன்னணியுடன் பிணைக்கவும் சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதத் தலைவர்களும் பயன்படுத்தினர். சமசமாஜ, கம்யூனிஸ்ட் , நவசமசமாஜ , இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணியும் இவற்றைச் சுற்றிச் சுழலும் மத்தியவாதக் குழுக்களும், ஜே.வீ.பி., தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்களும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் இங்கு சொன்னதும் இன்னும் சொல்லாததுமான அனைத்தும் ஒன்றாக சந்திரிகாவைத் தூக்கிப் பிடிக்கத் தோள் கொடுத்தனர். இன்று இதன் பெறுபேறாக தமிழர் விரோத இனவாத யுத்தம் முன்னொருபோதும் இல்லாத மிலேச்ச மட்டத்துக்கு உயர்ந்துள்ளதோடு பொதுமக்களின் சகல அடிப்படை உரிமைகளையும் கூட துடைத்துக் கட்டும் அவசரகாலச் சட்டத்துக்கும் இராணுவ மயமாக்கத்துக்கும் முழு நாடும் பலியாகியுள்ளது.

## உறுதியான அத்திவாரம்

பொதுஜன முன்னணி அரசாங்கம் திணிக்கும் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலிகடாக்களாக பொதுமக்களால் முடியாது. பொதுமக்கள் அதை நிராகரித்து போராட்டத்தில் இறங்குவது நிச்சயம். மக்களை மோசடிக்குள் தள்ள புதிய புதிய வேடங்களுடன் களத்தில் இறங்கும் இரத்தம் பூசிய நெத்தலிகளான இந்தத் துரோகிகளுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது. அதனை அரசியல் விழிப்புணர்வினைப் பெற்று, கோட்பாட்டு, வேலைத்திட்ட விளக்கத்தினை கூர்மைப்படுத்துவதன் மூலமே சாதிக்க முடியும். இங்குதான் 28 வருடகால பு.க.க.போராட்டத்தின் சக்திவாய்ந்த அத்திவாரம் அவசியப்படுகின்றது. சோசலிச சமத்துவக் கட்சி மக்களிடையே பரந்துபட்டு வளர்வது இந்த அத்திவாரத்தின் அடிப்படையிலாகும்.

சோசலிச சமத்துவக் கட்சிக்கு அவசியமான அத்திவாரத்தினை இடுவதற்கு பு.க.க. 28 வருடங்கள் பூராவும் தொழிலாளர் வர்க்கத்தையும் அதைச் சூழ ஒடுக்கப்படும் மக்களையும் வரலாற்றுப்புரட்சிகரப் பணிகளுக்காக அணிதிரட்டும் பொருட்டு அன்றிருந்துவந்த பொருளாதார , அரசியல் வரையறைகளைப் புரிந்து கொண்டே தொழிற்பட்டு வந்தது. அதனால் சோசலிசப் புரட்சியின் முன்னணியில் நிற்க வேண்டிய சமூகச் சக்தியான தொழிலாளர் வர்க்கத்துக்கு புறமுதுகு காட்டிக்கொண்டும் அதன் அனைத்துலகவாத சுயாதீன விதிமுறைகளை பகிஷ்கரித்துக் கொண்டும் குட்டிமுதலாளிதத்துவ இளைஞர்பகுதியினரை தேசியவாதத்தினால் வெறியூட்டும் முதலாளித்துவச் சார்பு சந்தர்ப்பவாதத்துக்கு எதிராகவும் பு.க.க. போராடியது. 1960பதுகளில் தோன்றிய ஜே.வீ.பி.யைப் போலவே 1970பதுகளின் நடுப்பகுதியில் இருந்து தொழிற்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தேசிய சந்தர்ப்பவாத விதிமுறைகள் அடிப்படையில் பொது மக்களுக்கும் சிறப்பாக இளைஞர்களுக்கும் வழங்கியுள்ள பேரழிவுகள் மட்டும் பு.க.க. அரசியலின் சரியான தன்மையை மீண்டும் ருசுப்படுத்தியுள்ளன. போராட்டம் போதாது. வெற்றியீட்டப் போராட வேண்டும். முதலாளித்துவ அமைப்புக்கு எதிராகப் போராடி வெல்ல' அவசியமான விஞ்ஞானபூர்வமான சோசலிசத்தின் கோட்பாடு, வேலைத் திட்டத்தினை கவனியாது போராட்டத்தினை பற்றி ஊளையிடுபவர்கள் முதலாளி வர்க்கத்துக்கு அவசியமான பேரழிவுகளை மக்கள் மீது திணிக்க உதவுகின்றார்கள். இந்த உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஜே.வீ.பி., விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்கள் சிங்கள, தமிழ் மக்களை உதைக்கும் ஆளுக்காள் முரணான இரண்டு இனவாத நிலைப்பாட்டில் இருந்தாலும் இந்த இரு சாராருக்கும் இனிமா வைக்கும் நவசமசமாஜக் கட்சி முதலாளித்துவச் சார்பு அழிவின் கேடுகெட்ட பிரதிநிதியாகச் செயற்படுகின்றது. சோசலிச சமத்துவக் கட்சி இந்த அரசியல் புற்றுநோயை பொதுஜன இயக்கத்தில் இருந்து களைந்து எறிவதற்கான சத்திர சிகிச்சைக் கருவியாகும்.

28 வருடகால அரசியல் வரலாறு கொண்ட பு.க.க. சோசலிச சமத்துவக் கட்சியாக எடுக்கும் பரிணாமத்தினை அரசியல் ரீதியில் தயார் செய்யும் பொருட்டு 1995 ஜனவரியில் இருந்து 22 மாதங்களைச் செலவிட்டது. இது இந்தப் பரிணாமம் சும்மா தன்பாட்டில் வருவது ஒன்றல்ல என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. தீர்க்கமான அரசியல் மதிப்பீடும் அதற்குப் பொருத்தமான கோட்பாட்டு பதாகையுடனும் பு.க.க. காரியாளர்கள் சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கு இந்த மாநாட்டில் இருந்து தோள் கொடுக்கத் தயாராக உள்ளதை இது காட்டுகின்றது.

அனைத்துலகக் குழுவின் 15 வது 16வது கூட்டத் தொடர்கள் இரண்டிலும் இந்தத் தீர்க்கமான திருப்பத்தின் கோட்பாட்டு, அரசியல் அர்த்தத்தினை நாம் கலந்துரையாடியுள்ளோம். அது மட்டுமன்றி அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் எமது சக சிந்தனையாளர்கள் ஏற்கனவே தமது அனைத்துலகக் குழு பகுதிகளை லீக்கில் இருந்து கட்சியாக மாற்றும் ஆழமான அரசியல் அனுபவத்தின் மூலமும் நாம் இன்று வளம் பெற்றுள்ளோம்.

சோ.ச.க.வை அமைக்க இங்கு நாம் எடுக்கும் தீர்மானம் இலங்கையினுள் அரசியல் நிலைமையின் தீர்க்கமான மாற்றத்தின் ஒரு ஆரம்பமாகும். தொழிலாளர் வர்க்கத்தையும் அதன் பின்னால் ஒடுக்கப்படும் மக்களையும் முதலாளித்துவக் கட்சிகளுடன் பிணைத்துப் போட்டுக் காட்டிக்கொடுக்கும் அரசியலுக்கு எதிரான ஒரு அரசியல் கட்சி இதில் இருந்து இந்நாட்டில் போராட்டத்தில் ஈடுபடும். அதன் அரசியல் இலக்கு ; முதலாளித்துவ ஆட்சியை தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தின் மூலம் பதிலீடு செய்வதாகும்.

1964 மாபெரும் காட்டிக் கொடுப்பின் அரசியல் விளைவுகளை அனைத்துலகக் குழு பண்பாக்கம் செய்யும் முறையை இங்கு நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். 1988 ஆகஸ்டில் எமது அனைத்துலக இயக்கம் நிறைவேற்றிய உலக முன்நோக்கு பின்வருமாறு குறிப்பிட்டது:

"இந்தக் (1964)காட்டிக் கொடுப்பு ஆசியா பூராவும் தீய விளைவுகளை சிருஷ்டித்தது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு , வேலைத் திட்டத்தினை முன்னணியாகக் கொண்டு இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசும் பொருட்டு லங்கா சமசமாஜக் கட்சி போராடியிருக்குமானால் சிதறுண்டு போக இருந்த ஸ்டாலினிச, மாஓவாத கட்சிகளின் அரசியல் அதிகாரத்துவம் இந்தக் காட்டிக் கொடுப்பினால் பலம்பெற்றது. கம்யூனிஸ்ட் கட்சியின் மாஓவாத தலைமையின் விதிமுறை மூலம்

8ம் பக்கம் பார்க்க


1789 ஜுலை 13 பாரிசில் மக்கள் காட் மீபில் கட்டிடத்தை உடைத்து ஆயுதங்களை கைப்பற்றினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை

நிராயுதபாணியாக்கப்பட்ட இந்தோனேஷியத் தொழிலாளர் வாக்கம் 1965ல் அடைந்த தோல்விக்கு ல.ச.ச.க.தோல்வி உதவியது."

1968ல் அனைத்துலகக் குழுவின் பகுதியாக பு.க.க. அமைக்கப்பட்டமை இந்தப் பப்லோவாத காட்டிக்கொடுப்பின் தீர்க்கமான படிப்பினைகளை தொழிலாளர் வர்க்கத்தின் முன்னேற்றமான பகுதியினருக்கு விளக்கி, அந்தத் துரோகத்தினை அம்பலப்படுத்துவதற்காக என்றால் இன்று பு.க.க.வை ஒரு கட்சியாக ஸ்தாபிதம் செய்வது பொதுமக்களை எமது புரட்சிகர நிலைப்பாட்டின் அடிப்படையில் அணிதிரட்டுவது தோல்வியைத் தடுக்கும் பொறுப்பைக் கையேற்பதாகும். அது ஆசியா பூராவும் சிறப்பாக இந்தியத் துணைக் கண்டத்தினுள் பிரமாண்டமான புரட்சிகரத் தாக்கங்களை ஏற்படுத்துவது நிச்சயம். எமது அங்கத்தவர்கள் அதனை நனவான முறையில் புரிந்து கொண்டு அதன் தாக்கத்தினை எமது அனைத்துலக அமைப்பினுள் பெருக்கெடுக்கும் ஒரு பொதுஜன இயக்கமாக மாற்ற வேண்டும்.

## தலைமைப் பொறுப்பு

அனைத்துலகக் குழுவின் 16வது கூட்டத் தொடரின் ஆரம்ப அறிக்கையை சமர்ப்பித்துப் பேசிய அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் கூறியதாவது : "நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முகம் கொடுத்துள்ள பிரச்சினை உருவாகியுள்ள நிலைமையை பிரதிபலிப்பதாகும். தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைக்கான போராட்டம் தொடர்பாக எமது பகுதிகள் பிரமாண்டமான செயற்பாட்டு, உத்வேக மனப்பாங்கினைக் கடைப்பிடிக்க நேரிட்டுள்ளது. லீக்கில் இருந்து கட்சியாக பரிணாமம் காண்பது என்பது தொழிலாளர் வர்க்கத்தின் தலைமைப் பொறுப்பு எமது அமைப்பிடம் திட்டவட்டமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதை ஒப்புக் கொள்வதாகும்."


உலகளாவிய ரீதியில் தொழில்ாளர்-ஒடுக்கப்படும் மக்கள் சமரசமற்ற வர்க்கப் போராட்ட நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளனர். சமரசத்தைக் கடைப்பிடிக்கும் சகல அமைப்புக்களும் பொதுமக்களின் தோல்விக்கும் முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கும் யுத்தங்களுக்கும் வழியமைக்கின்றன. இலங்கையில் வாழும் நாம் சமரசம் கொண்ட மக்கள் முன்னணி அரசியல் இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கவும் இராணுவமயத்தை விரைவுபடுத்தவும் உதவியுள்ள விதத்தினை போதுமான அளவு இத்தருணத்தில் நாம் கண்டு கொண்டுள்ளோம்.

உருவாகியுள்ள நிலைமையின் முக்கிய இலட்சணம் இடைநடுத் தீர்வுகள் இல்லாத ஒரு சமூக துருவப் படுத்தலாகும். சீர்திருத்தவாதப் பிளாஸ்டர்கள் ஒட்டுவது பற்றிய பேச்சுக்கள் பொதுமக்களை அரசியல் குருட்டுத்தனத்தினுள்ளும் சமூக ஆதாளபாதாளத்தினுள்ளும் தள்ளிவிடும். சுயாதீன அரசியல் விதிமுறையின் அடிப்படையில் மாற்று சோசலிச வேலைத்திட்டத்தின் மூலம் ஆயுதபாணியாகி, தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமை வழங்காது போகின் அது மக்களை வறுமைக்கும் பட்டினிக்கும் தொற்று நோய்களுக்கும் பலியாக்கும் திசையில் இட்டுச்செல்லும்.

சோசலிச சமத்துவக் கட்சி ஸ்தாபிதத்தின் அர்த்தம், தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் தலைமைப் பொறுப்பை எமது தோளில் ஏற்பதாகும். எனவேதான் அது நாம் செய்து கொள்ளும் மூலோபாய ரீதியான ஒரு மாற்றம் எனச் சுட்டிக்காட்டுகின்றோம்.

ஒடுக்கப்படும் மக்களது ஆதரவினைப் பெறும் தொழிலாளர் வர்க்கத்தின் அரச அதிகாரத்துக்கான புரட்சிகரப் போராட்டத்தின் பிரச்சாரகர்களாக மட்டுமன்றி அந்தப் போராட்டத்தின் அமைப்பாளனாகவும் சோ.ச.க. தொழிற்படும்.

பிரச்சாரக செயற்பாட்டுக் கட்டத்தில் காரியாளர்களை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டு இருந்ததன் பின்னர் கட்சி



இந்திய சோசலிச தொழிலாளர் கழக செயலாளர் அருன்குமார் மாநாட்டில் உரைநிகழ்த்துகிறார்

திட்டவட்டமாக எடுக்க வேண்டிய அடுத்த தீர்க்கமான பரிணாமத்தை பிரச்சாரகர்களுக்கு எதிராக ட்ரொட்ஸ்கி 1934ல் பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார்: "உளவியல், கருத்துக்கள், பழக்க வழக்கங்கள் பொதுவில் சமூகத்திலும் வர்க்கத்தினுள்ளும் புறநிலை உறவுகளின் அபிவிருத்திகளுக்குப் பின்னால் பின் தங்கி நிற்கின்றன. புரட்சிகர அமைப்புக்களின் உள்ளும் கூட இறந்தவை உயிர்வாழ்வனவற்றின் மீது தமது கைகளைப் போட்டுக் கொண்டுள்ளன. பிரச்சார நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்ட தயாரிப்பு காலப்பகுதி எமக்கு அது இல்லாமல் ஒரு அடி தன்னும் முன்னோக்கிச் செல்ல முடியாத காரியாளர்களை வழங்கியது. ஆனால் இதே காலப்பகுதி மரபுரிமையாக ஒரு புதிய கட்சியையும் ஒரு புதிய அனைத்துலகத்தையும் நிர்மாணிப்பதற்கு பெரிதும் சாராம்சத்தில் கருத்துப்பாடு அமைப்பினுள் வெளிப்பாடாகவும் இடமளித்தது. இந்தக் கருத்துப்பாடு அவற்றின் இரசாயனரீதியில் பரிசுத்தமான வடிவில் வெளிப்பாடாவது போர்டிகிஸ்டுகளின் இறந்த கும்பல் மூலமாகும். எவ்விதத்திலும் வாசிக்க முடியாத இலக்கியங்கள் மூலம் அவர்களின் நிலைப்பாடுகளின் சரியான தன்மையை பாட்டாளி வர்க்க முன்னணிப் படையணியினால் புரிந்துகொள்ள முடியும் எனவும், சமீபத்திலோ அல்லது காலம் கடந்தோ தமது கும்பலைச் சூழ அவர்கள் சரியான முறையில் அணிதிரள்வார்கள் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். புரட்சிகர நிகழ்வுகள் மூலம் தொழிலாளர் வர்க்கம் தவிர்க்க முடியாத விதத்தில் எம்மை நோக்கித் தள்ளப்படுவார்கள் எனவும் அவர்கள் கூறிக் கொள்கின்றார்கள். கருத்தியல்வாத வீரப்பிரதாபங்களால் மூடிமறைக்கப்பட்ட இந்த மந்த கதியான எதிர்பார்ப்புக்களுக்கு மார்க்சிசத்துடன் எந்தவிதமான உறவும் கிடையாது . புரட்சிகர நிகழ்வுகள் எப்போதும் தவிர்க்க முடியாத விதத்திலும் சகல கும்பல்களதும் தலைக்கு மேலாக பெருக்கெடுக்கின்றது. நன்றாக இருப்பின் பிரச்சாரவாத இலக்கியங்கள் மூலம் ஒருவர் முதலாவது காரியாளனைப் போதிக்கலாம். ஆனால் ஒரு வட்டத்திலோ அல்லது ஒரு வகுப்பு அறையிலோ வாழாத வர்க்க சமூகத்தில் வாழும் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையணியை அதன் மூலம் அணிதிரட்டிவிட முடியாது..

"புரட்சிகர நிகழ்வுகளில் மக்கள் அந்த அல்லது இந்தக் கும்பலது முகவரியை விசாரித்துக் கொண்டு இருப்பதில்லை. அவற்றின் மேலாகப் பாய்கிறார்கள். பெருக்குக் காலத்தில் - புரட்சிக்கு தயாராகும் காலப்பகுதியில் பரந்த தொழிலாளர் வர்க்கப் பகுதியினரின் நனவுடன் தொடர்புபடுவதற்கான புள்ளியை தேடிக்கொள்ள ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

"வேறு வார்த்தைகளில் சொன்னால் அடிப்படைக் கொள்கைகள் சம்பந்தமாக முழுமையாக உறுதிப்பாட்டைப் பேணும் அதே சமயம் வெறும் பிரச்சார காலப் பகுதியில் மரபுரிமையாகக் கொண்டுள்ள குறுங்குழுவாத அழுத்தங்களில் இருந்து புரட்சியாளர் தீர்க்கமான முறையில் விடுபட்டாக வேண்டும்."

வர்க்க சமரசத்துக்கும் மக்கள் முன்னணி அரசியலுக்கும் எதிராக பு.க.க உறுதியான போராட்டத்தில் ஈடுபட்டதனால் எம்மை குறுங்குழுவாதக் குழு எனப் பெயர் சூட்ட சகல துரோக அதிகாரத்துவங்களும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் முன்வந்தனர் என்பதை நீங்கள் சகலரும் அறிவர். அது மட்டுமா? இந்த வம்பளப்புக்களுக்கு முரணாக துரோகித் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்களை அம்பலப்படுத்துவதுடன் மட்டும் பு.க.க. நின்றுவிடாததாலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முகம்கொடுத்த சகல பிரச்சினைகளைப் பற்றியும் அத்தியாவசியமான வேலைத்திட்டமும் கையுமாக நாம் போராடியதனாலும் அரசியல் ரீதியில் முன்னேற்றமான - நனவான பகுதியினரை எமது அமைப்புக்கு வெற்றிகொள்ளும் வாய்ப்பு எமக்கு கிட்டியது.

எனினும் நாம் இன்று சோசலிச சமத்துவக் கட்சியை அமைத்துக் கொள்வதன் மூல ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றம் வெறு பெயர் மாற்றம் மட்டுமல்ல என நா குறிப்பிடும்போது அதில் தீர்க்கமா முன்னோக்கு , அரசியல் இலட்சணங்க உள்ளன. அது என்னவெனில் பொதுமக்கள் சகல அன்றன்றாடைய பிரச்சினைகளிலு முதலாளித்துவ அமைப்புக்கு எதிரா அவர்களை அணிதிரட்டும் வழிநடாத்து அமைப்பாக சோசலிச சமத்துவக் கட்சியு அதன் ஒவ்வொரு அங்கத்தவரும் தனிப்பட் முறையிலும் ஈடுபடுகின்றனர் என்பதாகும்

## சமூக சமத்துவத்துக்கான போராட்டம்

நாம் எடுக்கும் மாற்றம் வெறும் பெய மாற்றம் இல்லாது போகினும் எமது புதி கட்சிக்கு நாம் பெயர் சூட் வேண்டியேற்பட்டது. அங்கு ஒரு பிரச்சினை உருவாகியது. பல அர்த்தபுஷ்டியான பெயர்க முன்னர் துரோகிகளால் சூட்டப்பட் மாசுபடுத்தப்பட்டுள்ளதே அப்பிரச்சினை புரட்சிக் கட்சிக்காக ஆரம்பத்தி பயன்படுத்தப்பட்ட சமூக ஜனநாயகம் என் பெயர் முதலாம் உலக யுத்தத்தின் மத்தியி இடம்பெற்ற சம்பவங்களாலும், பின்னர் உல சோசலிச இயக்கத்துக்கு லெனின் பிரேரித் கம்யூனிஸ்ட் என்ற பெயர் ஸ்டாலினிஸ்டுகளா இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டத நான்காம் அகிலத்தின் அமைப்புக்கள் பல்வே பெயர்களைக் கொண்ட லீக்குகளாக விளங்கி காலங்கள் முடிவடைந்து உல சோசலிசத்துக்காக முன்னணியில் நிற்கும் இன்றைய காலப்பகுதியில் அதற்கு பொருத்தமான பெயரில் நாம் விளங்கவேண்டும். நாம் அதற்கு சோசலிச சமத்துவக் கட்சி என்ற பெயரைத் தெரிவு செய்துள்ளோம்.

இந்த சோசலிச சமத்துவக் கட்சி என்ற பெயர் ஆழமான வரலாற்று

# அமெரிக்க ஐக்கிய அரசுகளி

அமெரிக்க ஐக்கிய அரசுகளின் சோசலிச சமத்துவக் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த தீர்க்கமான மாநாட்டுக்கு அதன் புரட்சிகர நல்வாழ்த்துக்களை வழங்குகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்வது என்ற தங்களின் தீர்மானம் , அவுஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் புதிய அரசியல் கட்சிகளை அமைத்ததுடன் சேர்ந்து எமது அனைத்துலக இயக்கத்துக்கான தீர்க்கமான முன்னோக்கிய பயணத்தைக் குறித்து நிற்கின்றது.

இன்று நீங்கள் மேற்கொண்டு வரும் அரசியல் நடவடிக்கைகளின் பெறுபேறாக சோசலிச சமத்துவக் கட்சி எதிர்வரும் காலத்தில் இந்தியத் துணைக்கண்டம் பூராவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் மக்கள் புரட்சிகர இயக்கத்தின் தலைமையாகத் தோன்றும் என நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

இலங்கையினுள் முதலாளித்துவத்தின் ஆழமான நெருக்கடியினாலும் சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகத் தோன்றும் வெகுஜன இயக்கத்தினாலும் தோற்றுவிக்கப்படும் அவசர பணிகளுக்கு உங்களின் மாநாடு முகம் கொடுத்துள்ளதை நாம் அறிவோம். சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டி எழுப்புவதன் மூலம் நீங்கள் இந்த இயக்கத்தை சோசலிசத்துக்கான போராட்டத்தினுள் முன்னெடுத்துச் செல்ல தயாராக உள்ள ஒரே தலைமையாக இக்கட்சியை முன்வைக்கின்றீர்கள்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 28 வருடகால வரலாற்றின் மூலம் இந்த வரலாற்றுப் பொறுப்புக்கு தோள்கொடுக்கும் பொருட்டு தங்களின் கட்சி தயார் செய்யப்பட்டுள்ளது. சோசலிச அனைத்துலகவாதத்தினை பாதுகாக்கும் பொருட்டான நீண்ட போராட்டத்தின் மூலம் உங்களின் பு.க.க. இலங்கையினுள் ட்ரொட்ஸ்கிசத்தின் ஏக பிரதிநிதியாக ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சி தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் ,ஜே.வீ.பி. வரையிலான சகல வகையறாக்களையும் சேர்ந்த குட்டி முதலாளித்துவ எதிர்ப்பாளர்களுக்கு எதிராக நீங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று நலன்களைப் பேணிக் காத்துள்ளீர்கள்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே சிங்கள சோவினிசத்துக்கும் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் கீழான இனவாத யுத்தங்களுக்கும் எதிராக ஒடுக்கப்படும் தமிழ் மக்களை காக்க ஈவிரக்கமின்றிப் போராடி வந்துள்ளது. அவ்வாறே சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சிங்கள-தமிழ் வெகுஜனங்களை ஒன்றிணைக்கப் போராடியதன் மூலம் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பிற்போக்கு முதலாளித்துவ பிரிவினைவாத வேலைத் திட்டத்தினை எதிர்த்து வந்துள்ளது.

அதுமட்டுமன்றி பு.க.க.வும் அதன் தலைமையும் மிகவும் தீர்க்கமான விதத்தில் 1960பதுகளில் பப்லோ, மண்டேலின் ஆதரவாளர்கள் தொடக்கம் 1980பதுகளில் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைமை வரை அனைத்துலக ட்ரொட்ஸ்கிசத்தினைக் கரைத்துவிடச் செய்யப்பட்ட சகல முயற்சிகளுக்கும் எதிராக அனைத்துலக ட்ரொட்ஸ்கிசத்தினை காப்பதில் ஒரு மிக முக்கியமான பாத்திரத்தினை வகித்துள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முக்கியத்துவம் தொடர்பாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் உள்ளும் அதன் பாதுகாப்பு இயந்திரத்தின் உள்ளும் இன்று எந்தவிதமான குழப்ப நிலைமையும் கிடையாது. அது இலங்கையினுள் இந்த அரசாங்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிராக இருந்துவரும் புரட்சிகர பாட்டாளி வர்க்க எதிர்க் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தோழர். செல்லையா இராஜ்குமாரை கைது செய்ததும் தொடர்ந்து சிறைவைத்துள்ள முறைமைக்கும் எமது இயக்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள ஏனைய அடக்குமுறைகளுக்கும் அர்த்தம் அதுவேயாகும்.

எமது சகல வேலைகளும் ஒரு அடிப்படையான மூலோபாயப் பணியைச் சுற்றியே சுழல்கின்றன. புதிய கட்சியின் பணிகளுக்கு வழிகாட்டும் முன்நோக்கினை தெளிவுபடுத்துவதில் இருந்து தொழிலாளர்களுக்கு வழிகாட்ட எமக்கு இடமளிக்கும் வேலைத் திட்டத்தினை வரைவது வரையில் நாம் போராடுவது தொழிலாளர் வர்க்கத்திற்கு அரசியல் ரீதியில் கல்வி புகட்டுவதற்கேயாகும்.சோசலிசப் புரட்சி அடிப்படையாகக் கொள்ள வேண்டிய மார்க்சிச அரசியல் கலாச்சாரத்தினை மீண்டும் கட்டியெழுப்ப நாம் முயற்சிக்கின்றோம். இந்த நூற்றாண்டினுள் அனைத்துலக தொழிலாளர் வர்க்கமும் அதன் நனவான புரட்சிகர முன்னணிப் படையணியும் கடந்து சென்றுள்ள பிரமாண்டமான அனுபவங்களை உள்ளீர்த்துக் கொள்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தினை உள்ளடக்கியுள்ளது. இன்றைய உலக சமூக நிலைமையின் கீழ் அந்த முக்கியத்துவம் உள்ளிரக்கப்பட்டுள்ளது.

வர்க்க சமுதாயம் உருவான நாளில் இருந்து சொத்துடமை வர்க்கத்துக்கும் சொத்துடமையற்ற வர்க்கத்துக்கும் அதாவது சமுதாயத்தின் பெரும்பான்மையினர் இடையே சமூக அசமத்துவம் காணப்பட்டது. இந்த சமூக அசமத்துவம் மனித இனத்தினால் இனங்காணப்பட்டது மட்டுமல்லாது அதன் கொடூரமான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக வெடித்த மக்கட் கிளர்ச்சியினாலும் புரட்சிகளைப் பற்றிய அறிக்கைகளாலும் மனித இனத்தின் வரலாறு நிறைந்து போயுள்ளது. அடிமைச் சமுதாயத்துக்கு எதிராக வெடித்த மக்கள் கிளர்ச்சிகளின் அர்த்தம் சமூக அசமத்துவத்தை வெற்றி கொள்வது அல்லாமல் வேறு என்ன? நிலமானித்துவ மன்னர் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட அடிமை விவசாயிகள் நினைத்தது சமூக அசமத்துவத்தின் தீயபண்புகளை அகற்றுவது இல்லையா? பெரிய பிரித்தானியாவின் வெஸ்ட் மினிஸ்டர் காலனித்துவ நாடுகளின் மக்களுக்கு தனியான வரி விதித்ததன் மூலம் காட்டிய பாகுபாட்டுக்கு எதிராக அல்லவா 1775 அமெரிக்க புரட்சி ஏற்பட்டது ? இதனால் ஊக்குவிக்கப்பட்ட பிரான்சிய முதலாளி வர்க்கம் 1789ல் தமது முதலாளித்துவப் புரட்சியின் பதாகையில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற சுலோகங்களைப் பொறித்துக் கொண்டது.

இதன் அர்த்தம் என்ன? சமூக சமத்துவமின்மையை ஒழிப்பது சகல வெகுஜன இயக்கங்களதும் ஆழமான அபிலாசையாகவும் இலக்காகவும் இருந்து வந்துள்ளன என்பதேயாகும். எனினும் மக்களின் அபிலாசைகள் இன்னமும் பலனளிக்கவில்லை. அதன்பொருட்டு இடம்பெற்ற முதலாவது சோசலிசப் புரட்சி முயற்சியான 1917 ரூஷ்ய அக்டோபரும் ஸ்டாலினிஸ்டுகளால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. 20ம் நூற்றாண்டினளவில் ஏகாதிபத்தியம் வரை வளர்ச்சிகண்ட உலக முதலாளித்துவ அமைப்பின் கீழ் சோசலிச பரிமாணத்துக்கான புறநிலை நிலைமைகள் உருவாகி இருந்தது என்பதும் புரட்சித் தலைமை பற்றிய பிரச்சினை அதனால் தீர்க்கமானது என்பதும் அதன் மூலம் வெளிப்படையாகியது. எவ்வாறெனினும் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் புறக்கணிப்புக்கள், கவலையீனம், காட்டிக்கொடுப்புக்கள் புறநிலை நிலைமைகள் தொடர்பாக தாக்கங்களை ஏற்படுத்துவதும் அந்த நிலைமைகள் புரட்சிக்கு எதிராக பலப்படுத்துவதும் இடம்பெறுவது இயக்கவியல் ரீதியிலாகும். காட்டிக்கொடுப்பின் துணையினால் பலம்பெறும் முதலாளித்துவ முறை சந்தர்ப்பவாதத்துக்கு கதவுகளைத் திறக்கின்றது. அதன்மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் குழப்பநிலையும் புரட்சிகர உயிர்த்துடிப்பு சிதறடிக்கப்படுவதும் உதயமாகின்றது.

ஸ்டாலினிஸ்டுகளதும் சமூக ஜனநாயகவாதிகளதும் உதவியுடன் தொடுக்கப்பட்ட இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அரசியல் உறுதிப்பாட்டுக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமான அவகாசம் கிடைத்தது. பொதுமக்களிடையே அவமானம் கண்ட ஸ்டாலினிசத்தினது சீர்திருத்தவாதத்தினதும் சடலங்களை புதைகுழியில் இருந்து தோண்டி எடுக்க பப்லோவாதம் தோன்றியது இச்சமயத்திலேயே. தொழிலாளர் வர்க்கத்தின் அரைகுறை கோரிக்கைகளை இட்டுநிரப்ப முதலாளித்துவ அமைப்புக்கு கிடைத்த வாய்ப்பினை பயன்படுத்தி தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாளர்களை தேசிய சந்தர்ப்பவாத விலங்குகளால் பிணைத்துப்போட அச்சமயத்தில் இடமளிக்கப்பட்டது. முதலாளித்துவ அமைப்புக்கு இயைந்துபோன தலைவர்களால் உருவாக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினை நிராயுதபாணியாக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இன்றைய முதலாளித்துவ பொருளாதார வீழ்ச்சி நிலைமையின் கீழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை முன்னொரு போதும் இல்லாத பேரழிவுக்குள் தள்ளும் வேகமான வேலைத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துகின்றது.

சமூக அசமத்துவம் பிரமாண்டமான வளர்ச்சி காண்கிறது. சமூகத்தின் ஒரு தரப்பில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் கரங்களில் செல்வம் மலையெனக் குவியும் அதே வேளையில் மக்கள் பட்டினிக்குள் தள்ளப்படுகின்றனர். சமூக சமத்துவத்துக்கான அவசியம் சூறாவளிபோல் மக்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு அவர்களைத் தட்டி எழுப்புவது இந்த சமூக துருவப்படுத்தல் நிலைமையின் கீழாகும்.

நாசம்மிக்க முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக மக்கள் விழிப்படைந்து வருவதால் அவர்கள் முதலாளித்துவ ஆட்சியுடன்சமரசம் செய்து கொள்ளும் வாய்ப்பு அடைபட்டுப் போகின்றது. முதலாளித்துவ பொருளாதார வீழ்ச்சி நிலைமையின் கீழ் சமூக சமத்துவத்துக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு இடைநடுத் தீர்வு இல்லாது போயிற்று. முதலாளித்துவ செழிப்புக் காலத்தில் முதலாளித்துவ ஆட்சிக்கும் அதன் எடுபிடி அதிகாரத்துவத்துக்கும் இயைந்து போன தேசிய சந்தர்ப்பவாதம் சமூக சமத்துவம் பற்றிய நிலைப்பாட்டுக்கு எதிராகத் துள்ளிக் குதிப்பதற்குக் காரணம் இதுவேயாகும்.

1953ல் அனைத்துலகக் குழுவில் இருந்து விலகிய பபலோவாத்தின் சகல கடைகெட்ட அரசியல் போக்குக்களுக்கும் அடிபணிந்து போன பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி அனைத்துலகக் குழுவில் இருந்து விலகி பத்தாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தமது அதிகாரத்துவ , முதலாளித்துவ தன்மையை தெளிவுபடுத்தி உள்ளது. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஷீலா டோரன்ஸ் கும்பல் சமூக சமத்துவம் பற்றிய கோரிக்கையின் கடைகெட்ட எதிரிகளாக தோன்றியுள்ளனர்.

ஷீலா டோரன்ஸ் சமூக சமத்துவக் கோரிக்கை முதலாளித்துவக் கோரிக்கை என்கிறாள். அவளது பார்வையில் ஆட்சி செலுத்துவது முதலாளி வர்க்கம் மட்டுமேயாகும். சமத்துவம் பற்றிய கோரிக்கை முதலாளி வர்க்கம் இந்த உலகின் வெளிச்சத்தைக் காண்பதற்கும் முன்னரே மக்களின் பிரார்த்தனையிலும் நடைமுறையிலும் இலக்காக இருந்தது என்பதை புரிந்து கொள்ளவும் அவள் தவறியுள்ளாள்.

அது மட்டுமா? முதலாளி வர்க்கம் சமத்துவத்துக்காக பிரச்சாரம் செய்துகொண்டு அசமத்துவத்தை தீவிரமாக்கிய வரலாற்றுக் கட்டங்களும் உள்ளன என்பதும் முதலாளித் துவச் சார்பு சந்தர்ப்பவாதத்தினால் குருடாகிப் போன அவளின் பார்வையில் விழவில்லை.

நிலமானித்துவ பழைய முடியாட்சிகளுக்கு எதிராகத் தோன்றிய பரந்த வெகுஜன அபிப்பராயத்தினை முதலாளித்துவம் அடிப்படையாகக் கொண்டது. அந்த பூரண சமூக சமத்துவத்தினை ஸ்தாபிதம் செய்யும் பொருட்டு சொத்துடமை வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்துக்கு வல்லமை இருந்ததனால் அல்ல . எனினும் அன்றிருந்த நிலமானித்துவ சமூக அசமத்துவம் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் அபிவிருத்திக்கு தடையாக இருந்ததே காரணம். அவர்கள் அசமத்துவத்துக்கு எதிராகப் போராடியது அன்றைய கட்டத்தில் சமூக சமத்துவத்தினை முழுமையாக பிரத்தியட்சமாக்கக் கூடிய வர்க்கமான - அவ்வாறே முதலாளித்துவ அமைப்பின் அபிவிருத்தியுடன் வளர்ச்சி காண வேண்டிய வர்க்கமான தொழிலாளர் வர்க்கம் இன்னமும் வளர்ச்சி கண்டு இருக்கவில்லை. அதன் காரணமாக அந்த வர்க்கத்தின் இலக்குகளை சுயாதீனமாக முன்வைபபதற்கான அவகாசமும் அன்று இருக்கவில்லை. அதனால் முதலாளி வர்க்கம் பொதுமக்களை தம்மைச் சூழ அணிதிரட்டிக் கொள்ளும் பொருட்டு சமூக அசமத்துவம் பற்றிய சுலோகத்தின் உரிமையாளனாகத் தோன்ற முடிந்தது. எவ்வாறெனினும் அந்த தோற்றம் சவால் இல்லாமல் உருவாகி வந்த ஒன்றல்ல. ஆங்கிலேயப் புரட்சியில் டிக்கேர்ஸ், லெவலர்ஸ் என்ற பெயரால் அழைக்கப்பட்ட மக்கள் குழுக்களாலும் பிரான்சுப் புரட்சியில் பபுப் முன்னணியிலான குழுக்களாலும் முதலாளித்துவ வர்க்கத்தின் அன்றன்றாடைய சமத்துவங்களின் வரையறைகளுக்கு எதிராக சமூக சமத்துவத்தின் ஒடுக்கப்படும் மக்களின் சவாலைத் தோற்றுவித்தது.

தொழிலாளர் வர்க்கம் ஒரு சமூக சக்தியாக வளர்ச்சி கண்டு கொண்டிருந்த கால கட்டத்திலும் கூட முதலாளி வர்க்கம் சமத்துவம் பற்றிய சுலோகத்தின் உரித்தாளர்களாக தோன்றியமை அரசியல் காரணத்தினாலேயே தவிர சமூக சமத்துவம் பொதுமக்களின் அர்த்தமுள்ள அவசியமாக இல்லாது

10ம் பக்கம் பார்க்க

## ன் சோசலிச சமத்துவக் கட்சியின் நல்வாழ்த்துக்கள்

நீங்கள் உங்களின் மாநாட்டை நடாத்துவது அரசியல் அடிப்படையில் உறுதியான அத்திவாரத்தின் மீதாகும். ஸ்டாலினிசத்துக்கும் பப்லோவாதத்துக்கும் மிகச் சமீபத்தில் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சித் தலைமை ட்ரொட்ஸ்கிசத்தைக் காட்டிக் கொடுத்ததற்கும் எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட வரலாற்றுப் போராட்டத்தின் மூலம் அது தயார் செய்யப்பட்டது.

இந்தப் போராட்டங்களில் சம்பந்தப்பட்ட வரலாற்று பிரச்சினைகள் ஒவ்வொன்றிலும் அனைத்துலகக் குழு முழுமனே சரியானதென நிரூபிக்கப்பட்டது.

சோவியத் யூனியன் சிதறுண்டு போனமை ஸ்டாலினிசத்தை எதிர்த்து ட்ரொட்ஸ்கிசத்துக்காக அனைத்துலகக் குழு முன்னெடுத்த போராட்டத்தின் சரியான தன்மைக்கு ஒரு சிகரமாக மிளிர்கின்றது. கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலங்களுக்கு முன்னர் பு.க.க. அமைக்கப்பட்ட போது சகல வகையறாக்களையும் சேர்ந்த முதலாளித்துவ தேசியவாதிகள், குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள், திரிபுவாதிகள் மாஸ்கோ அதிகாரத்துவத்துடன் இணைந்து கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை நிராகரித்தமையும் தேசிய முதலாளித்துவத்தினால் முன்வைக்கப்பட்ட நானாவித அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதை நியாயப்படுத்தும் பொருட்டு "சோவியத் மாதிரி" கயின் ஆதரவை நாடினர்.

அனைத்துலகக் குழு மட்டுமே ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சிப் பாத்திரத்தினை வலியுறுத்தியதன் மூலம் ட்ரொட்ஸ்கிசத்தின் முன்நோக்கினைப் பாதுகாத்தது. இந்த மதிப்பீட்டின் சவால் செய்ய முடியாத ஊர்ஜிதம் - இராணுவ ரீதியான தோற்கடிப்பு விதிமுறைகள் மூலம் அல்லாது அதிகாரத்துவத்தினது நனவான நடவடிக்கையின் மூலம் - சோவியத் யூனியனை கலைத்து முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்ததன் மூலம் ஆகியது.

அவ்வாறே இந்த அபிவிருத்தியானது பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழு நடாத்திய நீண்ட போராட்டத்தின் தீர்க்கமான முக்கியத்துவத்தினையும் சுட்டிக்காட்டுகின்றது. ஸ்டாலினிசத்துக்கு முற்போக்குப் பாத்திரமோ அல்லது புரட்சிகரப் பாத்திரமோ வழங்கியது பப்லோவாதமேயாகும். அது ஒன்றில் அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் பற்றிய கோட்பாட்டை அல்லது ஆளும் அதிகாரத்துவத்தின் ஏதோ ஒரு தட்டினர் அரசியல் புரட்சிக்குத் தலைமை வழங்கும் என்ற கோட்பாட்டை முன்வைத்தது. வரலாறு இந்த அதிகாரத்துவம் எதிர்ப்புரட்சியின் மருத்துவமாதாக மட்டுமே சேவை செய்ய முடியும் என்ற ட்ரொட்ஸ்கியின் தீர்க்கதரிசனத்தை நேரடியாக ஊர்ஜிதம் செய்து - இந்தக் காலவதியான கருத்துப்பாட்டினை நிரந்தரமாக நிராகரித்துள்ளது.

பப்லோவாதம் ஸ்டாலினிசத்தின் வெளித்தோற்றச் சக்திக்கு இயைந்து போனதுடன் கூடி ஒடுக்கப்படும் நாடுகளில் முதலாளித்துவ தேசியவாதம் கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட புரட்சிகர இயலுமைக்கு முண்டுகொடுப்பதன் மூலம் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை நிராகரித்தது. தேசியவாதத்துக்கு இந்த திரிபுவாத அடிபணிவு இலங்கையினுள் எந்த ஒரு நாட்டுக்கும் குறையாத விதத்தில் பேரழிவுகளையும் துயரமான விளைவுகளையும் ஏற்படுத்த இருந்தது.

பப்லோவாதிகள் காஸ்ட்ரோவாதம், விவசாயிகள் கெரில்லாவாதம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், சன்டினிஸ்டா இயக்கம், பீ.எல்.ஓ. போன்ற முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைத் தழுவிக் கொண்டனர். அவர்கள் சோசலிஸ்ட் புரட்சியின் காவியாக தொழிலாளர் வர்க்கத்தைப் பதிலீடு செய்யும் சாத்தியத்தை இவை அனைத்துக்கும் கற்பித்தனர்.

கடந்த தசாப்தம் முதலாளித்துவ தேசியவாதத்தின் பாத்திரம் பற்றிய மார்க்சிச ட்ரொட்ஸ்கிச ஆய்வுகளிற்கு ஒரு பிரமாண்டமான ஊர்ஜிதத்தினை வழங்கியது. இந்த இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒரே நெழிவுசுழிவு பாதையிலேயே பின்தொடர்ந்துள்ளன. சியோனிச ஆக்கிரமிப்பாளருக்காக அரபாத ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியங்களில் பொலிஸ் வேலையில் ஈடுபட இணங்கிவிட்டு இப்போது மேற்குக்கரையில் அமெரிக்க இராணுவத்தினை நிறுத்தும்படி அழைப்பு விடுக்கின்றார். சன்டினிஸ்டாக்கள் தமது முன்னைய எதிரிகளான சீ.ஐ.ஏ . ஆதரவு கொண்ட்ராஸ்களுடன் தேர்தல் கூட்டு அமைத்துக் கொண்டுள்ளனர். நெல்சன் மண்டேலா வின் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தென் ஆபிரிக்காவில் முதலாளிததுவ நலன்களை [illegible] பொறுப்பை ஏற்றுள்ளது.

இந்த அபிவிருத்திகள் ஒடுக்கப்பட்ட நாடுகளில் முதலாளி வர்க்கத்தின் துரோகப் பாத்திரத்தினை மீள ஊர்ஜிதம் செய்பவை மட்டுமேயாகும். இந்நாடுகளில் ஜனநாயக, சோசலிச புரட்சிகளின் கூட்டுப் பணியினைத் தொழிலாளர் வர்க்கத்தினதும் அதன் புரட்சிக் கட்சியினதும் தலைமையில் மட்டுமே அமுல் செய்ய முடியும் என்பதை வரலாறு நிதர்ஷனமாக்கியுள்ளது. இலங்கையில் பல தசாப்தங்களாக அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பேணிக் காத்த முன்நோக்கு இதுவேயாகும்.

இறுதியாக நாம் பிரித்தானியத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தேசிய சந்தர்ப்பவாத தலைமையுடனான பிளவுக்கு வருகின்றோம். இந்த அமைப்பின் அரசியல் நெழிவுசுழிவுகள் இது பேணிக்காத்துவந்த ஒவ்வொரு அடிப்படைக் கொள்கைகளையும் 1973ம் ஆண்டளவில் இருந்து கைவிடத் தள்ளியது. இப்போது கிளிவ் சுலோற்றர் தொழிலாளர் புரட்சிக் கட்சியை ஒரு புதிய கட்சிக்கான கமிட்டிக்குள் அடியோடு கரைத்துவிட அழைப்புவிடுத்துள்ளார். இந்தக் கமிட்டி எந்தவிதமான முன்நோக்கோ அல்லது வேலைத் திட்டமோ இல்லாமல் பிரித்தானியத் தொழிலாளர் வர்க்கத்துக்கு மற்றொரு மத்தியவாதப் பொறிக்கிடங்கைத் தோண்டும் நோக்குடன் ஸ்டாலினிச குப்பை கூழங்களுடனும் மத்தியதர வர்க்க எதிர்ப்பாளர்களுடனும் ஒரு கூட்டிற்கு உரம் போடுவதற்காகச் செல்லும் சுலோட்டரின் வெறும் வாகனம் மட்டுமே. 1985-86 பிளவின் போது நாம் கூறிய அனைத்தும் நிருபிக்கப்பட்டுள்ளன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் உச்சக் கட்டத்தை அடைந்த கடந்த தசாப்தத்தின் நீண்டதூரம் செல்லும் மாற்றங்கள் ஒரு உலகளாவிய ரீதியில் அரசியல் சக்திகளின் உறவுகளை பரிணாமம் காணச் செய்துள்ளது. ஒரு முழு வரலாற்றுக் காலப்பகுதி பூராவும் தொழிலாளர் வர்க்கத்தினுள் மேலாதிக்கம் செலுத்திய பழைய இயக்கங்களதும் கட்சிகளதும் வீழ்ச்சிகளுடன் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளும் தமது அரசியல் ஆதிக்கத்தினை ஸ்தாபிதம் செய்வதற்கும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையை வெற்றிகொள்வதற்கும் சாத்தியமும் அவசியமும் எழுந்துள்ளது.

அரசியல் சக்திகளின் பரிணாமம் கண்ட உறவுகள் எமது சொந்த இயக்கத்தினுள் மிகவும் [illegible] வெளிப்பாட்டைப் [illegible] 1985-86 பிளவின் சிறப்பு முக்கியத்துவம் அதுவே. நிஜ ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தேசிய சந்தர்ப்பவாதிகளை வெளியேற்றினர். இதன் பெறுபேறாக எமது இயக்கம் அதன் வரலாற்றில் மிகவும் உக்கிரமானதும் பயன் மிக்கதுமான அனைத்துலகச் சகவாழ்வு பதாகையை உயர்த்திப் பிடிக்கின்றது. இந்தச் சகவாழ்வு அனைத்துலகக் குழுவின் ஒரு கோட்பாட்டு, அரசியல் மறுமலர்ச்சிக்கான அடிப்படையை இட்டது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தலைமையும் இந்த அபிவிருத்தியில் ஒரு முக்கியமான பாத்திரத்தினை வகித்துள்ளன.

இந்தத் தீர்க்கமான காங்கிரசில் தோழர். விஜே டயசுக்கும் இலங்கைப் பகுதியின் தலைமையின் ஏனையோருக்கும் எமது மனமுவந்த நல்வாழ்த்துக்களை அனுப்புவதில் நாம் பெருமையடைகின்றோம்.

### கீர்த்தி பாலசூரிய

எமது கட்சியின் அபிவிருத்தியின் அத்தகைய ஒரு வரலாற்றுத் திருப்பு முனையானது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை ஸ்தாபிப்பதிலும் இலங்கையிலும் அனைத்துலகிலும் ட்ரொட்ஸ் கிசத்தினை பேணி, அபிவிருத்தி செய்யும் போராட்டத்திலும் அதிமுக்கியமான பாத்திரத்தினை வகித்த தோழர் கீர்த்தி பாலசூரியவின் நினைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தியாக வேண்டும் எனக் கோருகின்றது.

தோழர்.கீர்த்தி இன்று எம்முடன் இல்லாதபோதிலும் இந்த முக்கிய தருணத்தில் அவர் எமது சிந்தனையில் கலந்து கொண்டுள்ளார். அவர் போராடிப் பாதுகாத்த கொள்கைகளும் முன்நோக்கும் உங்கள் மாநாட்டின் நடவடிக்கைகளதும் சோசலிச சமத்துவக் கட்சியை ஸ்தாபிதம் செய்வதனதும் ஊடாக இலங்கையினதும் முழு இந்தியத் துணைக்கண்டத்தினதும் தொழிலாளர்களதும் எதிர்வரும் போராட்டங்களுக்கு வழிகாட்டும்.

அமெரிக்க ஐக்கிய அரசுகளின் சோசலிச சமத்துவக் கட்சியின் முழு அங்கத்தவர்களதும் சார்பில் உங்கள் மாநாட்டின் வெற்றியிலும் சோசலிச அனைத்துலகவாதத்தின் வேலைத்திட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கத்தை வென்றெடுக்கும் தலைவிதி சம்பந்தமாகவும் ஆழமான நம்பிக்கையைத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்.

மனமார்ந்த நல்வாழ்த்துக்களுடன்
டேவிட் நோர்த்
தேசியச் செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை

9ம் பக்கத் தொடர்ச்சி

போனதன் பெறுபேறாக அல்ல. உதாரணமாக பிரித்தானிய ஏகாதிபத்தியக் காலனித்துவ ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்ட இந்தியத் துணைக்கண்ட மக்கள் தாம் அனுபவித்த பாகுபாடுகள், ஒடுக்குமுறைகள், அடிபணிவுகளுக்கு எதிராக சமத்துவத்துக்காக எடுத்த முயற்சியின் முக்கிய பேச்சாளனாக விளங்கியது முதலாளித்துவ இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியேயாகும். தேசிய காங்கிரசின் தலைவர்களான காந்தி, நேரு போன்றவர்களுக்கு அது உரித்தானது சிறப்பாக 1920பதுகளின் கடைப்பகுதியில் இருந்து ஸ்டாலினிஸ்டுகள் சமூக சமத்துவத்தின் நிஜ பிரதிநிதியான தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் விதிமுறையை மக்கள் முன்னணியின் கீழ் காட்டிக்கொடுத்ததன் காரணமாகவாகும். இதனால் காலனித்துவத்தின் கீழ் நசுக்கப்பட்டு ஒழிக்கப்பட்டு வந்த கோடானுகோடி இந்திய மக்கள் விடுதலை பெற்றது சமத்துவத்துக்கான முதலாளித்துவ கோரிக்கையினாலாகும் என முதலாளித்துவ கையாட்களால் மட்டுமே குறுக்கிக் கொள்ள முடியும்.

ஷீலா டோரன்ஸ் அத்தகைய ஒருவர் என்பது அவள் இலங்கையையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் மூலம் மேலும் தெளிவாகின்றது. அவளது தத்துவார்த்த சஞ்சிகை சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்கத் தயாராகுவதன் மூலம் பு.க.க. சமசமாஜவாதத்தினை நோக்கிக் குழிபறிந்து போவதாக குறிப்பிட்டுள்ளது. 1935 டிசம்பரில் அமைக்கப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுஜன கட்சி பாவித்த சமசமாஜ என்ற பெயரையிட்டு எமக்கு எதுவிதமான கோபதாபமும் கிடையாது. 1960பதுகளின் இறுதியில் இருந்து சமசமாஜக் கட்சிக்கு எதிராக கோட்பாட்டு, அரசியல், நடைமுறை ரீதியில் உறுதியாகப் போராடிய அமைப்பு எம்மால் நிறுவப்பட்டது சமூக அசமத்துவத்தின் சிருஷ்டிகர்த்தாக்களான முதலாளி வர்க்கத்தினதும் அதனது ஏகாதிபத்திய எஜமானர்களதும கையாட்களாகச் சமசமாஜக் கட்சி பரிணாமம் கண்டதாலாகும்; தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடையே அதை ஒழித்துக்கட்டவாகும்.

ஒற்றைக் கைவிரல் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையான ஆதரவாளர்களை இந்நாட்டில் கொண்ட டோரன்ஸ் சமசமாஜக் கட்சியையும் உள்ளடக்கிய பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்கத் தனது ஆதரவாளர்களை வழிநடாத்திய டோரன்ஸ் பு.க.க. எடுக்கும் பரிணாமம் சமசமாஜவாதத்தினை நோக்கிய குழிபறிவாகும் எனக் கூறுவது உண்மையில் சிரிப்புக்கிடமானதாகும். சமசமாஜக் கட்சி பிற்காலத்தில் கைகழுவிவிட்ட போல்ஷிவிக்-லெனினிஸ்ட் சமசமாஜ பாரம்பரியங்களினை நாம் மக்களிடையே புனர்ஜீவனம் செய்துவிடப் போகின்றோம் என்பதையிட்டு இவர்கள் கலக்கம் அடைந்துள்ளார்கள்.

அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் தோழர். டேவிட் நோர்த்தை தாக்குகையில் டோரன்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நோர்த் குறிப்பிடும் விதத்தில் .பல இலட்சக் கணக்கான அங்கத்தவர்களையும பரந்த அளவிலான வளங்களையும் கொண்ட தொழிற்சங்க அமைப்புக்களும் பயனற்றவை. அவரின்படி இந்த அமைப்புக்களின் வர்க்கத் தன்மையை தீர்மானம் செய்வது அதிகாரத்துவம் செய்யும் செயற்பாடுகளாலாகும். மீண்டும் சொன்னால் இது ஒரு தீர்க்கமான நிலைப்பாடு அல்ல. அது முட்டாள்த்தனமான அனுபவவாதமாகும்."

ஒரு அமைப்பின் வர்க்கத் தன்மை நிர்ணயம் செய்யப்படுவது அதன் தலைமையையும் வேலைத் திட்டத்தினையும் பொருட்படுத்தாமல் பெரும்பான்மை அங்கத்தவர்களின் தன்மையினால் எனக் கொண்டால் எந்த ஒரு மக்கள் முன்னணி மட்டுமல்ல முதலாளித்துவக் கட்சியும் கூட தொழிலாளர் வர்க்கத்தினதோ அல்லது ஒடுக்கப்படும் மக்களதோ அமைப்பாகிவிடும். ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ குவாமிங்டானின் பின்னால் உள்ள பொதுமக்கள் மாடுகளா என புகாரின் ட்ரொட்ஸ்கியிடன் கேட்ட கேள்விக்கு ட்ரொட்ஸ்கி ஒரேயடியாக அளித்த பதில்: "ஆம் மாடுகள் தான்." இதை நாம் டோரன்சுக்கு நினைவூட்டுகின்றோம். ஸ்டாலினிஸ்டுகளால் குவாமிங்டானுடன் பிணைக்கப்பட்ட மக்கள் ஷியாங்கைசேக்கினால் மாடுகளைக் காட்டிலும் படுமோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டமை இந்த விளக்கத்தை நிரூபித்தது.

டோரன்சின் அறிக்கையில் உள்ள தொழிற்சங்கங்களின் பரந்த வளங்களைப் பற்றிய குறிப்புக்கள் விசேட தொடர்புடையவை. தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் பரந்த வளங்கள் மூலம் இறக்காது உயிர்பிழைத்துள்ள ஒரு அமைப்பின் தலைவி அவள். அவளது கைகளில் இருந்து கீழே விழும் இரத்தம் தோய்ந்த இறைச்சித் துண்டுகளை உண்ணும் சந்தர்ப்பவாதிகள் மட்டுமே அவளுடன் சேர்ந்து கொள்வர் என்பதை அவள் நன்கு அறிவாள். எனவேதான் அவள் அவ்வாறு வலியுறுத்துகிறாள்.

1985ல் அனைத்துலகக் குழு ஷீலா டோரன்சில் இருந்தும் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஏனைய தேசியவாத சந்தர்ப்பவாதிகளில் இருந்தும் பிளவுபட்டது எவ்வளவு வரலாற்று ரீதியில் நியாயபூர்மவமானது என்பது இன்று நன்கு தெளிவாகியுள்ளது. தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத முன்நோக்கின் அடிப்படையில் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கு வழிகாட்டும் பொருட்டு அது வழிதவற முடியாத ஒரு புரட்சிகர நடவடிக்கையாகும்.

1980பதுகளிலும் 1990களின் ஆரம்பத்திலும் உலகப் பொருளாதார, அரசியல் வட்டாரங்களில் இடம்பெற்ற பண்பு ரீதியான மாற்றங்களையிட்டு விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கு அனைத்துலகக் குழுவுக்கு அவகாசம் கிடைத்தது, தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளில் இருந்து பிளவுபட்டதன் பின்னரேயேயாகும். அனைத்துலகக் குழுவினர் தவிர்ந்த வேறு எந்த ஒரு அரசியல் இயக்கமும் பூகோளமயமான முதலாளித்துவ பொருளாதாரத்தின் பெறுபேறாக உலக அரசியல் நிலைமையில் ஏற்பட்டுள்ள ஆளமான மாற்றங்களை உரியமுறையில் பண்பாக்கம் செய்வதில் வெற்றி கண்டதில்லை.

1990 பெப்ரவரியில் பேர்ளின் சுவர் தகர்க்கப்பட்ட போது முதலாளிகளும் அதன் கைக்கூலி எழுத்தாளர்களும் எழுப்பிய காதடைக்கும் கூச்சல்களுக்கு மத்தியிலும் அனைத்துலகக் குழு செய்த ஆய்வு இன்று எழுத்துக்கு எழுத்து நிரூபிக்கப்பட்டுள்ளது. அன்று அனைத்துலகக் குழு அறிக்கை கூறியது இதுதான்:

"கிழக்கு ஐரோப்பிய அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியை முழுமையாக உலகப் பொருளாதாரத்தில் இடம்பெறும் அபிவிருத்திகளுக்குப் புறம்பாக விளக்கிவிட முடியாது. கிழக்கு ஐரோப்பாவின் சமூகக் குமுறல்கள் அம்பலமாக்குவது, ஸ்டாலினிசத்தின் நெருக்கடியை மட்டும் அல்ல. அவை உலக ஏகாதிபத்தியத்தின் பொது நெருக்கடியின்மிகவும் முன்நேற்றமான அரசியல் வெளிப்பாடுகள். கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டாலினிச ஆட்சியானது தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சியை நசுக்கும் பொருட்டு ஸ்டாலினிஸ்டுகளின் ஆதரவுடன் இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதியில் ஏகாதிபத்தியவாதிகளினால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசியல் அமைப்பின் ஒரு அத்தியாவசிய அங்கமாகியது. இந்த ஆட்சியின் வீழ்ச்சி யுத்தத்தின் பின்னைய முழு அமைப்பினதும் வீழ்ச்சியைக் குறித்து நிற்கின்றது."

அனைத்துலக சோசலிச முன்னோக் கானது உலகத் தொழிலாளர் வர்க்கம் தமது வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றிக் கொள்வதற்கு அன்றி பாதுகாத்துக் கொள்வதற்கும் கூட இன்றியமையாதுள்ளது. அதற்குக் காரணம் உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான மாற்றங்களேயாகும். இன்று முதலாளித்துவ உலகப் பொருளாதாரம் பூகோளமயமாகி உள்ளது.

இந்தப் பூகோளரீதியான பொருளாதாரத்தினை நோக்கிய பரிணாமம் திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஸ்தாபிதம் செய்யப்பட்ட பொருளாதார அமைப்பு உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் வேகமான வளர்ச்சிக்கு இடமளித்து செழிப்புக் காலகட்டத்துக்கு வழவகுத்தாலும் 1960பதுகளில் இலாப வீதத்தில் நீண்டகால சுழற்சி கீழ்நோக்கிச் செல்லத் தொடங்கியது. இந்த இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு ட்ரான்ஸ்நஷனல கூட்டுத்தாபனங்கள் சில உற்பத்தித் துறைகளை பின்தங்கிய நாடுகளுக்கு மாற்றத் தொடங்கின. ஆரம்பத்தில் பெருமளவுக்கு பின்தங்கிய நாடுகளுக்கு அங்ஙனம் மாற்றப்பட்டது ஆடைக் கைத்தொழில், எலக்ரொனிக் போன்ற உற்பத்தி துறைகளேயாகும்.

இந்த மாற்றத்தினை ஏற்படுத்துகையில் பிரமாண்டமான ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களினால் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டது ஒடுக்கு முறை நிலைமைகளின் கீழ் குறைந்த சம்பளத்துக்கு சேவையில் ஈடுபடுத்தக் கூடிய தொழிலாளர்களைக் கொண்ட நாடுகளாகும். ஆசியாவில் அப்பட்டமான இராணுவ ஆட்சி திணிக்கப்பட்டுள்ள தென்கொரியா, தாய்வான், பிலிப்பைன்ஸ், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா போன்ற நாடுகள் இலாப வெறி கொண்ட ஏகபோக கம்பனிகளை முன்கூட்டியே ஈர்த்துக் கொள்வதில் வெற்றி பெற்றதற்குக் காரணம் அதுவேயாகும். இந்தியாவிலும் இலங்கையிலும் தொழிலாளர் வர்க்கம் வெற்றி கொண்டிருந்த உரிமைகளையும் அவற்றை உறுதிசெய்யப் பயன்படுத்திய வர்க்க அமைப்புக்களையும் இக்கட்டத்தில் சிதறடிக்க முடியாமல் போனதையிட்டு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இன்னமும் கூக்குரலிட்டுக் கொள்கின்றார்கள். 1953ல் யூ.என்.பி. அரசாங்கத்தின் கீழ் ஜே.ஆர். ஜயவர்தனவின் வரவுசெலவுத்திட்டம் உதவிமானியங்களை ஒழித்துக்கட்ட எடுத்த முயற்சிக்கு ஆட்சியை தூக்கிவீசும் அளவுக்கு வளர்ச்சி கண்ட ஹர்த்தால் மூலம் பதில் கிடைத்தது. அத்தகைய போராட்டங்கள் மூலம் தமதும் பொதுமக்களதும் உரிமைகளைக் காக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்கம் தலையிட்டதைப் பற்றி முணுமுணுப்போர் ஆளும் வர்க்கத்தினர் மட்டுமல்ல. 1956ல் லங்கா சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்கவுடன் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைத்திருக்க வேண்டும் என சமசமாஜக் கட்சித் தலைவி விவியன் குணவர்தனா சமீபத்தில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியதன் மூலம் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு சேவை செய்ய முன்நிற்பதில் சமசமாஜக் கட்சியின் தாமதம் அதிகரித்து விட்டது என்பதை அவர் காட்டிக்கொண்டுள்ளார். ஜே.ஆர்.ஜயவர்தன காட்டிக்கொண்ட சிங்கப்பூர் மாதிரியை இந்நாட்டினுள் முன்கூட்டியே அமுல் செய்வதில் தாம் இடையூறாக இருக்கவில்லையா என்ற பாணியில் சமசமாஜக் கட்சி பச்சாதாபப்பட்டுக் கொண்டுள்ளது. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதில் இருந்து அங்கும் இங்குமாக பிரிந்து அமைப்புக்களை அமைத்துக் கொண்டவர்கள் அங்ஙனம் பச்சாதபப்படாததற்குக் காரணம் தொழிலாளர் வர்க்கத்துக்கு கால்விலங்குமாட்ட அவர்களுக்கு வாய்ப்பு இல்லாததேயன்றி ஆரம்பத்தில் இருந்து - 1940களில் இருந்து தமக்கு விருப்பம் இல்லாமல் இருந்ததால் அல்ல.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் பல்வேறு நாடுகளின் உள்ளும் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மாற்றுவது அந்தந்த நாடுகளினுள் தேசியப் பொருளாதாரத் துறையினையும் அங்குள்ள நிலைமைகளையும் கணக்கில் கொண்டேயாகும். அதாவது அந்தந்த நாடுகளினுள் தேசிய பொருளாதார அமைப்பினுள் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தியை நடாத்துவதாகும். அதன் அர்த்தம் மூலதன முதலீட்டின் துறைகள் இன்னமும் வர்த்தக, நிதித்துறைகளுடன் நிறுத்திக் கொள்வதாகும். உற்பத்தியை அந்தந்த தேச அரச நிலைமையின் கீழ் நடாத்துவதாகும். உதாரணமாக அமெரிக்க போட் கம்பனி பிரித்தானியாவினுள் தமது உற்பத்தி பக்டரியை நிறுவினாலும் அது பிரித்தானிய வரிமுறை, ஏற்றுமதி, இறக்குமதி விதிகளைப் போலவே தொழிலாளர் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடாத்துவதாகும். அது ட்ரான்ஸ்நஷனல் போட் கம்பனி மூலம் பிரித்தானிய போட் மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்வதாகும்.

இலாப வீதத்தினை உச்சமாக்கிக் கொள்ளும் பொருட்டு கையாளப்பட்ட இந்த முறை 1970பதுகளில் மீண்டும் நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. இந்த நெருக்கடி ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் இலாப, நட்ட கணக்குகளில் எண்ணிக்கை குறிப்புக்களாக மட்டும் அல்லாது அரசியல் அமைப்பில் வெளிப்பாடான புரட்சிகர மக்கள் கிளர்ச்சியாகவும் வெளிப்பாடாகின. 1968ல் பிரான்சில் பொதுவேலைநிறுத்தம் ஆரம்பமாகி ஐரோப்பாவினை குலுக்கிய புரட்சிகர போராட்ட அலைகள் இந்தியத் துணைக்கண்டம் உட்பட்ட பின்தங்கிய உலகினையும் அதிரவைத்தது. இந்தப் போராட்ட அலைகள் ஸ்பானியா, போர்த்துக்கல் போன்ற நாடுகளில் பாசிச சர்வாதிகாரங்களை வீழ்ச்சி காண வைத்ததோடு இந்தியத் துணைக்கண்டத்தை மதரீதியில் பிரித்து, 1947ல் அமைத்த பாகிஸ்தான் அரசுக்கும் பெரும் அடி கொடுப்பதில் வெற்றி கண்டபோதிலும் ஏகாதிபத்திய உலக அமைப்பையும் முதலாளித்துவ ஆட்சிகளையும் ஒழித்துவிடுவதில் வெற்றி பெறவில்லை. இந்தப் பலவீனம் உலக சோசலிச முன்நோக்கினைக் காட்டிக் கொடுத்தவர்களின் துரோகத்தையும் அத்தகைய முன்நோக்கினால் ஆயுத பாணியாகாமல் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் விடுதலையை அடையவே முடியாது என்பதையும் மீண்டும் அம்பலத்துக்குக் கொணர்ந்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால் அந்தப் பிரமாண்டமான புரட்சிகர போராட்டங்களின் தலைவிதியை -ட்ரொட்ஸ்கிச நிரந்தரப்புரட்சி கோட்பாட்டை நிராகரித்தமை, அச்சந்தர்ப்பத்தில் வெளிப்பாடான சமூக சக்திகளுக்கு அடிபணிந்துபோன பப்லோவாதம் உட்பட்ட சகல திரிபுவாதிகளதும் கடைகெட்ட பிற்போக்கினை காட்டியது. இந்தப் பிற்போக்கு நீரோட்டத்துக்கு எதிராகப் போராடியது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளும் மட்டுமேயாகும். தோழர். கீர்த்தி பாலசூரியவின் தலைமையின் கீழ் 1968ல் இருந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உறுதியாக வேரூன்றி நின்றது, அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிச அரசியல் விதிமுறைகளிலும் அடிப்படைக் கொள்கைகளிலுமேயாகும்.

1968-75 இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றிய புரட்சிகர போராட்ட அலைகளை நசுக்குவதில் துரோகத் தொழிலாளர் அமைப்புக்களின் உதவியுடன் வெற்றிகண்ட உலக முதலாளித்துவம் பூகோளரீதியான பொருளாதார முறைக்கு கதவுகளைத் திறந்தது. 1970-77 வரை சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் துரோகத்தினைப் பயன்படுத்தி தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் இளைஞர்களையும் இரத்தம் தோய்ந்த ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கிய முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கம், 1977ல் யூ.என்.பி.க்கு கதவுகளை திறந்துவிட்டு இந்த பூகோளரீதியான முதலாளித்துவ பொருளாதார முறையுடன் இலங்கையை இணைக்க வழிவகுத்தது.

- தொடரும் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களைக் காப்பது

# முதலாளித்துவ அரசுக்கு எதிராக நேருக்கு நேர் நடாத்தும் போராட்டம்

(சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை-1996-12-01)

சோசலிச சமத்துவக் கட்சி ( முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) யும் நீர்கொழும்பு, தொடுவாவை மீனவர் நடவடிக்கைக் குழுவும் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்யும் முக்மாக தொடுத்துள்ள பிரச்சாரத்தினால் பொதுஜன முன்னணி அரசாங்கத் தலைவர்களில் ஒருவரான மீன்பிடி, நீர்வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் மில்றோயி எஸ். பெர்னாந்து 1996 நவம்பர் 22ம் திகதி தினமின பத்திரிகைக்கு விடுத்துள்ள நீண்ட அறிக்கையில் மீனவர்களை விடுதலை செய்ய இபும்பெறும் சோ.ச.க. பிரச்சாரத்தைத் தாக்கியுள்ளார். பொதுஜன முன்னணி அரசாங்கம் மீனவர்களின் சார்பில் நின்றுவருவதாகக் காட்டும் கதையளப்புக்களில் ஈடுபட்டுத் தோல்வி கண்டுள்ளார்.

பிரதி மீன்பிடி அமைச்சரின் அறிக்கை "இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள எமது மீனவர்கள் தொடர்பான கவனம் குறைவு எனக் கூறுவது ஆதாரம் அற்றது" என்ற தலையங்கத்துடன் வெளிவந்திருந்தது. சோசலிச சமத்துவக் கட்சியும் நடவடிகைக் குழுக்களும் மீனவர்களை விடுதலை செய்ய இடம் பெற்றுவரும் பிரச்சாரம் பற்றிய விடயங்களை விளக்கும் முகமாக நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியான விபரங்கள் தினமின பத்திரிகையில் வெளியானதே இதற்கு காரணம்.

இந்தியச் சிறைகளில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் பற்றி அரசாங்கத்தினதும் பொறுப்புள்ளவர்களதும் கவனம் கிடையாது என ஒரு அமைப்பினரால் கூறப்பட்டுவருவது ஆதாரம் இல்லாத அறிக்கையாகும் எனக் குறிப்பிட்டுள்ள பிரதி அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது "இது சம்பந்தமாக திடீர் துயரம் உருவாகி பல்வேறு விடயங்களைக் கூறிக்கொண்டு பிரச்சாரம் நடாத்திய நீர்கொழும்பு-தொடுவாவ மீனவ நடவடிக்கை குழுக்களின் அங்கத்தவர்கள் எனப்படுபவர்களோ அல்லது சோசலிச சமத்துவக் கட்சி எனக் கூறிக்கொள்ளும் கோஷ்டியினரோ கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு நாள் தன்னும் அமைச்சர் இந்திகா குணவர்தனவையோ அல்லது தம்மையோ சந்தித்து இது பற்றிய விடயங்களைக் கலந்துரையாடவில்லை" என மில்ரோய் பெர்னாந்து கூறுகின்றார். தம்மைச் சந்தித்து இருந்தால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் அரசாங்கம் மீனவர்களுக்கு ஆற்றிய சேவையை ஆதாரத்துடன் விளக்கி இருக்க முடியும் எனவும் பிரதி அமைச்சர் பெரும் செருக்குடன் பேசியுள்ளார்.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதனால் அமைக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுக்களும் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களின் பின்னால் புலம்பித் திரிவதைவிட மாற்று அனைத்துலகவாத சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மீனவர்கள் உட்பட தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளில் செயற்படுகின்றது.

முதலாளித்துவ அரசாங்கத்தில் இருந்தும் கட்சிகளில் இருந்தும் விடுபட்டு சுயாதீனமான அரசியல் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் தமது பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் சுயமுயற்சியை நோக்கி இட்டுச் செல்ல சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது. அது சமசமாஜ-கம்யூனிஸ்ட்-நவசமசமாஜ-இ.தொ.கா- ஜே.வீ.பி.- விடுதலைப் புலிகள் உட்பட்ட அனைத்து முதலாளித்துவச் சார்பு அமைப்புக்களின் கொள்கைகளுக்கு நேர் எதிரானது. பொதுஜன முன்னணியை சிங்காசனத்தில் ஏற்ற முதுகு கொடுத்த மேற்சொன்ன அரசியல் அமைப்புக்கள் மோசடியானவையாகவும் பொது மக்களைச் சிக்கலில் மாட்டும் இயக்கங்களாகவும் ஏற்கனவே அம்பலமாகி உள்ளன.



இந்திய மங்களூர் சிறைகளில் சிறைவைக்கபட்டிருந்த இலங்கை மீனவர்களை விடுதலை செய்யும் படி சோசலிச சமத்துவக் கட்சி கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரில் நடாத்திய மரியல் போராட்டம்

பொதுத் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும்-ஒன்று தன்னும் தப்பாது - மீறியுள்ள பொதுஜன முன்னணி அமைச்சர்களிடம் பிச்சை எடுப்பதன் மூலம் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என அரசியலுக்குப் புத்தம் புதிதாகக் காலடி வைத்தவர்களால் மட்டுமே எண்ண முடியும். இந்நிலைமையில் அமைச்சரிடமும் தம்மிடமும் முறைப்பாடு செய்ய வராததையிட்டு பிரதி அமைச்சர் குற்றச்சாட்டு தொனியில் பேசுவது மேனியில் ஆடை உடுத்திக் கொண்டா எனக் கேட்பது நியாயமானது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மீனவர்களுக்கு மட்டும் அல்ல இந்நாட்டின் ஏனைய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கும் பொதுஜன முன்னணி ஆற்றியுள்ள சரிகளைப் பற்றி ஆய்வுசெய்ய கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களின் மனைவியர்கள், குழந்தை குட்டிகள், உற்றார் உறவினர்களும் தேய்ந்த விளக்குமாறும் கையுமாகத் தோன்றினால் அது அப்படி ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியது அல்ல.

நவம்பர் 11ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மீனவர்களைக் கைது செய்தது தொடர்பாகவும் அவர்களை விடுதலை செய்ய செயற்படாதது சம்பந்தமாகவும் மீனவர் நடவடிக்கைக் குழுக்களும் சோசலிச சமத்துவக் கட்சியான நாமும் அரசாங்கத்தை நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளோம். அந்தக் குற்றச்சாட்டு சரியானது. ஆதாரம் நிறைந்தது. அந்த ஆதாரம் மக்களிடையே ஊர்ஜிதம் ஆகியுள்ளது.

இந்தியாவிலும் மாலைதீவிலும் கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்களிடையே ஏழு எட்டு மாதங்கள்- ஒரு வருடத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களும் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்ய என பிரதி அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது நவம்பர் மாதத்தில். அக்டோபர் 22ம் திகதி பிரதி அமைச்சரைச் சந்திக்க சென்ற மீனவப் பெண்களின் தூதுக்குழுவுக்கு நிதி இல்லாததால் ஒன்றும் செய்ய முடியாது எனத் தாம் சொன்னதையும் தீர்வு கிட்டும் வரை அங்கிருந்து வெளியேறப் போவதில்லை என மீனவப் பெண்கள் உறுதியாகக் கூறியதைத் தொடர்ந்து, ஜனாதிபதியுடன் பேசி இந்தியாவுக்கு யாரையேனும் அனுப்புவதாக அன்று தாம் வாக்குறுதி அளித்ததையும் பிரதி அமைச்சர் மூடி மறைக்கின்றார். இப்போது கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அது பிரதி அமைச்சரினதும் அரசாங்கத்தினதும் திடீர் தூதுக்குழுவினால் ஏற்பட்டது அல்ல. அது சோசலிச சமத்துவக் கட்சியும் மீனவ நடவடிக்கைக் குழுக்களும் அவர்களின் வழிநடாத்தலின் கீழ் பொதுவில் மீனவர்களும் நடாத்திய பிரச்சாரத்தின் பெறுபேறாகும். மீன்பிடி அமைச்சருக்கு தமது பிரதிநிதிகளை இந்தியாவுக்கு அனுப்பும் அவசரம் ஏற்பட்டதும் இந்த பிரச்சாரத்தின் பெறுபேறாகவேயாகும். பிரச்சாரத்தினைச் சூழ மக்கள் சுயாதீனமாக அணிதிரள்வதைக் கண்டதால் ஏற்பட்ட கலக்கத்தின் பெறுபேறாகும்.

தொடுவாவை, நீர்கொழும்பு மீனவ நடவடிக்கைக் குழுக்களும் சோசலிச சமத்துவக் கட்சியும் மீனவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாக ஜூலை 21ம் திகதி நீர்கொழும்பிலும் ஆகஸ்ட் 30ம் திகதி சிலாபத்திலும் பகிரங்கக் கூட்டங்களை நடாத்தியது. இவர்களை விடுதலை செய்யும்படி கோரி மீனவர் மற்றும் மக்கட் பகுதியினரிடையே சேகரித்த கையொப்பங்களைக் கொண்ட பெட்டிசம் கடந்த செப்டம்பர் 9ம் திகதி இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பிரச்சார இயக்கத்தினை இந்திய மக்களிடையே எடுத்துச் செல்ல சோசலிச சமத்துவக் கட்சியின் இந்திய தோழமை இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகம் முன்வந்தது. இந்த மீனவர்களை விடுதலை செய்யும்படி கோரி சென்னையில் ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் கையெழுத்திட்ட பெட்டிசத்தை இந்திய உள்நாட்டு அமைச்சருக்கு அனுப்பிவைத்த சோ.தொ.க. மங்களூர் சிறையில் தள்ளப்பட்ட மீனவர்களின் சார்பில் ஒரு வழக்கறிஞரையும் நியமனம் செய்தது. இந்த வழக்கறிஞருடன் சேர்ந்து இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பிரதிநிதி ஒருவர் அச்சமயத்தில் இம்மீனவர்களை விடுதலை செய்யுமாறு இந்திய அரசாங்கம் இட்டிருந்த உத்தரவை உடனடியாக அமுல் செய்யத் தலையிடுமாறு நெருக்கும் பொருட்டு அக்டோபர் 11ம் திகதி சென்னையில் உள்ள இலங்கை பிரதி தூதுவரை சந்தித்தது. நவம்பர் 11ம் திகதி எமது அமைப்பினால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாடும் நவம்பர் 12ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரில் இடம்பெற்ற மீனவர்களின் மனைவியர்கள், பிள்ளைகள், உறவினர்களைக் கொண்ட மறியல் இயக்கத்தையும் எமது அமைப்பு வெற்றிகரமான முறையில் நடாத்தியது. இது எமது பிரச்சாரத்தின் உச்சக் கட்டமாக விளங்கியது. இவை சோசலிச சமத்துவக் கட்சியும மீனவர் நடவடிக்கைக் குழுக்களும் மீனவர்களை விடுதைலை செய்யும் பொருட்டு நடாத்திய போராட்டத்தின் முக்கிய சில கட்டங்களாகும்.

தம்மை விடுதலை செய்யும் பொருட்டு போராடி வருவதையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் (இன்றைய சோசலிச சமத்துவக் கட்சி) இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கும் நன்றி தெரிவித்தும் மீனவ முதலாளிகள் தம்மை நடுவழியில் கைவிட்டதையிட்டு குற்றம்சாட்டியும் மங்களூரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் எமக்கு அனுப்பிய கடிதம் முதலாளிகளுக்கும் முதலாளிகளின் அரசாங்கத்துக்கும் செவிட்டில் விழுந்த அறையாகியது.

மங்களூர் சிறையில் இருந்து 8-10-96ல் மீனவர்கள் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மங்களூர் சப் ஜெயிலில் இருந்து எழுதுவது . டில்லியில் இருந்து றிலீஸ் ஆடர் மங்களூர் வந்துவிட்டது. அதை முன்வந்து கொண்டுவர ஒருவரும் தற்போதைக்கு இங்கு இல்லை. எங்களது முதலாளிமார் ஒருவராவது இங்கு இல்லை. எல்லாரும் சிறீலங்கா போய்விட்டார்கள். இந்த செய்தியை எங்களுக்கு வீடுகளில் இருந்து வந்த கடிதம் மூலமாக அறிந்து கொண்டோம். முதலாளிமார் சிறீலங்கா போனது எங்களுக்குத் தெரியாது. எம்மிடம் சிலோனுக்கு போகிறதென்று சொல்லாமல் போய்விட்டார்கள். நாங்கள் இங்கு அந்தரித்துக் கொண்டுள்ளோம். எங்கள் மீது கருணை கொண்டு எங்களை விடுவிப்பதற்காக இந்தக் கடிதம் கண்டவுடன் வருகை தருமாறு மிகுந்த பணிவன்புடன் வேண்டி நிற்கிறோம். றிலீஸ் ஆடர் வந்துள்ள விபரம் ஜெயிலில் உள்ள வார்டர்களே சொல்லுகிறார்கள். எங்களுக்கு முதலாளிமார் பற்றிய நம்பிக்கை அற்றுப்பிபோய்விட்டது. இந்தச் செய்தி நம்பத் தகுந்த செய்தி . உண்மையென்று நம்பலாம். எனவே இந்தக் கடிதம் கண்டவுடன் தகுந்த ஆயத்தங்களுடன் புறப்பட்டு வந்துபோக எல்லோரும் ஆவலோடு அழைக்கின்றோம். 27 பேருக்கும் ஒரே நாளில் விடுதலை கிடைக்கும். உங்களது உதார சேவை எங்களுக்கு அவசியம் தேவைப்படுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சேவைகளை நாடு அறியட்டும். இத்துடன் உங்கள் வரவை எதிர்பார்த்து விடைபெறுகின்றோம். பு.க.க. கழகம் வாழ்க

ஒரு விசேட வேண்டுகோள்: வரும்போது லாயரையும் கூட்டிவரும்படி கேட்டுக் கொள்கின்றோம். "

பிரதி அமைச்சர் வாயடித்துக்கொள்ளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சாதனைகள் பற்றி ஒரு அபிப்பராயத்தை உருவாக்கிக் கொள்ள இந்தக் கடிதம் மட்டும் போதாதா ?

முதலாளிகளுக்கு மீனவர்கள் கொடுத்த செவிடு வெடிக்கும் அறை காரணமாக செட்டை கட்டிக் பறக்க முயற்சிக்கும் பிரதி அமைச்சர் மில்றோய் பெர்னாந்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இங்ஙனம் கைது செய்யப்பட்டுள்ள படகுச் சொந்தக்காரர்கள் அதைப்பற்றி பணம் கொடுத்து கைது செய்யப்பட்டுள்ளவர்களைக் காப்பாற்ற அக்கறை காட்டாததால் இவை அனைத்தினதும் பேரில் அரசாங்கத்தின் உதவி நாடப்படுவதால் மீன்பிடி அமைச்சின் மீது பிரமாண்டமான பொறுப்புக்கள் இருந்து கொண்டுள்ளன."

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சு மீன்பிடி முதலாளிகளதும் பன்நாட்டு மீனவக் கம்பனிகளதும் ஒரு அமைச்சாகும். அது ஏழை மீனவர்களின்

15ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்க்கர்ஸ் லீக்கும் சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதமும்

1996 பெப்ரவரி 12ம் திகதி அமெரிக்க ட்ரொட்ஸ்கிச அமைப்பான வேர்க்கர்ஸ் லீக் ஒரு புதிய அரசியல் கட்சியை - சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்கும் அதனது தீர்மானத்தை அறிவித்தது.1996 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தினை அத்தகைய ஒரு அரசியல் கட்சியினை அமைக்கும் அவசியத்தினை தொழிலாளர் வர்க்கத்துக்கு விளக்கப் பயன்படுத்த அது தீர்மானித்தது.

இங்கு வேர்க்கர்ஸ் லீக்கின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் 1995 ஜூன் 25ம் திகதி இடம்பெற்ற அங்கத்தவர் கூட்டத்தில் வழங்கிய அரசியல் அறிக்கை பிரசுரமாகின்றது. இதில் வேர்க்கர்ஸ் லீக் எந்த அரசியல் , கோட்பாட்டு அத்திவாரத்தில் இந்த புதிய கட்சியை ஸ்தாபிதம் செய்தது என்பதை விளக்கியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சோசலிஸ்ட் லேபர் லீக்கும் அத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 3

### தொழிற் கட்சிக்கான பிரச்சர்ரம் (1972-1978)

இதைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் வேர்க்கர்ஸ் லீக் தொழிற் சங்கத்தின் உள்ளேயான அதன் வேலைகளை தொழிற் கட்சிக்கான பிரச்சாரம் கிளர்ச்சிகளின் அடிப்படையில் அபிவிருத்தி செய்தது. 1968-75 இடைப்பட்ட வருடங்கள், கைத்தொழில் போர்க் குணத்தில் ஒரு மாபெரும் எழுச்சியைக் கண்டது. மின்சாரக் கைத்தொழில், மோட்டார் கைத்தொழில், கிழக்கு, மேற்கு கரை துறைமுகங்கள், 1970ல் தபால் தொழிலாளர்களின் வெளிநடப்பு, 1971ல் ஒரு வேலைநிறுத்தம் இல்லாமல் உருக்குத் தொழிலாளர் வெற்றிகண்ட சம்பளத் தீர்வு, 1971 ஆகஸ்ட் 15ல் சம்பளம், விலைகள் மீது 90 நாட்கள் உறைவு கொள்கையை திணிக்கும் நிக்சனின் தீர்மானத்துக்கும் முத்தரப்பு - அரசாங்கம் - நிர்வாகம் - தொழிலாளர் - சம்பள சபையை நிர்மாணிக்கவும் தூண்டியது. உறைவு காலம் முடிவடைந்ததும் வருடாந்த சம்பள அதிகரிப்பை 5.5 வீதத்துக்கு கட்டுப்படுத்துவது அதன் நோக்கமாக இருந்தது. இன்று அந்த அளவிலான வருடாந்த சம்பள அதிகரிப்பை வழங்குவது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தாராண்மையாக கணிக்கப்படும். AFL அமைப்பின் பிற்போக்கு மரபுகளதும், அரசியலதும் அவதாரமான ஜோர்ஜ் மீனி இதனை அமெரிக்கத் தொழிலாளர் மீதான ஒரு யுத்தப் பிரகடனமாகவும் அமெரிக்காவில் பாசிசத்தினை நோக்கிய முதலாவது அடியாகவும் கண்டித்தார். இருப்பினும் அவர் சம்பள சபையில் கடமையாற்ற இணங்கினார். மீனியும் அவரின் AFL-CIO சகாக்களும் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையில் இருந்து வெளியேறி, 5.5% வீத வரையறையை உடைத்து எறிய வேண்டும் என்ற கோரிக்கையினை மையமாகக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த அரசியல் பிரச்சாரத்தினை தொழிற் சங்கங்களுள் வேர்க்கர்ஸ் லீக் அபிவிருத்தி செய்தது.

அந்த பிரச்சார இயக்கம் 1972 கோடைக்காலத்தின் ஆரம்பத்தில் "ஏன் ஒரு தொழிற் கட்சி அவசியம்" என்ற பிரசுரத்தின் மூலம் பிரசித்தமாகியது. அப்பிரசுரத்தின் சும்ார் 75,000 பிரதிகளை நாம் விற்பனை செய்தோம். இன்னொரு பிரசுரம் - கைத்தொழில் தொழிலாளர்களிடையே வொலசின் செல்வாக்கின் பெருக்கத்தை தடைசெய்வதற்கான ஒரே சக்தி வாய்ந்த சாதனம் தொழிற்கட்சியே என்பதை முன்னெடுக்க வொலஸ் உண்மையில் எங்கு நின்று கொண்டிருக்கின்றார் என்ற பிரசுரம் எழுதப்பட்டது. எமது 50 சதவீத பிரசுரங்களில் மிகவும் ஜனரஞ்சகமானதாக இது நிரூபிக்கப்பட்டது. அன்றிலிருந்து நான் வாழ்ந்தது அதன் மூலம் கிடைத்த ஆக்க உரிமையிலாகும்.

இந்த பிரசுரங்கள் 1972 அக்டோபரில் சிக்காகோ நகர சம்மேளனத்தினை அணிதிரட்ட வழி வகுத்ததோடு வேர்க்கர்ஸ் லீக் அங்கு "தொழிற்கட்சிக்கான தொழிற்சங்க கூட்டினை" (TUALP) நிறுவியது. இம் மகாநாட்டுக்கு கைத்தொழில் துறையின் சகல முக்கிய துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் வருகை தந்தனர். அதன் இரண்டாவது மாநாடு 1973 பெப்ரவரியில் சென்ட் லூசியில் நடைபெற்றது.

இந்த வேலையின் அபிவிருத்தி ரிம் வூல்போத்தின் பெரிதும் உறுதியற்ற பழக்க வழக்கங்களால் சிருஷ்டிக்கப்பட்ட அரசியல் நெருக்கடியாலும் வேர்க்கஸ் லீக்கிலிருந்து அவாின் வெளியேற்றத்தாலும் பாதிக்கப்பட்டது. அந்த நெருக்கடியை சூழ உள்ள சம்பவங்களை ஆய்வு செய்வதற்கான இடம் இதுவல்ல. எனினும் 1973-74 காலப்பகுதியில் வூல் போர்த்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வெறி பிடித்த இளைஞர் நடவடிக்கைகள், தொழிற் கட்சிக்கான போராட்டத்தின் அடிப்படையில் தொழிற் சங்கத் துறையினுள் கட்சி இலக்காகக் கொண்டிருந்த நம்பிக்கையூட்டும் அரசியல் நடவடிக்கைகளின் பொறுமையுடன் கூடிய அபிவிருத்தியின் செலவிலாகும் என்பதை நினைவில் கொண்டாக வேண்டும். ஆனால் இந்த வேலை வூல் போர்த்தின் இராஜினாமாவின் பின்னர் ஆரம்பமாகியது. குறிப்பாக 1974 தேசிய வேலை நிறுத்தத்தில் சுரங்கத் தொழிலாளர்களிடையேயான கட்சியின் தலையீட்டுடன் ஆரம்பமாகியது. 1975 மார்ச்சில் கட்சி TUALPன் மிகவும் வெற்றிகரமான மாநாட்டை டெட்ராயிட்டில் நடாத்தியது. இதில் 300க்கும் அதிகமான பேராளர்கள் கலந்து கொண்டனர்.



டேவிட் நோர்த்

ஒருவர் அக்காலப் பகுதிக்கான பத்திரங்களை ஆய்வு செய்யின் அவர் தொழிற் கட்சிக்கான போராட்டத்துக்கும் ஒரு புரட்சிக்கட்சி என்ற முறையில் வேர்க்கர்ஸ் லீக்கின் அபிவிருத்திக்கும் இடையேயான உறவினை மிகவும் திட்டவட்டமாக நிதர்சனமாக்கிக் கொள்ள முயன்று கொண்டதை கண்டு கொள்ளமுடியும். ஒரு புரட்சிக் கட்சியை ஸ்தாபிதம் செய்வதற்கான போராட்டம் அரசியல் ரீதியில் வெளிவந்த மங்கலான பண்பினைக் கொண்ட ஒரு தொழிற்கட்சிக்கான கோரிக்கையினால் மங்கலாக்கப்படும் ஆபத்து இருந்து கொண்டுள்ளதை நாம் இனங்கண்டோம். எனவே நாம் 1975 நவம்பர் முன்நோக்கு பிரேரணையில் எழுதியதாவது: "வேர்க்கஸ் லீக் ஆட்சிக்கான போராட்டத்தினதும் ஒரு பரந்த புரட்சிக் கட்சியை நிர்மாணிப்பதனதும் நிலைப்பாட்டில் இருந்து தொழிற் கட்சிக்காகப் போராடுகின்றது. தொழிற் கட்சி, ஆட்சிக்கான போராட்டத்துக்கான தயாரிப்பில் தொழிலாள வர்க்கம் எடுக்க வேண்டிய அவசியமான முதல் நடவடிக்கை ஆகும் ஆனால் இது ஒரு போதும் ஏதோ ஒரு வகையான சர்வரோக நிவாரணியாகவும் ஒரு புரட்சிக் கட்சிக்கான பதிலீடாகவும் நோக்கப் படக்கூடாது."

1977 முன்நோக்குப் பிரேரணையில் நாம் மீண்டும் குறிப்பிட்டதாவது: "ஒரு தொழிற் கட்சிக்கான பிரச்சாரத்தினை அதிகரிப்பதன் அவசியத்தினை வலியுறுத்துகையில் தீர்க்கமான விவகாரம் வேர்க்கர்ஸ் லீக்கினை கட்டியெழுப்புவதும் அதனை ஒரு பரந்த புரட்சிக் கட்சியாக பரிணாமம் செய்வதும் என்பதை தோழர்கள் ஒருபோதும் மறந்து விடக் கூடாது. நாம் இந்த நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே தொழிற் கட்சிக்காகப் போராடுகின்றோம்."

### 1978ன் முன்நோக்கு பிரேரணை

இருப்பினும் இந்த எச்சரிக்கைகளுக்கு இடையேயும் தொழிற் கட்சிக்கான போராட்டத்தில் அரசியல் நிச்சயமற்ற தன்மை பற்றிய ஒரு அதிருப்தி தொடர்ந்து இருந்து வந்தது. மற்றொரு தொழிலாளர் வர்க்க கட்சியின் நிர்மாணத்துக்கான பொதுக் கோரிக்கையில் புரட்சிகர இயக்கத்தின் சுயாதீன பணி இழக்கப்பட்டுப் போகும் ஆபத்தினை [illegible] தொழிற் க[illegible] முறைப்படுத்தப்பட்ட விதம் தொழிற் சங்க அதிகாரத்துவத்துக்கு விடுக்கப்பட்ட ஒரு "கோரிக்கை"யாக விளங்கியது. இது அதிகாரத்துவத்தின் சூழ்ச்சிகளுக்கு வேர்க்கஸ் லீக்கினை கீழ்படியச் செய்யும் ஆபத்தினைக் கொண்டிருந்தது. UMW தலைமைக்கு எதிரான அங்கத்தவர்களின் ஒரு கிளர்ச்சியாகவும் சமஷ்டி அரசாங்கத்துடனான மோதலாகவும் வடிவமெடுத்த 1977-78 சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் எமது தலையீட்டின் பின்னர் நாம் தொழிற்கட்சி பிரச்சினையை ஒரு மீளாய்வுக்கு உள்ளாக்கினோம். அந்த ஆய்வின் இதயத்தில் 1954ல் கனன் அபிவிருத்தி செய்த நிலைப்பாட்டின் ஒரு விமர்சன மதிப்பீடு விளங்கியது. அது தொழிற் கட்சியை ஸ்தாபிதம் செய்வதற்கான உத்வேகம் தொழிற் சங்க அதிகாரத்துவத்தில் இருந்து வரும் என வாதிட்டது. வேர்க்கஸ் லீக் பின்வருமாறு வாதிட்டது:

"நடைமுறையில் இது தொழிற்சங்க அதிகாரத்துவத்துக்கு அடிபணிந்து போவதை கருதுகின்றது. AFL-CIO வின் முழு .அனுபவமும் அது இரண்டு முதலாளித்துவக் கட்சிகளுக்கும் எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் நிஜமான சுயாதீனமான அரசியல் இயக்கத்தினை நாசமாக்க எதனையும் செய்யத் தயங்காது என்பதைக் காட்டியுள்ளது. தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் எந்தவொரு பிரிவினராலும் தலைமை தாங்கப்படும் எந்தவொரு வகையறாவைச் சேர்ந்த அரசியல் இயக்கமும் மூன்றாவது கட்சியை அல்லது "தொழிற்கட்சி" என அழைத்துக் கொள்கின்ற ஏதோ ஒன்றோ முதலாளித்துவத்தின் சேலைத் தலைப்பில் இருந்து விடுபட்ட ஒரு நிஜமான அரசியல் பிளவை எது விதத்திலும் கருதாது."

இப்பத்திரம் இன்னொரு விதத்தில் ஒரு தீர்க்கமான முன்னேற்றத்தைக் குறித்து நின்றது. தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பரந்த சமூக இயக்கத்தினை எந்தளவிற்கு பிரதிநிதித்துவம் செய்கின்றதோ அந்தளவுக்கு மட்டுமே ஒரு தொழிற் கட்சிக்கான இயக்கம் புரட்சிகரப் பரிமாணத்தினை எடுக்கமுடியும் என்ற உண்மைக்கு அவதானத்தை திருப்பும்படி கோரியது. நாம் கூறியதாவது:

"தொழிற் கட்சி தொழிற்சங்கவாதிகளின் அணியில் இடம்பெறும் ஒரு தீவிரவாத கிளர்ச்சியின் ஒரு வெறும் விளைவாக இருக்க முடியாது. தொழிற் சங்கங்களின் உள்ளேயான தன்னியல்பான எழுச்சிகள் தொழிற் கட்சியின் தோற்றத்தில் ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகிக்கும் என்பதில் எதுவித பிரச்சினையும் கிடையாது. எனினும் இது தொழிற் கட்சிக்கான போராட்டம், அரசியல் அதிகார வரம்பினுள் தொழிற்சங்க வாதத்தினை நேரடியாக விஸ்தரிப்பதற்கு அப்பாற்பட்டது அல்ல என எண்ணுவது குறுகிய நோக்கிலான அடிப்படைத் தவறாகும். இது ஒரு சீர்திருத்தவாத கருத்துப்பாடாகும். முதலாளி வர்க்கத்துடனான அரசியலில் இருந்து துண்டித்துக் கொள்ள ஏற்படும் பரந்த இயக்கம் ஒடுக்கப்படும் மக்களின் சகல தரப்பினரதும் கொதிப்பினால் பொறிபறந்த ஒரு தன்னியல்பான வெடிப்பில் இருந்து தோன்றும்."

### நீகன் வருடங்கள்

[illegible] குறிப்பிட்டது போல [illegible] நீகன் தெரிவு செய்யப்பட்டமை முதலாளி வர்க்கத்தின் வர்க்க மூலோபாயத்தில் ஒரு பெரும் மாற்றத்தினை பிரதிநிதித்துவம் செய்ததோடு வர்க்க உறவுகளிலும் ஒரு ஆழமான மாற்றத்துக்கு இட்டுச் சென்றது. வேர்க்கர்ஸ் லீக் இந்த மாற்றங்களுக்குத் துரிதமாக பிரதிபலித்ததோடு நீகன் நிர்வாகம் தொழிலாள வர்க்க்த்தின் மீதும் அதன் தொழிற் சங்கங்கள் மீதும் ஒரு பெரும் தாக்குதலை ஆரம்பிக்கும் எனவும் எச்சரிக்கை செய்தது. தொழிற் சங்கங்களுள் அணிதிரண்டு போயுள்ள இலட்சோப இலட்சம் தொழிலாளர்களை உள்ளடக்கிக் கொள்ளும் போராட்ட சமயத்தில் கட்சி தொழிற் சங்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிற் கட்சியை அமைக்கும் அதன் பிரச்சார இயக்கத்தினை விஸ்தரித்தது.

அதைத் தொடர்ந்து வந்த வருடங்களில் வேர்க்கர்ஸ் லீக் எதிர்பார்த்தது போல தொழிற் சங்கங்கள் யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியின் மிகவும் கசப்பான வர்க்கப் போராட்டங்களின் மையமாக விளங்கின. இந்த ஒவ்வொரு போராட்டமும் AFL-CIOன் கொள்கையின் பெறுபேறாகத் தோற்கடிக்கப்பட்டன. நீகன் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே கிறிஸ்லர் பிணையின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தினை குறைக்கும் வேலை கொள்வோரினதும் அரசினதும் முயற்சியோடு ஒத்துழைக்கும் தனது தயார் நிலையை காட்டிக் கொண்டது. நீகன் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பற்கோவில் (PATCO) இருந்து (AFL-CIO) தொழிற்சங்கமயமான தொழிலாளர்களை ஒன்றன்பின் ஒன்றாக வேண்டுமென்று தனிமைப்படுத்தி அதன் தோல்வியை ஊர்ஜிதம் செய்தது.

தொழிலாளர் வர்க்கத்தின் இக்காட்டிக் கொடுப்புக்களின் சட அடிப்படையை ஆய்வு செய்த 1985ன் முன்நோக்குப் பிரேரணையின் அந்தப் பிரிவுகளை சுலோற்றர் மிகவும் வன்மையாக எதிர்த்தார்.

நாம் எழுதியதாவது: "தொழிற்சங்க அதிகாரத்துவம் வெறுமனே ஊழல் நிறைந்த தனிநபர்களின் கூட்டு அல்ல. ஒரு திட்டவட்டமான சமூக தட்டினைக் கொண்டுள்ளது. இது தொழிற்சங்க இயக்கத்துடன் ஒரு முற்றிலும் ஒட்டுண்ணித் தனமான உறவினைக் கொண்டுள்ளது. இது முதலாளி வர்க்கத்துக்கு ஆற்றும் சேவைகளின் அடிப்படையில் தான் பிரதிநிதித்துவம் செய்து கொண்டுள்ளதாகக் கூறிக் கொள்ளும் வாழ்க்கைத் தரத்தினைக் காட்டிலும் பெரிதும் அதிகமாக அனுபவிக்கின்றது.

"AFL-CIOவின் அதிகார சபை அதன் நிறைவேற்று சபை 35 அங்கத்தவர்களை தொழிற்சங்கங்களின் முன்னணி அதிகாரிகளும் அத்தோடு AFL-CIO தேசிய தலைமையகத்தின் இரண்டு உயர் அதிகாரிகளும் - கொண்டுள்ளது. அமெரிக்க தொழிற் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அதிகாரபூர்வமான அறிக்கையின்படி 1983-84ல் இவர்கள் கூட்டு வருமானமாக 3,913,089 டாலர்களைப் பகிர்ந்து கொண்டனர். AFL-CIO நிறைவேற்றுச் சபையில் பிரதிநிதித்துவம் செய்து கொண்டுள்ள தொழிலாளர் அமைப்புக்களின் சகல அதிகாரிகள் உட்பட 1983-84ல் சம்பளமாகவும், செலவுகளாகவும் இவர்களின் கூட்டு வருமானம் 44,987,846 டாலர்களாகும். எமது கணிப்பில் நாம் இந்த 31 தொழிற் சங்கங்களதும் AFL-CIO வினதும் முழு அதிகாரிகளையும் சேர்ப்பின் வருடாந்த சம்பள பட்டியல் விபரம் வருமாறு: சம்பளம் 321,677,435 டாலர். இந்த ஆகாயத்தை எட்டும் புள்ளி விபங்களுடன் இன்னுமோர் 71,532,780

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டாலர்கள் மேலதிக "செலவுகளாக" ஹோட்டல்கள், பிசினஸ் மதிய போசனங்கள், இராப் போசனங்கள் என்பவற்றுக்கு சேர்க்கப்பட வேண்டும். இந்த விதத்தில் 35 அங்கத்தவர்களைக் கொண்ட AFL-CIOவின் நிறைவேற்றுக் குழு ஆண்டொன்றுக்கு 400 மில்லியன் டாலர்களுக்கு சற்று குறைவாக உறிஞ்சிக் கொள்ளும் ஒரு வயிற்றுமாரி அதிகாரத்துவத்தின் சார்பில் பேசுகின்றது!

"உற்பத்தி திறன் கொண்ட எதுவிதமான உழைப்பையும் வழங்காத குட்டி முதலாளித்துவ அதிகாரத்துவக் கும்பல்கள் தம்மால் பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ள தொழிலாளர்களின் அங்கத்துவப் பணத்தை தின்று தொண்டைக் குழி வரைக்கும் வயிற்றை நிரப்புகின்றார்கள். அனைத்துலக அதிகாரிகள் 45 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமான தொகையை சம்பளமாகவும், செலவாகவும் உறிஞ்சியுள்ளார்கள். இது 1984ல் அங்கத்தவர்களால் செலுத்தப்பட்ட மொத்த அங்கத்துவப் பணத்தின் 41 வீதத்துக்கு அதிகமானது. UAWன் அனைத்துலக அதிகாரிகள் 1984ல் 61 மில்லியன் டாலர்களுக்கும் கூடியதை ஒழித்துக் கட்டினர். இது அங்கத்துவப் பணமாக தொழிற்சங்கங்களுக்கு கிடைத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 30 வீதத்துக்குச் சமமானது. தொழிசங்க அதிகாரத்துவங்கள் மொத்தத்தில் ஆண்டொன்றுக்கு பில்லியன் கணக்கான டாலர்களை தின்று ஏப்பமிடுவதை தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் சிறிய ஆனால் பிரதிநித்துவம் செய்யப்படும் பகுதியினரின் முழு வருமானத்தினதும் அடிப்படையில் மதிப்பீடு செய்வது நியாயமற்ற ஒன்றல்ல. இங்கு அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்தினை அடிமைத்தனமாகப் பேணுவதனதும், இவர்களின் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு வெறியினதும் தொழிலாளர் வர்க்கத்தின் பேரிலான கெடிகலக்கத்தினதும், தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே முதலாளித்துவத்துக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் நின்று கொண்டுள்ளவர்களின் பேரிலான சகலர் மீதான அதன் வெறுப்பினதும் நிஜ அடிப்படையைக் கண்டு கொள்ள முடியும்.

இந்த ஆய்வுகளில் இருந்து நாம் இம் முடிவுக்கு வருகின்றோம்: அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் அணிதிரள்வானது ஆளும் வர்க்கத்தின் பெரும் ஊதியம் பெறும் ஏஜன்டுகளுக்கு எதிராக அங்கத்தவர்களை அணிதிரட்டும் - தொழிற் சங்கங்களின் உள்ளேயான ஒரு உள்ளார்ந்த உள்நாட்டு யுத்த வடிவத்தினை நிச்சயம் எடுக்க வேண்டும். இந்தப் போராட்டத்தின் அரசியல் சாராம்சம், தொழிற் சங்கங்களுள் மார்க்சிசத்துக்கான போராட்டத்தினையும் அதிகாரத்துவத்துக்குப் பதிலீடாக ஒரு புரட்சிக் கட்சியை அமைப்பதையும் குறிக்கின்றது வேர்க்ர்ஸ் லீக்கின் பணி இதுவேயாகும்:

இந்தப் போக்கு தொழிலாளர் புரட்சிக் கட்சியினால் (WRP) கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளுட்ன் ஒத்துப்போக முடியாது என சுலோற்றர் கண்டது இயற்கையே.

ஒரு முழுமையாக நோக்குமிடத்து 1980 பதுகள் AFL-CIOக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையேயான உறவின் ஒரு திட்டவட்டமான மாற்றத்தினைக் குறித்தது. இது நேரடிப் பொறுப்பான அரைவாசித் தோல்விகளின் பட்டியல்கள் அதன் தோல்விகளின் வரலாற்றுப் பண்பினைக் காட்டுகின்றது: 1981ல் பற்கோ (PATCO) 1983-84ல் கொண்டினென்டல் எயார் லைன்ஸ், பெல்ப்ஸ் டொட்ஜ் கிறே கொன்ட், 1985/86ல் யுனைட்டெட் எயார்லைன்ஸ், பான் அமெரிக்கன் எயார்லைன்ஸ், சிக்காகோ ரிபியூன், ஹோர்மல், விலில்-பிற்ஸ்பேர்க், 1986/87ல் TWA, USX ஸ்ரீல், IBP பற்றிக் குடாஹி, 1987/88ல் டோன் மெரல், இன்டர்நஷனல் பேப்பர், 1989ல் பிட்ஸ்டன், ஈஸ்டேர்ண்.

WRPயுடனான பிளவின் பின்னர் வேர்க்கர்ஸ் லீக் முன்நோக்கு வேலையில் AFL-CIOவுடனான காட்டிக் கொடுப்புக்களின், வேலைத் திட்டச் சிக்கல்களால் கெட்டியாகப் பிடிக்கப்பட்டது. 1988 ஜுலை பிரேரணை தொழிற் சங்கங்களின் அடிப்படையிலான தொழிற்கட்சி என்ற சூத்திரத்தினை தொடர்ந்து பயன்படுத்திய வேளையில் இது தொழிற் கட்சிக்கான போராட்டத்துக்கும் புரட்சிகர இயக்கத்தின் அபிவிருத்திக்கும் இடையேயான உறவின் ஸ்தூலமான அர்த்தத்தில் நாம் புரிந்து கொண்டமை பற்றிய ஒரு முக்கிய அறிகுறியாகும். எந்தவிதமான சீர்திருத்தவாதத் தொழிற் கட்சியையும் நாம் நிராகரித்ததை இது தீர்க்கமான முறையில் ஊர்ஜிதம் செய்தது. வேர்க்கர்ஸ் லீக் தொழிற் சங்கங்களால் நிறுவப்பட்ட ஒரு அரசியல் கட்சிக்கு எந்தவொரு நிலைமையிலும் எந்தவிதமான ஆதரவும் - விமர்சன ரீதியிலோ அல்லது வேறு விதத்திலோ வழங்கக் கடமைப்பட்டு இருக்கவில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டோம். புரட்சிகர சோசலிஸ்ட் போக்கிலான ஒரு அபிவிருத்திக்கான நிஜ சாத்தியத்தினை ஒரு தொழிற் கட்சியின் ஸ்தாபிதம் உள்ளடக்கிக் கொண்டுள்ளதாக அது கருதும் இடத்து மட்டுமே வேர்க்கர்ஸ் லீக்கின் ஆதரவும் தீவிரமான ஊக்குவிப்பும் அதற்குக் கிட்டும்.

ஆனால் அப்போதும் கூட தொழிற் சங்கங்களின் அடிப்படையிலான தொழிற்கட்சி என்ற பதம் - அது முழுப் பத்திரத்திலும் ஒரேயொரு பந்தியில் மட்டுமே காணப்பட்டது - சம்பவங்களின் பிடிக்குள் வந்தது. உண்மையில் வேர்க்கர்ஸ் லீக்கின் பத்திரங்களிலும் அறிக்கைகளிலும் அந்தப் பதம் இன்னமும் காணப்பட்ட அளவுக்கு எமது இயக்கத்தின் கடந்த காலப் பரிணாம அபிவிருத்தியின் ஏதோ ஒரு மிச்ச சொச்சத்தை ஒத்திருந்தது. 1990 பெப்ரவரியில் நாம் குறிப்பிட்டது போல்:

"காட்டிக் கொடுப்புக்களதும் தோல்விகளதும் தொகை ரீதியான திரட்சியும் உழைப்பு - முகாமைத்துவத்தின் உடனுழைப்பு பின்னலின் பரம்பலும் ஒரு புறத்தில் அதிகாரத்துவத்துக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் இடையேயும் மறுபுறத்தில் அதிகாரத்துவத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையேயும் உறவுகளில் பண்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. AFL-CIOன் உயர்மட்டம் தொடக்கம் பிராந்திய தொழிற்சங்க அதிகாரிகள் வரை கீழேயும், தொழிற்சங்க தலைமை கம்பனி முகாமைத்துவத்தின் அமைப்புடன் முழுமனே இணைந்து கொண்டுள்ளது....

"ஈஸ்டேர்ண் வேலை நிறுத்தத்திலும் யுனைட்டட் எயார் லைன்சில் தொழிலாளர் கொள்முதல் என்படுவதை திணிக்க விமான ஓட்டிகள் தலைமை செய்யும் முயற்சியிலும் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் பரிணாமம் கண்ட பாத்திரம் மிகவும் தெளிவாக வெளிப்பட்டது. ஈஸ்டேர்ண் கம்பனியில் தொழிலாளர்களின் தொழில், சம்பளம், நிவாரணங்களைக் காக்க சங்கத் தலைமை எதுவிதமான பேச்சுவார்த்தையையும் நடாத்த இல்லை. ஆரம்பத்தில் இருந்து இது தனது சார்பில் - சலுகைகளைக் காக்கவும் கம்பனி நிர்வாகத்தில் பதவிகளைப் பெறவும் பேரம்பேசி வந்தது."

இறுதியாக 1992ல் சோவியத் அரசு அதிகாரத்துவத்தினால் கலைக்கப்பட்ட உலக வரலாற்று அமைவினுள் தொழிலாளர் அதிகாரத்துவங்கள் அனைத்துலக ரீதியிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் இழைத்த காட்டிக் கொடுப்புக்களின் அடிப்படையில் நாம் அவசியமான படிப்பினைகளைப் பெற்றோம்:

"சோவியத் ரூஷ்யா சட்டரீதியான முறையில் கலைக்கப்பட்டதில் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள் என்ன? எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் அரசும் அதன் பொருளாதர அத்திவாரமும் அடியிலிருந்து தூக்கி வீசப்படவில்லை. அவை மேலிருந்து தள்ளிவிடப்பட்டன. இந்த மாற்றம் பரந்த மக்களின் தலைக்கு மேலாக சிறிய அதிகாரத்துவக் கும்பல் தொழிலாளர் வர்க்கத்தினை ஸ்தம்பிக்கச் செய்து, அதன் கடந்த கால வெற்றிகளை தொலைத்துக் கட்ட தமது பதவி அந்தஸ்துகளை பாவித்துச் செய்யப்பட்டது. பழைய சோவியத் யூனியனுள் இடம் பெற்றிருப்பது அனைத்துலகத் தோற்றப்பாட்டின் ஒரு வெளிப்பாடாகும். உலகம் பூராவும் தொழிலாளர் வர்க்கம் கடந்த காலப் பகுதியில் அவர்கள் நிர்மாணித்த தொழிற் சங்கம், கட்சி மட்டுமன்றி அரசும் கூட ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆயுதமாக மாற்றப்பட்டுள்ளது என்ற உண்மையை எதிர் கொண்டுள்ளார்கள்.

"தொழிலாளர் அதிகாரத்துவங்கள் வர்க்கப் போராட்டத்தினை ஊடகமாகக் கொண்டு வர்க்கங்களுக்கு இடையே Buffer பாத்திரத்தினை வகித்து வந்த காலம் போய் விட்டது. அதிகாரத்துவம் பொதுவில் தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று நலன்களைக் காட்டிக் கொடுத்தாலும் அவர்கள் இன்னமும் ஒரு வரையறுக்கப்பட்ட விதத்தில் அதன் அன்றன்றாடைய தேவைகளுக்கு உதவி வந்தனர். அந்தளவுக்கு தொழிலாளர் வர்க்க அமைப்புக்களின் தலைவர்களாகத் தாம் இருந்து கொண்டுள்ளதை நியாயப்படுத்தினர். அந்தக் காலப்பகுதி கடந்து சென்றுவிட்டது. இன்றைய காலப்பகுதியில் அதிகாரத்துவம் அத்தகைய எந்தவொரு சுயாதீனமான பாத்திரத்தினையும் ஆற்ற முடியாது.

"இது சோவியத் யூனியனில் உள்ள அதிகாரத்துவத்தைப் பொறுத்தமட்டில் மட்டுமன்றி அமெரிக்கத் தொழிற் சங்கங்களின் அதிகாரத்துவங்களைப் பொறுத்தமட்டிலும் உண்மை. எமது கடந்த மாநாட்டில் நாம் இன்றைய தொழிற் சங்கத் தலைவர்களை தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களை மிகவும் வரையறுக்கப்பட்டதும் திரிபு செய்யப்பட்டதுமான விதத்தில் தன்னும் பிரதிநிதித்துவம் செய்கின்ற சக்திகளாக வரைவிலக்கணம் செய்ய முடியாது என வலியுறுத்தினோம். AFL-CIO தலைவர்களை தொழிற்சங்கத் தலைவர்களாக வரைவிலக்கணம் செய்ய முடியாது என வலியுறுத்தினோம். AFL-CIO தலைவர்களை "தொழிற் சங்கத் தலைவர்களாக" வரைவிலக்கணம் செய்வது அல்லது அதே விடயத்தில் AFL-CIOவை ஒரு தொழிலாளர் வர்க்க அமைப்பாக வரைவிலக்கணம் செய்வதானது தொழிலாளர் வர்க்கத்தினை அவர்கள் முகம் கொடுக்கும் யதார்த்தத்தில் இருந்து இருட்டடிப்புச் செய்வதாகும்.

## ஒரு புதிய கட்சியை நிறுவுதல் ஒரு புதிய கட்டம் ஆரம்பமாகிவிட்டது

கடந்த இரண்டு தசாப்தங்களதும் ஆழமான பொருளாதார, அரசியல் மாற்றங்கள் எம்மை எமது மூலோபாய பணிகளை ஒரு புதிய மதிப்பீடு செய்யும்படி நெருக்கியுள்ளன. நாம் தொழிற் சங்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழிற் கட்சியை அமைக்கும்படி அழைப்பு விடுக்கவில்லை. ஏனெனில் அத்தகைய ஒரு கட்சி சுயாதீனமான தொழிலாளர் வர்க்க அரசியலில் ஈடுபட்ட புரட்சிகர இயக்கத்தினைப் பொறுத்தமட்டில் அத்திசையில் ஈடுபட்ட ஒரு முற்போக்கு இயக்கத்தினை எதுவிதத்திலும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்பது சர்ச்சைக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டதே. 1966ல் இருந்து எமது இந்த அரசியல் நிலைப்பாட்டின் அபிவிருத்தியை ஆய்வு செய்கையில் இது தெளிவாகும். நாம் இந்த முடிவுக்கு வந்தது, அதிகாரத்துவங்களின் குற்றங்களின் பெறுபேறுகளின் பேரிலான திடீர் அகநிலை மிதமிஞ்சிய பிரதிபலிப்பாக இல்லை. எமது அடிப்படை மதிப்பீட்டிலும் தகவமைவிலுமான இந்த மாற்றம் அதிகாரத்துவத்தின் குற்றங்களின் பேரிலான அகநிலை அக்கறையினதோ அல்லது அதிகாரத்துவத்தின் குற்றங்கள் பற்றிய மிதமிஞ்சிய பிரதிபலிப்பாலோ ஏற்பட்ட ஒரு விளைவு அல்ல. தொழிற் சங்கங்களும் அவை தொழிலாளர் வர்க்கத்துடன் கொண்டுள்ள உறவுகளும் தொடர்பாக ஒரு புறநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. தசாப்தக் கணக்கிலான அரசியல் நாற்றம் எடுப்பு அதிகாரத்துவத்தினை சிறப்புச் சமூகத் தட்டினராக தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து ஆழமான முறையில் அன்நியப்படுத்தி உள்ளது. எந்தவொரு தீர்க்கமான அர்த்தத்திலும் AFL-CIO ஒரு தொழிலாளர் வர்க்க அமைப்பாக - குறைந்த பட்சம் சீர்திருத்தவாத நோக்குக்களை நோக்கி ஓட்டமெடுக்கும் ஒன்றாகவோ கருதப்பட முடியாதது. லேன் கீர்க்லண்ட் (Lane Kirkland) 15 ஆண்டுகளுக்கு மேலாக செயற்குழுவில் இருந்து எந்தவொரு குறிப்பிடத்தக்க எதிர்ப்புக்கும் முகம் கொடுக்காமல் - இராஜினாவுக்கான ... பெரும் அழிவுமிக்க ஒரு தொகை தோல்விகளை ஒழுங்கு செய்தார். இதே காலப்பகுதியில் அமெரிக்காவின் கம்பனிகளின் இயக்குனர் சபைகளில் தலைகள் உருண்டோடின. செனட்டிலும், காங்கிரசிலும் முதலாளித்துவ வர்க்கம் லிபரல் ஸ்தாபனங்களைத் துடைத்துக்கட்டி வந்தது. ஆனால் தொழிலாளர் இயக்கத்தினுள் - அதிகாரத்துவ உயர் மட்டத்தில் எதுவிதமான மாற்றங்களும் இடம்பெற இல்லை.

பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்: இருபதாம் நூற்றாண்டின் போது அமெரிக்காவில் 18 ஜனாதிபதிகள் இருந்தார்கள் என நான் நினைக்கின்றேன். பிரித்தானிய மன்னர்கள் ஏழு பேர் இருந்தனர். எட்டு அல்லது ஒன்பது பாப்பரசர்கள் இருந்தனர். ஆனால் 40 ஆண்டுகளுக்கு முன்னர் CIOவுடனான (Congress of Industries Organisations) இணைப்பில் இருந்து பணியாற்றிய இருவர் உட்பட AFLக்கு நான்கு தலைவர்கள் மட்டுமே இருந்துள்ளனர். இது தொழிலாளர் வர்க்கத்தில் இருந்து எப்படி அன்நியப்பட்டு இருந்து வந்துள்ளது என்பதற்கு ஒரு அளவீடாகும். AFL-CIO அமைப்பின் ஒரு அதிகாரி - நான் இங்கு சிறப்பாகக் குறிப்பிடுவது UMW (ஐக்கிய மோட்டர் தொழிலாளர்) தொழிற் சங்கத்தின் தலைவர் றிச்சார்ட் ட்ரம்காவை பற்றியாகும். தம்மால் பேரளவில் தலைமை தாங்கப்பட்ட அமைப்பின் அங்கத்துவம் தாம் பதவிக்கு வந்த காலத்தில் இருந்த அங்கத்தவர் எண்ணிக்கையைக் காட்டிலும் அற்ப சொற்பமாக வீழ்ச்சி கண்டுபோன நிலையிலும் கூட தொழிற்சங்க உயர்மட்டத்தில் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது. இன்று லேன் கீர்க்லண்ட் பதவியில் இருந்து விலகும்படி நெருக்கப்பட்டிருப்பின் அதற்குக் காரணம் AFL-CIO அமைப்பு இறுதியில் அங்கத்துவத்தின் நெருக்குவாரத்தினைப் "பிரதிபலிப்பது" அன்று. அதற்குப் பதிலாக அவர் விலகும்படி நெருக்கப்பட்டுள்ளமை - இறுதியில் AFL-CIOவின் சுருக்கம் அதிகாரத்துவத்தின் பகுதியினரை நேரடியாகப் பாதிப்பதோடு அதன் அங்கத்தவர் இடையே சஞ்சலத்தையும் ஏற்படுத்துகின்றது. இன்னொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்னவெனில் AFL-CIOவின் சீரழிவு தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே ஒரு மாற்று தீவிரவாத பரந்த இயக்கத்தின் தோற்றத்துக்கான இடைவெளியைச் சிருஷ்டித்து விட்டுள்ளது என்பதேயாகும்.

எவ்வாறெனினும் எமது பணி AFL-CIO அதிகாரத்துவத்தின் தலைவிதி பற்றி ஊகிப்பதோ அல்லது இல்லாத ஒரு முற்போக்கு போக்குடன் அணிதிரள்வது பற்றியதோ அல்ல. AFL-CIOன் வீழ்ச்சியில் இருந்து உரிய முடிபுகளை பெற வேண்டியதோடு கட்சியின் புதிய பணிகளையும் சரியான முறையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். தொழிலாளர் வர்க்கத்துக்கு வழங்கப்படக் கூடிய ஒரு தலைமை இருப்பின் அதனை எமது கட்சியினாலேயே வழங்க முடியும். உழைக்கும் மக்களுக்கு ஒரு புதிய பாதையை திறப்பதாயின் அதனை எமது அமைப்பினாலேயே திறக்க முடியும். தலைமைப் பிரச்சினையை ஒரு புத்திசாலித்தனமான உபாயத்தின் மூலம் தீர்த்துவிட முடியாது. தொழிலாளர் வர்க்க தலைமை நெருக்கடியினை நாம் மற்றையோரை அத்தலைமையை வழங்கும்படி கோருவதன் மூலம் தீர்த்து விட முடியாது. ஒரு புதிய கட்சி வேண்டின் அதனை நாம் கட்டியெழுப்பியாக வேண்டும்.

– தொடரும் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி சோ.ச.க. கிளை துண்டுப் பிரசுரம் வெளிவந்துள்ளது

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக ஏகாதிபத்திய வாதிகளதும் ஏஜன்டாக இலங்கையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் செயற்ப்படடு வருகின்றது. இந்த அரசாங்கம் இங்கு செயற்பட்டு வந்த கைத்தொழில், பெருந்தோட்ட அரச நிறுவனங்கள் அனைத்தினது செயல்பாட்டையும் ஏகாதிபத்தியவாதிகளின் கைகளில் கையளிக்கும் கைங்கரியத்தை படு நிர்வாணமாக நின்று செயற்படுத்தி வருகிறது.


இவற்றில் மின்சாரம் ,வங்கி ,தோட்டத் துறை, போக்குவரத்துப் போன்றனவற்றை ஏகாதிபத்தியவாதிகளின் கைகளில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் பலர் வேலை இழந்துள்ளதோடு இனி இடம்பெறப்போகும் தனியார்மயமாக்கத்தினால் தொழிலாளர்கள் வேலைவாய்யபுப் பெறும் சித்தத்தை அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளிடம் கையளித்துள்ளது. இலங்கையில் தொழில் நிறுவனங்களை சுரண்டும் உரிமையை அவர்களுக்கு முழுப்பாதுகாப்புடன் வழங்கும் அரசாங்கம், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீதான காட்டுமிராண்டி யுத்தத்தின் மூலம் அவர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்பளிக்கின்றது.

இலங்கையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆட்சியில் இருந்த போது கட்டவிழ்த்து விட்ட இனக்கலவரங்களினால் தென் இலங்கையில் இருந்த தமிழ் மக்களுக்கு தமது பாதுகாப்புப் படைகளினால் பாதுகாப்பு அளிக்க முடியாது என்ற நிலையில் கொழும்பில் இருந்து கப்பலேற்றி காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கி அவர்களை பிறந்த மண்ணுக்கு அனுப்பி பாதுகாப்பு வழங்க நேரிட்டது. ஆகவே தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பது தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே உள்ளது என்பதை யூ.என்.பி., சிறீலங்கா ஆட்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள். வடக்கு கிழக்கு பகுதிகளில் 15 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களின் அன்றன்றாட நடவடிக்கைகளையும் தொழில், கல்வி, உரிமைகளையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியதோடு தமிழர்களின் சொத்துக்களை அழித்து சூறையாடி அவர்களை அகதிகளாக்கியது.

காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, சீநோர் நிறுவனம், நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, மஸ்கன் கம்பனி, ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம், கடல் உணவு பதனிடும் அன்ட்றூஸ் கம்பனி, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டமை, விவசாயி விளை நிலங்கள் பயன்படுத்தப்படாமை கடல்வலயத் தடைச் சட்டம், யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டமை போன்ற அரச அட்டூழியங்கள் அனைத்தும் தமிழ் மக்களின் ஜீவனோபாயங்களை அழிக்கும் நடவடிக்கைகளாகும்.

இதற்கு மேலாக புலிகளை தேடி அழிக்கும் பேரில் அரசாங்கம் அடிக்கடி இனஅழிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் அரச படைகள் முல்லைத்தீவுக்குப் புலிகளைத் தேடிச் சென்ற போது அவர்களை அழிக்காமல் கிளிநொச்சி மீது சத்ஜெய இராணுவ இனஅழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. முன்னர் தொழில் நிறுவனங்களை அழித்து தொழிலாளர்களை வறுமைக்குள் தள்ளிய சிறீலங்கா அரசாங்கம் கிளிநொச்சியில் விவசாயப் பெருநிலத்தில் இருந்து மக்களை விரட்டி அடித்து அவர்களை விவசாயம் செய்ய விடாது தடுத்ததோடு தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களை காட்டுக்கு அனுப்பி, பட்டினி போட்டுக் கொல்லும் 'சத்ஜெய' வை நடாத்தியது. கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் யார்? தீவுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ இனக்கொலை நடவ்டிக்கையினால் இடம்பெயர்ந்த தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இதில் அடங்குவர்.

வளமுள்ள நாடு வன்னி. வாருங்கள் அங்கே வாழலாம்! என மக்களை அழைத்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுக்கான வாக்குறுதிகள், வேலைத்திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிட்டன. கிளிநொச்சியில் வாழ்ந்த தமிழ் மக்கள் இன்றைய சூழ்நிலையில் யாரையும் நம்புவதற்குத் தயாராக இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. 1993 1994 காலப்பகுதியில் பொருண்மிய மேம்பாட்டுக்கென உற்பத்தி செய்த நெல்லை தமீழீழ விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினாலும் கொள்வனவு செய்யும் உரிமையை தங்களின் ஏகபோக உரிமையாக்கி கொண்டதனாலும்



துண்டுப் பிரசுரத்தின் பிரதி

ஏழை விவசாயிகள் விவசாயத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அற்ப சொற்பமாக இருந்த விவசாய விளை நிலங்களை கட்டிக்காத்து வந்த விவசாயிகள் வாழவழியின்றி தங்கள் சமையல் பாத்திரங்களைக் கூட சந்தையில் விற்றுவிட்டு இந்தியா செல்லுவதைக் காணக்கூடியதாக உள்ளது. தென் இலங்கை செல்வதற்கான அனுமதி புலிகளால் தாராளமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அனுமதியுடன் தமிழ் மக்கள் , தமிழ் இளைஞர்கள் தாண்டிக் குளத் தடை முகாமில் பல்லாயிரக் கணக்கில் சிறீலங்கா அரசாங்கத்தின் அனுமதிக்காக குவிந்துள்ளனர் என்பது உண்மை.

50 பேர் செல்லும் படகில் 110 பேர் ஏற்றப்பட்டு இந்தியா செல்லும் ஒரு அவல நிலையில் படகுகள் கடலில் மூழ்கி மக்கள் பலியாகும் நடவடிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளே நிர்வகித்து வருகின்றது வெளிப்படை. தென் இலங்கையில் அரச நிறுவனங்களை ஏகாதிபத்தியவாதிகளிடம் கையளிக்கும் அரசாங்க வேலைத்திட்டமும் தமிழ் மக்களை இந்தியாவுக்கு கப்பலில் ஏற்றி அனுப்புவதும் வட-கிழக்குப் பகுதியில் இடம்பெறும் யுத்தத்தினுள் ஏகாதிபத்தியத்தைத் தலையிட வைப்பதும் ஒரே வேலைத்திட்டமே. இலங்கை ஆட்சியாளர்களின் முழு வேலைத் திட்டத்தையும் ஏகாதிபத்தியவாதிகள் அங்கீகரிக்கின்றனர். எனவே வடக்கு கிழக்கு யுத்தத்தை ஏகாதிபத்தியவாதிகளே முன்னின்று நடாத்துகின்றனர் என்பது உறுதியானது.

கிளிநொச்சி விவசாயப் பெருநிலத்தில் விவசாயிகளின் சுதந்திரமான விவசாய செய்கைக்கு இராணுவ நடவடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டு இராணுவம் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும். உலக ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகவும் அவர்களின் ஆசீர்வாதங்களுடன் யுத்தத்தை நடாத்தும் தேசிய முதலாளித்துவத்துக்கு எதிராகவும் போராட அணிதிரளுமாறு தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்கள், ஒடுக்கப்படும் மக்களை அழைக்கின்றோம்.

* விவசாயிகளே கிளிநொச்சியில் விவசாயம் செய்வதற்கு உங்களுக்கு முன்னால் இருக்கும் தடைகளை தகர்த்து எறியுங்கள்!
* வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று !
* தொழிலாளர், விவசாயிகளே உங்களின் அரசாங்கத்தை அமையுங்கள்!
* தமிழீழம் சிறீலங்கா சோசலிசக் குடியரசை கட்டு எழுப்புங்கள்!
* தொழிலாளர் பாதை பத்திரிகையை வாசியுங்கள்!
* சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்!


இது சோசலிச சமத்துவக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினால் 1996 நவம்பரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமாகும்.

# தோட்டத்துறை அரசியல் கைதிகள் 23 பேரில் 16 பேர் விடுதலை

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் 2வருடங்களுக்கு மேலாக மகசின், களுத்துறை சிறைகளில் அடைக்கப்பட்டு முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளான தோட்டத் துறையைச் சேர்ந்த எட்டு அரசியல் கைதிகள் டிசம்பர் 9ம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் நுவரெலியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலையானார்கள்.

அன்று விடுதலையானவர்களின் பெயர்கள் வருமாறு: பெரியசாமி ஜெயக்குமார் ( டிக்கோயா) பொன்னையா சந்திரகுமார் ( தரவளை தோட்டம் , டிக்கோயா) சுப்பு உதயகுமார்( சித்திரவத்தை, அட்டன்) வீரையா சண்முகநாதன்( சித்திரவத்தை, அட்டன்) ஆறுமுகம் முத்துவிநாயகர்( கிறிஸ்லர் பாம், கொட்டகலை) சின்னத்தம்பி தேவதாஸ்( வெலிஓயா, அட்டன்) வரதையா கமலநாதன்( ஏதன்சைட், கொட்டகலை) நல்லமுத்து ஜெயபிரகாஷ்( குடாஓயா, அட்டன்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு போதிய ஆதாரங்கள் எதுவும் இல்லை என்ற சட்டமா அதிபர் அக்டோபர் 25ம் திகதி அறிவித்திருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவு கிடைக்கவில்லை என்ற சாட்டில் இவர்களின் சிறைக் காலம் மேலும் தொடர்ந்தது.



டாக்டர் சாந்தகுமார்

இவ்வாறே இதே காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்ட அட்டன் சித்திரவத்தையைச் சேர்ந்த பிச்சைமுத்து சந்திரன், ஆறுமுகம் காளிமுத்து என்ற இருவரும் டிசம்பர் 9ம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் இவர்கள் இருவரும் குற்றப்பணமாக தலா ரூபா.5000 கட்ட நேர்ந்தது. சோலைமலை லோகநாதன் டிசம்பர் 11ம்திகதி நுவரெலியா நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

இங்ஙனம் கைது செய்யப்பட்டு முதலாளித்துவ அரசின் சிறைகளில் 18 மாதங்களுக்கு [illegible] உள்ளான ஐவர் ஏற்கனவே விடுதலையானது தெரிந்ததே.அவர்களின் பெயர் விபரம் வருமாறு: அழகப்பன் சாந்தகுமார்( அட்டன்), சிவனடியான் (டிக்கோயா), தேவபதி சவரிமுத்து( டிக்கோயா), தேவசகாயம் பிரான்சிஸ் ( நாவலப்பிட்டி). ஐயம்பிள்ளை(டிக்கோயா)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் பிரச்சார இயக்கத்தை சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட கழகமும் , அதன் தொழிற்சங்க அமைப்பான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் முன்னெடுத்து வந்தது. இவர்களை விடுதலை செய்யக் கோரி 1995 ஏப்பிரல் 8ம் திகதி அட்டன் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் [illegible] கொண்ட நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக் குழு சோசலிச சமத்துவக் கட்சியின் வழிநடாத்தலின் கீழ் பல போராட்டங்களை நடாத்தியது. 1995 ஆகஸ்ட் 10ம் திகதி அட்டன் பஸ் நிலையத்தில் இவர்களை விடுதலை செய்யக் கோரி மறியல் போராட்டமும் தோட்டங்கள் பூராவும் கையெழுத்துச் சேகரிக்கும் பிரச்சார இயக்கத்தையும் சோ.ச.க.நடாத்தியது. இந்த கையொப்ப இயக்கத்துக்கு ஆதரவாக 2000 தொழிலாளர்கள் கையொப்பம் இட்டதோடு சோசலிச சமத்துவக் கட்சி பங்கு கொண்ட சகல வேலைநிறுத்தப் போராட்டங்களிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கோரும் கோரிக்கை முக்கிய இடத்தை வகித்தது. அத்தோடு இந்த அரசியல் கைதிகள் எண்மரின் பேரில் சோசலிச சமத்துவக் கட்சி ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்திருந்ததோடு இவர்களின் சார்பில் சட்டத்தரணிகளான திருவாளர்கள் இரத்தினவேல், இராஜகுலேந்திரன், சமரவீர ஆகியோர் ஆஜராகி வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ அரசுக்கு எதிராக நேருக்கு நேர் நடாத்தும் போராட்டம்

11ம் பக்கத் தொடர்ச்சி

அமைச்சு அல்ல என்பது இந்த ஒரு சம்பவத்தின் மூலம் போதுமான மட்டும் தெளிவாகி உள்ளது.

மாலைதீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்யும்படி நெருக்கும் முகமாக கடந்த ஏப்பிரலில் நீர்கொழும்பில் இருந்து மீன்பிடி அமைச்சு வரை சுமார் ஆயிரம் மீனவர்கள் ஊர்வலம் நடாத்த முயன்ற வேளையில் அதனை முதலாளிகள் அல்ல அவர்களின் பொதுஜன முன்னணி அரசாங்கமே பொலிசாரைக் கொண்டு கலைத்தது. கைதாகியுள்ள மீனவர்களின் குடும்பங்களின் பிரச்சாரங்களுக்கு மத்தியில் ஒரு சிறு உதவியை வழுங்கி வந்த அரசாங்கம் அதையும் கூட வெட்டியதன் மூலம் மீனவக் குடும்பங்களை சங்கடத்துக்குள்ளாக்கியது. முதலாளிமாரின் செயற்பாட்டை விட அரசாங்கத்தின் செயற்தபடு ஏதேனும் விதத்தில் வேறுபட்டு உள்ளதா ?

“குறிப்பிட்ட கடல் எல்லையைத் தாண்டி எமது மீனவர்களை மீன்பிடிக்கும்படி அரசாங்கம் ஒரு போதும் கட்டளை இடவில்லை என “பிரதி அமைச்சர் கூறியுள்ளார். இதன் உண்மை நிலைமை என்ன ?

## தேசிய அரச எல்லை

தரையை மட்டுமல்ல சமுத்திரம் கடலையும் தேசிய அரசுகள் மூலம் கோடு கீறி பிரித்துக் கொண்டுள்ளனர். இது இன்று வளர்ச்சி கண்டுள்ள பூகோள ரீதியான பொருளாதார முறையின் எதிரில் முறைகேடான தாகியுள்ளது. இப்போது வர்த்தக, நிதி மூலதனம் மட்டுமன்றி உற்பத்தி மூலதனமும் தமது இலாபத்தை அதிகரிதத்துக் கொள்ளும் பொருட்டு தேச எல்லைகளைத் தாண்டி உலகம் பூராவும் சஞ்சரிக்கின்றது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களாக திரண்டுகொள்ள இந்தப் பெரும் மூலதனச் சொந்தக்காரர்களை இலங்கை , இந்தியா போன்ற நாடுகளுக்கு தருவிக்க முதலாளித்துவ ஆட்சியாளர்கள் அவர்களுக்கு சகல சலுகைகளையும் வழங்கி அழைப்புவிடுக்கின்றார்கள் . அந்தந்த நாடுகளின் இயற்கை வளங்கள் மட்டுமன்றி உழைப்பு வளங்களையும் மனம்போனபடி சுரண்ட இவர்கள் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வாய்ப்புக்களை வழங்குகிறார்கள். ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு தேசிய எல்லைகளோ அல்லது கடல் எல்லைகளோ பொருந்தாது.

இந்தச் சகல வரையறைகளும் தமது உயிரைப் பிடித்துக் காக்கும் பொருட்டு உழலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கே செல்லபடியானவையாக உள்ளன. தமது நாடுகளில் தொழில் இல்லாமலோ அல்லது தூண்டிவிடப்ப்ட்டுள்ள இனவாத அல்லது வேறு வகையிலான மக்கட் படுகொலைகள் காரணமாகவோ பிறந்த மண்ணையும் விட்டு உயிர்தப்பும் முயற்சியாகச் செல்லும் ஏழைமக்களுக்கோ அல்லது புலம்பெயர்ந்த மக்களுக்கோ அந்தந்த நாடுகளின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இடம் அளிக்கிறார்களில்லை . அளப்பரிய துயரங்களுக்கு உள்ளாக்குகின்றார்கள்.

ஏழை மீனவர்கள் இந்த தேசிய அரச எல்லை பொறிக்குள் அகப்பட்டுத் தினமும் நசுங்குபவர்கள். சமுத்திரத்தின் மத்தியில் அலைப் பிரளயங்களைக் கணக்கிட்டு அரச எல்லைகள் பிரிக்கப்படவில்லை என்பைத அறியாதார் இல்லை. சிறைத்தண்டனை அனுபவிப்பதற்காக அவர்களைக் கைது செய்வது எந்த எல்லைக்கோடு போட்டதால் என மீனவர்கள் அறியார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை அறிவார்கள். காண்கிறார்கள். அது ஒரே ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான பிரமாண்டமான ட்ரோலர்கள் இந்த கடல் எல்லையின் இரு புறத்திலும் மீன்பிடிப்பதை சகலரும் அறிவார்கள். அந்தப் படகுகளுக்கு லைசென்ஸ் வழங்கி இருப்பது ஏழை மீனவர்களை சிறைகளில் தள்ளும் முதலாளித்துவ அரசாங்கங்களேயாகும். பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதன் பிரதி அமைச்சர் மில்ரோய் பெர்னாந்துவும் பேணுவது இந்த விநோதமான அநீதியான நிலைமையையேயாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி போராடுவது இந்த முறையற்ற தேசிய அரச எல்லைகளைத் தாண்டி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அனைத்துலகவாத ரீதியில் ஐக்கியப்படுத்துவதற்கேயாகும். அந்த ஐக்கியத்தின் அரசியல் இலக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் சோசலிச குடியரசின் மூலம் இருந்துவரும் முதலாளிததுவ ஆட்சிகளை ஒழித்துக் கட்டுவதாகும். இந்தியாவில் சிறைவைக்கப்பட்டிருந் தவர்களும் இன்னமும் சிறை இருப்பவர்களுமான மீனவர்களை விடுதலை செய்யும் பொருட்டு இலங்கையிலும் இந்தியாவிலும் மீனவர்கள் உள்ளடங்கலான பொதுமக்களை அணிதிரட்டி சோசலிச சமத்துவக் கட்சி நடாத்திய பிரச்சாரத்தின் இலக்கு அதுவேயாகும். அந்தந்த அரச எல்லைகளுக்குள் ஆட்சி புரிந்துகொண்டு பொதுமக்களை கசக்கி நசுக்கி பிழிந்து கொண்டு முதலாளிதத்துவ அரசாங்கங்களும் அவற்றின் அமைச்சர்களும் மீனவர்களின் பிரச்சினைகளைப் பற்றி சட்டை செய்யாதது மட்டுமன்றி அதையிட்டு அக்கறை காட்டி மீனவர்களை விடுதலை செய்ய போராடும் எமது அமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் திணிப்பதிலும் முதலாளிகளுடன் சேர்ந்து ஆத்திரமூட்டும் தாக்குதல்கைளைத் தயார் செய்வதற்கும் தயாராகுவது ஒன்றும் புதுமையல்ல.

சிறைக்கூடங்களின் தீர்க்கமான நிலைமைக்கு முகம் கொடுத்துள்ள மீனவர்களைக் கேவலமான முறையில் தாக்கியும் அவர்கள் முகம் கொடுக்கும் சித்திரவதைகளை நியாயப்படுத்தியும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். எந்த ஒரு சிறைக்கைதிக்கும் சிறைகளுக்குள் சுக போகங்கள் உரித்தாகாததோடு இலங்கைச் சிறைகளில் போல் அல்லாது (இலங்கைச் சிறைகளுக்குள் சிறைக்கைதிகளுக்கு ஏதோ சர்வ சம்பத்தும் கிடைக்கும் தொனி அமைச்சரின் அறிக்கையில் தொனிக்கின்றது.) வேறு நாடுகளின் சிறைகளில் அந்நாடுகளில் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதால் எமது நாட்டு மீனவர்களுக்கு மட்டும் பாலும் சோறும் கொண்ட உணவு தரும்படியும் அவர்களை பல்வேறு பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம் எனவும் நாம் நெருக்க முடியாது.”

மீனவர்களைக கைது செய்ததும் அவர்களைப் பட்டினி போட்டதும் நோய் நொடிகளுக்கு உள்ளாக்கியதும் பலவந்தமாக வேலை வாங்கியதும் (அந்தமான் தீவில் இருக்கும் போர்ட் பிளேயர் சிறையில் உள்ள கைதிகளிடம் பயர் பிளேம் என்ற பொலிஸ் அதிகாரி வேலைவாங்குவது போல்) பிரதி அமைச்சரினால் நியாயப்படுத்தப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தினால் கைது செய்யப்படும் மீனவர்களுக்குக் கிடைக்கும் பராமரிப்புக்கள் இதற்கு ஒன்றும் குறைந்ததில்லை என்பதை அந்தக் கணிப்புக்களை ஒழுங்கு செய்யும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர் அறிவார். அதுமட்டுமன்றி எதிர்பார்க் கக்கூடிய விதத்தில் சிங்களம் பேசாத-வேறு நாடுகளைச் சேர்ந்த மீனவர்கள் அகப்படும்போது அவர்கள் கடற்படையினால் புலிகளாகக் கணிக்கப்பட்டு சமுத்திரத்தின் நடுவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களும் பலதடவை இடம் பெறுகின்றன. அத்தகைய காட்டுமிராண்டி விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு அரசாங்கம் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களுக்கு கிடைத்த கவனம் குறித்து வேறு என்ன சொல்ல முடியும்?

“மீன்பிடி அமைச்சரும் தாமும் தமது அதிகாரிகளும் தொழிற்பட்ட விதத்தினை பகிரங்கமாக குறிப்பிட்டு பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடாது போனாலும் மீனவர்கள் அதைப் பற்றி நன்கு புரிந்து கொண்டுள்ளார்கள் ” எனவும் பிரதி அமைச்சர் கூறிக் கொண்டுள்ளார்.

இது கைது செய்யப்பட்டு துயருண்ட மீனவர்கள் சம்பந்தமாகத் தாமும் தமது அரசாங்கமும் எதுவும் செய்யவில்லை என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்வதாகும். இந்த மீனவர்கள் சம்பந்தமாக அணுவளவு தன்னும் ஏதும் செய்திருந்தால் அதைப் பற்றி புதினப் பத்திரிகைகளை மட்டுமன்றி ரேடியோ, தொலைக்காட்சி போன்ற எலெக்ரொனிக் சாதனங்களையும் பயன்படுத்தி நாட்கணக்காக அல்ல கிழமைக் கணக்காக பிரச்சாரம் செய்வது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் எந்த ஒரு அமைச்சரும் கைவிட்டது கிடையாது என்பதை அறியாதார் கிடையாது. ஆனால் பிரதி அமைச்சருக்கு பகிரங்கமாகக் கூறவோ அல்லது பிரச்சாரம் செய்யவோ எதுவும் இருந்தது கிடையாது. அதற்குக் காரணம் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் தொடர்பாக அவரோ அல்லது அவரின் அமைச்சரோ அல்லது அவரின் எந்த ஒரு அதிகாரியோ செய்தது என்று எதுவும் இல்லாததே காரணமாகும். உண்மை அதுதான்.

இந்த உண்மையின் பின்னால் உள்ள நிலைமையை ஆராய்ந்து பார்ப்பின் அந்த உண்மை ஊர்ஜிதமாகும். இலங்கை கடற்படையினால் கைது செய்யப்பட்ட இந்திய அல்லது வேறு நாட்டின் மீனவர்களை உடன் விடுதலை செய்வதற்கான விதிமுறைகளை பொதுஜன முன்னணி அரசாங்கம் கடைப்பிடிக்கின்றதா? அவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்துக் கொண்டுள்ள நிலைமைக்குள் அவர்களின் அவசியங்களையிட்டு அரசாங்கம் அக்கறை காட்டுகின்றதா? கிடையாது. அத்தகைய ஒரு காட்டுமிராண்டி அரசாங்கம் தமது நாட்டின் ஏழை மீனவர்களைப் பற்றி காட்டும் அக்கறை அதில் இருந்து வேறுபட்டது அல்ல.

சோசலிச சமத்துவக் கட்சி எல்லையோ அல்லது மொழி வேறுபாடோ அல்லது இனப் பாகுபாடுகளோ இல்லாது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் அவசியங்களின் பேரில் நின்று வருகின்றது. போராடுகின்றது. அவ்வாறே இலங்கை மீனவர்கள் சார்பில் இந்திய மீனவர்கள் உட்பட்ட மக்களை அணிதிரட்டவும் வழக்கறிஞரின் சேவையைப் பெறவும் மட்டுமல்ல இந்திய அரச அலுவலகங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் முட்டுக் கட்டைகள் ஏற்பட்டதில்லை. முட்டுக் கட்டைகளாக பெரிதும் அருமையாக முழைத்தது “இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது மீனவர்கள் விடுதலை செய்யப்படாதது ஏன்?” என்ற இந்தியரின் கேள்வியேயாகும். அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியது பொதுஜன முன்னணி அரசாங்கமேயாகும். அதன் பிரதி அமைச்சர் என்ற முறையில் மில்ரோயி பெர்னாந்து. இந்த தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய , மாலைதீவு , மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த மீனவர்களின் அவசியங்களின் பேரிலும் விடுதலையின் பேரிலும் சோசலிச சமத்துவக் கட்சி நடாத்தும் போராட்டம் இந்நாட்டு மீனவர்கள் உட்பட்ட பொதுமக்களின் ஒத்துழைப்போடு முன்னெடுத்துச் செல்லப்படும்.

கைது செய்ய நடவடிக்கை எடுத்தல், சொற்ப உதவிநிதியையும் வெட்டுதல் , மீன்பிடிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை, வீடுகளில் இருந்து வெளியேற்றல் , பெரும் மீன்பிடி முதலாளிகளுக்கு சலுகைகளை வழங்குதல் முதலியவற்றை பொதுஜன முன்னணி அரசாங்கம் மீன்பிடி ஒடுக்கப்படும் மக்களுக்கு ஆற்றியுள்ள “சேவை”களின் பின்னால் வைப்போம். அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு மாதங்கள் கழிவதற்குள் -1994 அக்டோபர் 4ம் திகதி பொதுஜன முன்னணி அரசாங்கம் அமெரிக்கன் குரல் ஒலிபரப்பு நிலையத்தை தமது மீனவக் கிராமத்தில் இருந்து அப்புறப்படுத்தும்படி கோரி பிரச்சாரத்தில் ஈடுபட்ட மீனவர்களுக்கு எதிராக பொலிசாரைக் கொண்டு நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலும் தாக்குதலிலும் பெனட் பெர்னாந்து என்ற மீனவர் கொலையுண்டதோடு இன்னும் பலர் காயமடைந்தனர் . இதை எந்த ஒரு மீனவரும் என்றும் மறந்துவிட முடியாது.இவை இடம்பெற்றது மீன்பிடி பிரதி அமைச்சர் மில்ரோய் பெர்னாந்துவின் தேர்தல் தொகுதியிலானதால் மீனவர்களுக்கு அவர் நடாத்தும் பயங்கர சேவைகளும் நினைவை விட்டு அகலாது.

பிரதி மீன்பிடி அமைச்சர் தமது அறிக்கையை பின்வருமாறு முடித்துள்ளார். “இப்போது இந்தியாவில் சிறைவைக் கப்பட்டுள்ள மீனவர்களை இலங்கைக்குத் தருவிப்பது சம்பந்தமாக மேலும் கலந்துரையாடல் நடாத்த தாமும் எதிர்வரும் மாதத்தின் முதல் வாரத்தில் இந்தியாவுக்குச் செல்ல முடிவு செய்துள்ளதாக” கூறி முடிக்கின்றார். அவர் “கலந்துரையாட” செல்ல “முடிவு” செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின், சிறப்பாக இலங்கையின் மேற்குக் கரையோரம் பூராவும் பரந்து வாழும் மீனவ மக்களின் உதவியின் அடிப்படையில் சோசலிச சமத்துவக் கட்சி அதனது இரண்டு அரசியல் குழு அங்கத்தவர்களை ஹோட்டல்களில் தங்கிக் கழித்துக் கலந்துரையாடுவதற்கு அல்லாது மீனவர்களை விடுதலை செய்வதற்காக இந்தியாவுக்கு அனுப்பியதை அறிவிப்பதில் சோசலிச சமத்துவக் கட்சி பெருமைப் படுகின்றது. அதன் பெறுபேறாகவும் அதன் விளைவாகவும் கைது செய்யப்பட்டிருந்த மீனவர்களில் ஒரு பிரிவினரை விடுதலை செய்வதில் சோசலிச சமத்துக் கட்சி வெற்றிகண்டுள்ளது. முதலாளித்துவ அரசாங்கங்களின் அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் மேன்முறையீடு செய்வதற்காக பாராளுமன்றத்துக்கும் அமைச்சுக்களுக்கும் அலைந்திருந்தால் இது இங்ஙனம் நடைபெற்றிராது என்பது உறுதி. எமது பிரச்சாரம் மீண்டும் ஒரு தடவை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் வசம் மூடப்பட்டதும் கட்டவிழ்க்கப்படாததுமான பிரமாண்டமான சக்தி இருந்து கொண்டுள்ளதையும் சரியான தலைமையின் கீழ் அது கையாளப்படுமானால் சகல மக்கள் அவசியங்களையும் இட்டு நிரப்பும் சக்தி அதற்கு உள்ளதையும் காட்டிக் கொண்டுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களிடம் உள்ள இந்த உயிர்த்துடிப்பான சக்தியை வெளிப்படுத்துகின்றது.

சோசலிச சமத்துவக் கட்சி அதன் முன்னணியில் நின்று மீனவர் நடவடிக்கைக் குழுக்களை நிறுவியது முதலாளிததுவ அமைச்சரதும் முதலாளித்துவ அரசாங்கத்தினதும் பின்னால் அலைந்து திரிந்து வயிறளப்பதற்கு அல்ல. அதற்கான அமைப்புக்கள் சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா. ஜே .வீ.பி. போன்றவையாகும். சிறப்பாக மீனவ மக்கள் பற்றிப்பேசும் சோசலிச சமத்துவக் கட்சியும் மீனவ நடவடிக்கைக் குழுக்களும் போராடுவது முதலாளித்துவம் தொடுக்கும் சகல வகையிலான தாக்குதல்களுக்கும் எதிராக அவர்களின் உரிமைகளை வெற்றி கொள்வதற்காகும். இந்த மீனவ நடவடிக்கைக் குழுக்கள் கைது செய்தல்களுக்கு எதிராக மட்டுமன்றி வீடில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை சுகாதார, கல்வி பிரச்சினை, அவர்களுக்கு அவசியமான கடன் போன்ற சகல பிரச்சினைகளிலும் போராடுகின்றது. அதுமட்டுமன்றி ஏனைய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுடன் இணைந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் அனைவரினதும் உரிமைகளுக்குப் போராடுவதில் இணைந்து கொள்கின்றது. ஒடுக்கப்படும் மீனவர்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையின் கீழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தொடுக்கப்படும் தாக்குதலின் ஒரு பாகமாகும்.

முறைகேடான தேச எல்லைகளதும் இனவாத யுத்தங்களதும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் தமது உரிமைகளை காக்கவும் இலங்கை-இந்திய மீனவர்களிடையே போராட்டத்தில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப சோசலிச சமத்துவக் கட்சியும் மீனவ நடவடிக்கைக் குழுக்களும் போராடுகின்றன. மீனவர்களை விடுதலை செய்யப் போட்ட அத்திவாரம் அதற்கு வழிகாட்டியாக விழங்கும். இது முழு இந்தியத் துணைக் கண்டத்தினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களையும் ஐக்கியப்படுத்தும் போராட்டத்தின் ஒரு பாகமாகும்.

தொழிலாளர்-விவசாயிகளின் ஒரு அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதும் சமூக சமத்துவத்தினை ஊர்ஜிதம் செய்யும் ஒரு வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதும் ஒடுக்கப்படும் மீனவ மக்களதும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரே வழியுமாகும் எனவும் நாம் கருதுகின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கம்

3ம் பக்கத் தொடர்ச்சி

சேவை ஆகியனவாக வழங்கும்படி நெருக்கிப் பெற்ற வந்தன. ஆனால் இன்று உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்ட நிலைமையில் இலாப உழைப்பும் வளங்களைச் சூறையாடலும் உயர்ந்த மட்டத்தில் நடைபெறுகின்றன.

ஒரு நாட்டில் இருந்து பிறிதொரு நாட்டுக்கு உற்பத்தியை நகர்த்தும் வல்லமை கொண்ட ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளால் உலக வர்த்தகம் நடாத்தப்படுகின்றது. இவ்விதம் உலக ரீதியில் தொழிற்படும் கம்பனிகளுடன் வேலைத்தல மட்டத்தில் , பிரிவு ரீதியில் , தேசிய ரீதியில் உறவுகொண்டுள்ள தொழிற்சங்கங்களால் முன்னர் போன்று பழைய பாணியிலான நெருக்குவாரங்கள் கொடுத்து ஏதேனும் ஒரு கோரிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியாது. இதனால் இந்தத் தொழிற்சங்கங்கள் இலாபகரமான உழைப்பு, வேண்டிய மட்டும் சுரண்டுவதற்கான வளங்களைக் கொண்டுள்ள முதலாளித்துவ வர்க்க வேலைத்திட்டத்துக்கு கட்டுப்பட்டுப் போயுள்ளன. யூ.என்.பி .தொழிற் சங்கங்கள் தொடக்கம் வேறு பல பச்சோந்தி வேடங்களைத் தாங்கியுள்ள தொழிற்சங்கங்கள் வரை கடைப்பிடித்துவரும் வேலைத் திட்டங்கள் ஊடாக இவை வெளிப்பாடாக இல்லையா?

வாயடிப்புக்களுக்குப் பேர்போன தொழிற்சங்க அதிகாரிகளின் தொழிற்பாடுகள் இ.தொ.கா. தொழிற்சங்கக்காரர்களின் தொழிற்பாடுகளில் இருந்து அணுவும் வேறுபட்டதல்ல. தனியார்மயத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் 40 தொழிற்சங்கங்களின் முன்னணி , பொதுஜன முன்னணி அரசாங்கம் - அரசே-அதாவது முதலாளித்துவ அரசே— அதை வைத்திருக்க வேண்டும எனக் கூறிக்கொள்கின்றது. ஆனால் அரசாங்கமோ அதை ஏற்றுக்கொள்ளவிலலை. அப்படியாயின் இதற்கு மேலான நடவடிகசை என்ன? இதைப்பற்றித் தீர்மானிக்க வேண்டாமா? உண்மையில் இன்று தொழிளாளர்கள் தனியர்மயமாக்கத்துக்கு எதிராகத் திரண்டு கொணடுள்ளனர். இந்த தொழிலாளர் எழுச்சியை அரசாங்கத்துடன் பேரம்பேசித் தீர்க்கும் நம்பிக்கைகளுடன் கட்டிப் போட்டு வைக்கவும் தொழிலாளர்களை விரக்திக்கு உள்ளாக்கவும் அதன் மூலம் தனியர்மயமாக்கல் தயாரிப்புக்களுக்கு அவர்களைக் கீழ்ப்படுத்திவிடுவதேயாகும். இதுவே தொழிற்சங்கத் தலைமைகளின் இன்றைய கைங்கரியமாக உள்ளது. உருக்குக் கூட்டுத்தாபனத்திலும் டெலிகொம்மிலும் அண்மையில் இடம்பெற்றவை இதை நன்கு சுட்டிக்காட்டி உள்ளன. யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் கீழ் இன்றுள்ள வேலைத்திட்டம் இதுவே.

சில சமயங்களில் தொழிற்சங்கத் தலைமைகள் வேலைநிறுத்தம் அல்லது வேறெந்த பிரச்சாரத்திலாவது இறங்குவதுண்டு. தொழிலாளர் கிளர்ச்சி அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் செல்லும் கட்டத்திலேயே அங்ஙனம் செய்கின்றனர். இவர்கள் போராட்டம் நடாத்துவதும் தொழிலாளரைக் கூட்டுவதும் இக்கோரிக்கை கிளர்ச்சி சகலதையும் தாக்கவும் அதை தைரியம் இழக்க வைக்கச் செய்யவுமேயாகும். இ.தொ.கா. தலைவர் தொண்டமான் ஆளும் வர்க்கத்தைச் சந்தித்து இதனைப் பகிரங்கமாகவே கூறிக் கொண்டுள்ளார்.

ஏனைய தொழிற்சங்கங்களும் சொல்லாமல் செய்வது இதை அல்லவா? பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கம் இத்தகைய ஒரு நிலைமையில் மிகவும் முக்கிய இலக்குடன் அமைக்கப்பட்டட ஒன்றாகும். அது தொழிலாளர்களது குறைந்த பட்சக் கோரிகைகள் அனைத்துக்கும் சார்பாக போராடுகின்றது. அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நலன்புரிச் சேவைகளை விருத்தி செய்யவும் உள்ளதை பாதுகாக்கவும் முன்நிற்கின்றது. ஜனநாயக உரிமைகளை பேணப் போராடுகின்றது. ஆனால் அத்துடன் மட்டும் நின்றுவிடுவதில்லை.

அனைத்துலக ரீதியில் செயற்படும் மூலதனத்துக்கு எதிராக போராட வேண்டிய நிலைமையின் கீழ் தொழிலாளரை அனைத்துலக ரீதியில் ஒருங்கிணைக்கவும் வேண்டிய நிலைமைகள் உருவாகி உள்ளன. எனவே அதற்காகவும் போராடுகின்றது. இப்போராட்டம் இ.தொ.கா., சீ.என்.யூ., ந.ச.ச.க.தொழிற்சங்கத் தலைவர்கள் ஏனைய நாட்டு தொழிற் சங்கத் தலைவர்களுடன் சேர்ந்து அனைத்துலகத் தொழிலாளர் ஐக்கியத்தை உருவாக்கிக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொண்டுள்ளதில் இருந்து அடியோடு வேறுபட்டது. பெ.தோ.கை.தொ.ச . நடவடிக்கை அனைத்துலக ரீதியில் தொழிலாளரைப் போராட்டத்துக்கு அணிதிரட்டுவதேயாகும்.

குறைந்தபட்சக் கோரிக்கையை வழங்குமாறு நிர்ப்பந்தம் செய்து, அதை முதலாளித்துவ அமைப்பினுள் வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கையை தொழிலாளருக்கு ஊட்டுவதற்கும் அவர்களை சிறைப்படுத்திவைப்பதற்கும் பெ.தோ.கை.தொ.ச.எதிரானது. ஏனெனில் தொழிளாளர்களுக்கு அந்த உரிமைகளை பேணி வைத்திருக்க முடியாத அளவுக்கு முதலாளித்துவ அமைப்புக்குள் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. இதனாலேயே சகல உரிமைகளையும் அழித்துவிடும் தாக்குதல்களை முதலாளித்துவம் இன்று ஆரம்பித்துள்ளது. எனவே தான் முக்கிய முதலாளித்துவ வர்த்தகங்களையும் அரச நிறுவனங்களையும் தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கும் வேலைத்திட்டத்தை செயல்படுத்த வல்ல தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர பெ.தோ.கை.தொ.ச. போராடுகின்றது.

அதே சமயம் பெ.கை.தொ.ச. தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் இளைஞர்களின் தேவைக்கான போராட்டத்துடன் ஒருங்கிணைக்கவும் போராடுகின்றது. தொழிலாளர் நடவடிகைக் குழுக்களைக் கட்டி எழப்புதல் அவற்றுள் ஒன்றாகும். அதனுள் இளைஞர்கள், ஒடுக்கப்படுவோரின் பிரதிநிதிகளை உள்ளடக்க அது போராடுகின்றது. தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் உரிமைகளுக்கான போராட்டமானது அரசியல் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது. மின்சாரசபை, உருக்குக் கூட்டுத்தாபன தொழிலாளர் போராட்டங்களில் இவை நிதர்சனமாகின. பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்னர் யூ.என்.பி. அரசாங்கத்தினால் பலப்படுத்தப்பட்ட அரச அடக்குமுறை இயந்திரத்தை மேலும் மேலும் உயிரூட்டி தொழிலார்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் பாவித்து வருகின்றது. இனவாத யுத்தம் அரச இயந்திரத்தை வலுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றது. தொழிலாளர் - ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டங்கள் பயங்கரவாதத்துக்கு உதவுபவை என அறிவிப்பது அவற்றுக்கு எதிராக இனவாதத்தைத்தூண்டி அன்று யூ.என்.பியும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கமும் செய்யும் கேவலமான செயலாகும். தொழிலாளர் -ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்தி அவர்கள் தமது உரிமைகளுக்காக போராடுவதைத் தடுக்க அரசாங்கம் கையாளும் ஒரு கொடிய கருவியாகும். ஏகாதிபத்திய அரசாங்கங்களும் நிறுவனங்களும் தொழிலாளரை அடக்கிநசுக்கித் தருமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்துள்ளன. அரசாங்கமும் ஆளும் வர்க்கமும் இராணுவ சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை அபிவிருத்திசெய்து வருகின்றன. அந்த அடக்கு முறையை வேலைத் தலங்களுக்குள் கொண்டு வந்துள்ளன. இலங்கை மின்சாரசபை, உருக்குக் கூட்டுத்தாபனம், பியகம அன்சன் லங்கா கம்பனி, கட்டுநாயக்க கொரியா-சிலோன் கம்பனிகளில் இந்த நிலைமை நன்கு அம்பலமாகியது.

இந்நிலைமையின் கீழ் தொழிலாளர் உரிமைகளை வென்டுக்கும் போராட்டம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தோற்கடித்து, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதுடன் இணைந்துகொண்டுள்ளது. பெ.கை.தொ.தொ.ச . இந்த அரசியல் பிரச்சினையைத் தொழிலாளர் முன் வெளிப்படையாக எடுத்துக் கூறுகின்றது. பரந்த மட்டத்தில் இன்று தொழிலார் வர்க்கத்தின் போராட்டம் அமைய வேண்டியுள்ளது அவசியம்.

பெ.கை.தொ.தொ.ச. இரண்டாவது ஆண்டறிக்கையில் இந்த போராட்ட வரலாற்றறிக்கை அடங்கிக் கொண்டுள்ளது. ஏற்கனவே நாம் கூறியுள்ளவாறு தோட்டத் தொழிலாளர் போராட்டங்களில் அது முக்கிய இடத்தை வகித்ததோடு விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் என கைது செய்யப்பட்ட தோட்ட இலைஞரகளை விடுதலை செய்ய நடாத்திய போராட்டமும் மிக முக்கியமானது. இ.தொ.கா. தொண்டமான், மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் , இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செல்லச்சாமி என்போர் கைது செய்யும் பட்டியல்களை வழங்கியதாக பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். ஏனைய தொழிற்சங்கங்கள் இக்கைது செய்தல் குறித்து வாய்மூடி மௌனம் சாதித்தன. இந்த இளைஞர்களை விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்களாக பேர்சூட்டி வழக்குத் தாக்கலான வேளையில் தமக்கு எதிராக அடக்குமுறை திரும்பலாம் என்ற அச்சத்தில் சில சட்டத்தரணிகள் ஆஜராகத் தயங்கினர். எனினும் சோ.ச.க. பகிரங்க கூட்டங்கள், மறியல்கள், சுவரொட்டிகள், கையொப்பம் சேகரிப்பு மூலம் போராட்டத்தை முன்னெடுத்தது. ஜனநாயக உரிமைகளுக்காக முன்நின்ற வழக்கறிஞர்கள் இக்கைது செய்தல்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்த பெ.தோ.கை.தொ.ச.வுக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் உதவி வழங்கினர்.

பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் கிளைகளை சகல வேலைத்தலங்களிலும் அமைக்கவும் தொழிற்சங்கங்களின் துரோகத் தலைமைகள் நடாத்தும் காட்டிக் கொடுபபுக்களை வென்றெடுத்தவாறு தொழிலாளர் வர்க்க உரிமைகளை காக்க முன்நோக்கிச் செல்வது இன்று மிக முக்கிய நடவடிக்கையாகும். ஜனவரி 19ம் திகதி பெ.கை.தொ.ச. நடாத்தும் மாநாட்டுக்கு அச்சங்க அங்கத்தவர்களை மட்டுமல்லாது மற்றும் வேலைத்தல ஊழியரும் பங்குகொள்ள இடமளிப்பதென அச்சங்கம் தீர்மானித்துள்ளது. அதில் கலந்து கொண்டு, முக்கிய தீர்மானங்களை எடுக்க இணையுமாறு நாம் உங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

## 1997- உலகம் பூராவும் சமூகக் குமுறலின் ஆண்டு...

5ம் பக்கத் தொடர்ச்சி

தலைவர்களில் இருந்தும் சமசமாஜ, கம்யூனிஸ்ட்கட்சி வேலைத் திட்டங்களில் இருந்தும் விலகி சகல வேலைத்தலங்களிலும் தொழிலாளர் நடவடிக்கைக குழுக்களை அமைக்குமாறு நாம் வேண்டுகின்றோம். அவற்றில் ஒடுக்கப்படும் மக்களதும் இளைஞர்களதும் பிரதிநிதிகளை இணைப்போம். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் இயலாமை பற்றிப் பரப்பப்படும் பொய்வதந்திகளை உடைத்து அப்போதுதான் அவர்களால் போராட முடியும்.

தொழிலாளர்கள், ஒடுக்கப்படுவோர், இளைஞர்கள், தனியார்மயத்தில் இருந்தும், தொழில் அற்ற, வாழ்க்கைத் தர அழிவு நிலையில் இருந்தும் , நலன்புரிச் சேவை வெட்டில் இருந்தும் இனவாத யுத்தத்தில் இருந்தும் இராணுவமய-பொலிஸ் பயங்கரத்தில் இருந்தும் தம்மைக் காத்துக்கொள்ளக் கூடிய ஒரு அரசாங்கத்தை அப்போதுதான் அமைத்துக் கொள்ள முடியும். அவ்வாறே இலாபம் பெறுவதை இலக்காகக் கொண்ட முதலாளிகளின் அடிப்படைக் கைத்தொழில்கள் , நிறுவனங்களை மக்களின் அவசியங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு அவற்றை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் மறுசீரமைப்பது அப்போது தான் சாத்தியமாகும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை அகற்றி, தொழிலாளர்-ஒடுக்கப்படும் -இளைஞர்களின் அவசியங்களை இட்டுநிரப்பும் தொழிலாளர்கள்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதற்கு மக்கள் இயக்கத்தை அணிதிரட்டுவது இலங்கையினுள் ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சிங்கள-தமிழ் பேசும்மக்கள் சமாதானமாக ஒன்றிணைந்து வாழ்வது என்பது சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு அரச்ாங்கமாக தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதன் மூலமே சாத்தியமாகும்.

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அணிதிரட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கு சரியான ஒரு தலைமையை இலங்கையினுள் வழங்குவது நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையாக அமைக்கப்பட்டுள்ள இக்கட்சியேயாகும். 1997 முதலாளித்துவ வர்க்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தினை ஒழுங்கு செய்வதற்கு இராட்சத வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை வழங்க சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள். அதன் பத்திரிகையான தொழிலாளர் பாதை பத்திரிகையை வாசியுங்கள். இளம் சோசலிஸ்ட் இயக்கத்தில் சேருங்கள்.


பெருந்தோட்ட, கைத்தொழில்
தொழிலாளர் சங்கம்

**ஆண்டுப் பொதுக் கூட்டம்-1997**

ஜனவரி 19 காலை 10மணி

**நகரசபை மண்டபம், அட்டன்**




சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

**சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்**

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . . திகதி . . . . . . . .

*இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி*
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்ப்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.